Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஒக்டோபர் 20 - 26, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 933



## கந்த சஷ்டி விரதத்தின் மகிமை

மும்மலங்களை அழித்த முருகப்பெருமானின் விரதம். ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள். ஐப்பசித் திங்கள் சதுர்த்தசித் திதியில் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்களும் கந்தப் பெருமானை நினைத்து வழிபட்டு விரதம் அனுஷஷ்க்கப்படுகின்றது. உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகின்றது. மிளகுகளை விழுங்கி, பழம்மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கர்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்குவார்கள். முருகனுடைய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதானமானவையாகும். கந்த சஷ்டி விரதம் தொடர்ந்து ஆறு வருடங்களும், கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும் வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வதால், என்னவென்று சொல்ல முடியாத சாந்தி,மனஅமைதி, நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர். விரதம் முடிவுற்ற அன்று முருகன் ஆலயத்தில் சூரன் போர் நடைபெற்று, மறுநாள் விரதம் அனுஷ்டித்த அனைவரும் பாறணை பண்ணி விரத பூசையை நிறைவு செய்கின்றனர். பாறணை பண்ணும் அன்று ஆறு பேருக்கு அன்னதானம் வழங்கி உட்கொள்ள வேண்டும்.

## பெறவேண்டிய திருமுழுக்கு !

ஆன்மீகம்

நான் பெறவேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறேன் என்னும் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அவரது சீடர்கள் வியப்படைந்தி ருப்பர். ஏனென்றால் யோர்தான் ஆற்றில் பலரும் பார்க்கும் வண்ணமே இயேசு திருமுழுக்கு யோவானால் திருமுழுக்கு வழங்கப்பட்டார்.

நமது வாழ்விலும் இரண்டு திருமுழுக்குகள் இருக்கின்றன. நாம் பிறந்தபோது நாம் பெற்ற திருமுழுக்கு முதலாவது. அத்திருமுழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளைகளானோம், திருச்சபையின் உறுப்பினர்களானோம், ஞானத்தைப் பெற்றுக்கொண்டோம். ஆனால், இன்னொரு திருமுழுக்கும் நாம் பெறவேண்டும். அதுதான், தூய ஆவியின் வல்லமை. அந்த வல்லமையால் நாம் இறைவனுக்கு, இயேசுவுக்கு சான்றுகளாய் வாழ வேண்டும். ஒருவேளை துன்பங்களை, தோல்விகளை சந்திப்பதும் அந்த சான்று பகர்வதில் அடங்கலாம். இந்தத் திருமுழுக்கு நமக்கு மன நெருக்கடி தரலாம். ஆனால்இ இயேசுவைப் போல நாமும் உறுதியாய் நிலைத்து நின்று சான்று பகர்வோமா!

உமது பாடுகளாலும், சிலுவைச் சாவாலும் எங்களுக்கு மீட்பு வழங்கிய இயேசுவே, நீர் பெற்றுக்கொண்ட இரண்டாவது திருமுழுக்குக்காக உம்மைப் போற்றுகிறோம். எங்கள் வாழ்விலும் நாங்கள் எங்கள் முதல் திருமுழுக்கில் வழங்கிய வார்த்தைப்பாடுகளைத் தொடர்ந்து வாழ்ந்து, இரண்டாவது திருமுழுக்கு என்னும் சான்று பகர்வோமாக.

## அல்லாஹ்வின் அருட்கொடை

உடல் நலம் என்பது அல்லாஹ்வின் அருட்கொடையாக மாத்திரமின்றி அவனது அமானிதப் பொருளாகவும் இருக்கிறது. அதனை நாம் பெறுமதி வாய்ந்ததாக பேணிப் பாதுகாக்க வேண்டும்.

ஒரு வாசிகசாலையில் நுழையும் சின்னஞ்சிறிய புழுவானது அவ் வாசிகசாலையில் உள்ள அனைத்துப் புத்தகங்களையும் அளித்துவிடுவது போல எமக்கு ஏற்படும் ஒரு சிறிய நோயே நமது முழு வாழ்க்கையும் சீரழித்துவிட முடியும். ஒருவருடைய தேகாரோக்கியமே அவர் தனது மதக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமாகிறது. அல்லாஹ்வின் உண்மை விசுவாசிகள் உலக வாழ்க்கையில் உன்னத கருமங்களை நிறைவேற்றவேண்டியுள்ளது.

அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகிறான். மறைவாகவும், வெளிப்படையாகவும் அவன் தன் நி.·.மத்களை அருட்கொடைகளை உங்கள் மீது பொழிந்திருக்கிறான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா?

அல்குர ஆன் 31:20

ஆகவே நாம் நமது தேகாரோக்கியத்தில் தினமும் அக்கறை கொள்வோம். அது அல்லாஹ்வின் அருட்கொடை.

**எம்.சி.கலீல், கல்முனை-5**

## வாசகர் சாலை

### வசந்தம் வீசிட...

மக்களுக்குச் சென்றுசேர வேண்டிய விடயங்களை ஒன்றுசேர வழங்குவதில் நீ முன் நிற்கிறாய் என்பதையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். தேவை, காலமறிந்து எதையும் வழங்கி வருகின்றாய். சிந்திக்கவும், அதன் மூலம் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளவும், தெரியாத பலஅரிய முக்கிய தகவல்களை வாரி வழங்குகின்றாய். இன்னும் பக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி சிறப்புற அமைய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

**ப.பைரவி, யாழ்ப்பாணம்.**

### பாராட்டுக்கள்

காலத்தால் வெல்ல முடியாத பல உண்மைகளை நடுநிலைமையாக நீ வழங்கி வருகின்றாய். எந்த ஒரு விடயத்தையும் நாசூக்காகக் கையாண்டு மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றாய். நீ இன்னும் சிறப்பாக வரவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். உனக்கு எனது பாராட்டுக்கள்.

**க.துரோணர், வவுனியா.**

### சீர் திருத்த வேண்டியவை

பல்சுவை அம்சங்கள் பல அறிவாக சிந்தையில் வெளிப்படுத்துகின்றது. முரசே நீ அகம் மகிழவும், புறம் மகிழவும் எம்மை வைக்கின்றாய். கடந்த கால நிகழ்வுகளை உயிரோட்டமாய் எடுத்துரைக்கின்றாய். இருந்த போதும் உன்னில் இடம்பெறும் தொடர்களைக்




குறைத்து சமூகத்துக்கு வேண்டிய நிறைய அம்சங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். கல்வி, யாழ்ப்பாண சமூகத்தை ஒன்றிய கட்டுரைகளை நீ பிரசுரிப்பதில்லை என்ற கவலை எனக்கு நிறையவே இருக்கின்றது. எனவே இதை சீர் திருத்திக்கொள் கொள்வாய் என்று நம்புகின்றேன்.

**தியா, சுன்னாகம்.**

## கவிதைப் போட்டி இல.933



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.10.2011

**கவிதைப் போட்டி இல. 933 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**

**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### குடை

ஆறறிவு மனிதா
உனக்கு மட்டுமல்ல
கொட்டும் மழையில்
நனையாமல்
தப்பிக்க எமக்கும்
குடை அவசியம்
தேவை.

**சு.ஜெயரூபன், பருத்தித்துறை.**

### பரிதாபம்

மழைக்கு ஒதுங்க
எமக்குக் குடை...
பாவம்
ஆறறிவு ஜீவன்கள்
மரத்தினடியில்
அகதிகளாய்...

**ஆஷிகா, கொழும்பு-12**

### பிரிவினை

ஐந்தறிவு ஜீவன்கள்
ஒரு குடை நிழலில்
ஆறறிவு படைத்தவனோ
என்றும்
பிரிவினை வெயிலில்.

**அ.சந்தியாகோ, கண்டி**

### விரிகுடை

உயிருள்ள பூனைகளே
உங்களுக்கு -நல்ல
உயிரற்ற வேலி
விரிகுடை - அது
நிழல் தரும்

**ஜிந்து, இடிமன் கிண்ணியா-05**


### என்ன நக்கலா?

இது காலி முகத்திடலா?
நாங்கள்
கள்ளக்காதலர்களா?
ஐயகோ!!
எலிப்பசியால் இந்த
ஏக்கம்!!

**ஸ்ரெல்லா யூட்ஸ், தோணிக்கல்.**

## கவிதைப்போட்டி இல.930

### பாராட்டுக்குரியது



### அடைக்கலம்

அற்பனுக்கு மவுசு
வந்தால்
அர்த்த ராத்திரியில்
குடை பிடிப்பான்.
ஆனாலிங்கோ
அகோரப்
பனி கொட்டலுக்கு
அஞ்சிப் பூனைகள்
இரண்டும் குடைக்குள்
அடைக்கலம்.

**க.யோணகான், மானிப்பாய்.**


மடல்கள் மற்றும் ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு.
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


## உங்கள் பக்கம்


### சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதியுங்கள்

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் பிரதேசத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் கிராமத்தில் கடற்படை முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளமையால் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை காணப்படுகின்றது. அம்மக்கள் தற்போது உறவினர் வீடுகளிலும், குடிசைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். உறவினர் வீடுகளில் வாழ்ந்து வருபவர்களுக்கு தொடர்ந்து அங்கு தங்கியிருக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அம்மக்கள் பெரும் வேதனையை அனுபவித்து வருகின்றனர். அதைவிட இவர்களை மீள்குடியேற்றுவது என்ற போர்வையில் ஒதுக்குப்புறங்களில் கொண்டு சென்று குடியமர்த்துவதற்கான முயற்சிகளைக் கபட நோக்குடன் சிலர் மேற்கொண்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். இது விடயத்தில் கடந்த காலங்களில் பல்வேறு அரச அதிகாரிகள் ஊடாகவும் அரசியல் தலைவர்கள் ஊடாகவும் உரிய இடங்களுக்குத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டபோது அதற்கான பதிலையோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, தினமுரசு வாரமலரின் உங்கள் பக்கம் ஊடாக உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சிக்கின்றோம். இதன் பினனாவது சம்பந்தப்பட்டவர்கள் அவதிப்படுகின்ற முள்ளிக்குளம் மக்களின் துயர் துடைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

**க.ஜோன்ஸ்கெவின், மன்னார்.**

# சபைக்கு வருகிறது தெரிவுக்குழு சட்டமூலம்

# அனைத்து கட்சிகளுக்கும் அரசு அழைப்பு



ஜெனிவாவிற்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடு திரும்பியதும் நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பிலான சட்டமூல வரைபு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

ஏற்கனவே, குறித்த சட்டமூலமானது கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது சபையில் சமர்ப்பிக்கப்படும் என செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் தற்போது அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா நாடு திரும்பியதை அடுத்தே இவ்விடயம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் இணைத்து தெரிவுக்குழு ஒன்றை உருவாக்கி அதனூடாக அதிகாரப் பகிர்வு அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய இறுதி வரைபை முன்வைக்கலாம் என ஈ.பி.டி.பி.யின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் குறித்த தீர்வு முயற்சியில் எவ்வாறு தங்களின் பங்களிப்பை வழங்குவது என்பது தொடர்பில் குழப்பமான நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

## சீருடை அவசியம்; அரசின் தீர்மானத்திற்கு அதிருப்தி

அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் போது காவல்துறையினர் சீருடை- களை அணிந்திருப்பது அவசியம் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் அதே போல அரசாங்கக் கட்சியின் சிலரும் இதற்கு ஆட்சேபம் வெளியிட்டுள்ளனர். அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் காவல்துறையினர் சிலவேளையில் 15 மணித்தியாலங்கள் கடமை களில் ஈடுபடுகிறார்கள். சீருடைகளை அணிந்து கொண்டு இத்தனை மணித்தியாலங்கள் பணியாற்றுவது என்பது கடினமானது.

இந்த நிலையில் இலங்கையில் காவல்துறையின் ஒருவருக்கு இரண்டு சீருடைகளே வழங்கப்படுகின்றன. எனவே அவற்றை அவர்கள் சலவை செய்து மீண்டும் மீண்டும் உடுத்துவது என்பது யதார்த்தமற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். சீருடை அணிவதன் மூலம் அரசியல் கொலைகளை நிறுத்த முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பொலநறுவையில் உள்ள அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் அரசாங்கத்தின் இந்த திட்டத்தை ஆட்சேபித்துள்ளார்.

## வெலி ஓயா முல்லைத்தீவு நிர்வாகத்திடம்

புதிய நிர்வாக மாற்றத்தின் படி வெலிஓயா என்ற மணலாறு பிரதேச செயலகப் பிரிவு, அநுராதபுர நிர்வாகத்தில் இருந்து முல்லைத்தீவின் நிர்வாகத்துக்கு கீழ் மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் மேற்கொள்ளப் பட்டு வரும் கிராமசேவை யாளர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளை மீளமைக்கும் திட்டத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்களக் குடியேற்றக் கிராம மான வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு போர் காரணமாக அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தில் இருந்து வந்தது.

தற்போது போர் அற்ற நிலையில் இது முல்லைத் தீவின் நிர்வாகத்துக்குள் மாற்றப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகம் முல்லைத் தீவு மாவட்ட செயலாளரின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை புதிய மாவட்டங்கள் எவையும் உருவாக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் வவுனியாவில் மேலும் இரண்டு புதிய பிரதேச செயலகங்களை ஏற்படுத்துமாறு தாம் கேட்கப்பட்டுள்ளதாக வவுனி யா அரசாங்க அதிபர் சார்ல்ஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் மட்டக்களப்பிலும் இது தொடர்பான கலந்துரை யாடல் எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

## மட்டு இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதி களுக்கு தொழிற்பயிற்சி களை வழங்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் பயிற்சிநெறி ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பயிற்சிநிலைய வளாகத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கைக் கட்டுமானக் கைத்தொழில் அமையம், மற்றும் ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த நடமாடும் பயிற்சி நெறி மூலமாக இளைஞர் யுவதிகள் அவர்களுடைய வாழ்நிலையை உயர்த்தி சமூகத்திற்குப் பயன்படக் கூடியவாறு தம்மை வளப்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக எதிர் காலத்தில் வாழமுடியும் என ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஹப்ரா தெரிவித்துள்ளார்.

தற்போது மூன்றுமாத கால வகுப்பறைப் பயிற்சியும் வெளிக்களப் பயிற்சியும் நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சிகளின் வினைத் திறனை அதிகரிக்கும் பொருட்டு புதிதாகக் கணினிப் பிரிவு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கள்ளமரம் வெட்டியவர் கண்டியில் கைது

கண்டி அங்கும்புரை பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி பலாமரம் வெட்டிய சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர். அங்கும் புரை பிரதேசத்திற்கு விசேட கடமைக்காக சென்ற அதிரடி படையினர் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இதன்போது வெட்டப்பட்ட 75 மரத்துண்டுகளையும் இவர்கள் மீட்டுள்ளனர். குறிப்பிட்ட சந்தேக நபரை யும் மரத்துண்டுகளையும் விசேட அதிரடி படையினர் அங்கும்புரை பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

## மாரி காலத்திற்கு முன்னர் ஒரு தொகுதி வீடுகளில் பயனாளிகள்

இந்திய நிதியுதவியில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தில் 50 வீடுகள் பூர்த்தியடைந்திருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். இந்த வீடுகளை மழை காலத்துக்கு முன்னர் பயனாளிகளிடம் கையளிக்குமாறு உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய நிதியுதவியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 250 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் பளை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன. எனினும் இவ்வீடுகளில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இவற்றை பயனாளி களிடம் கையளிக்க வேண்டுமென நாம் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

## கொள்ளை போனது கால்மாக்ஸின் கொள்கை

ஜே.வி.பி.யின் பெல்வத்தை உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ கொள்கை வகுப்பாளர் கால்மாக்ஸின் உருவச்சிலையை அந்த கட்சியின் கிளர்ச்சியாளர் குழு எடுத்துச் சென்றுள்ளது. கிளர்ச்சிக்குழுவின் பேச்சாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். சோமவன்ச குழுவினர் கால்மாக்ஸின் கொள்கைகளில் இருந்து விலகிச்சென்றுள்ளனர். கால்மாக்ஸ் போதித்த சிந்தனைகளை பெலவத்த அலுவலகம் முன்கொண்டு செல்லவில்லை. எனவே அங்கிருந்த கால்மாக்ஸ் சிலையை அகற்றிவிட்டதாக கிளர்ச்சிக்குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## சட்டமூலம் தயாராகிவிட்டது

தேசிய ஔடத கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான சட்டமூலத்தை தயாரிக்கும் பணிகள் நிறை வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் சேனக பிபில நினைவு தினம் மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் 40ஆவது வருட நிறைவு ஆகிய நிகழ்வுகள் நேற்று கொழும்பில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய ஔடத கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அது தொடர்பிலான சட்டமூலம் அமைச்சரவை அனுமதிக்காக விடப்பட்டு பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

### ஆரம்பித்த புள்ளியில் மீண்டும் ஆரம்பமா?

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் வயதால் முதிர்ந்த இருவருக்கிடையில் அடிக்கடி மோதல் சங்கரியா, சம்பந்தனா இதுதான் சமகால சுவாரசியம்.

கடந்த திங்கட்கிழமை, வவுனியாவில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் சங்கரிக்கு, வெற்றியைக் கொடுத்துள்ளது. அது தற்கால வெற்றியா, எதிர்கால வெற்றியா என்பதை சம்பந்தன் அடுத்து நகர்த்தப்போகும் சதுரங்க ஆட்டமே தீர்மானிக்கும்.

தமிழ் மக்களின் காணிகள், அபகரிப்பு, எல்லை நிர்ணயம், அத்துமீறிய குடியேற்றம் இவை நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல் தான் நடத்தப்போகும் அடையாள உண்ணாவிரதத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆதரவு தரவேண்டும். இல்லாவிட்டால் இவ்விவகாரத்தில் கூட்டமைப்பிடம் இருக்கும் திட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று பகிரங்கமாகக் கேட்டிருந்தார். இக்கேள்விகளுக்கு நேரடியாகவும், பகிரங்கமாகவும் பதிலளிக்காத சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு, உண்ணாவிரதம் வரை, தடுமாறிக்கொண்டிருந்தது. இதற்கிடையே அண்மையில் சங்கரி நடத்திய கட்சி மாநாடு, அதன் தீர்மானங்கள் என்பவை எல்லாம் செயலாளர் நாயகம் என்ற வகையில் தனக்குத் தெரியாமல் நடைபெற்றவை என்பதால் அவற்றைத் தேர்தல் செயலகம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சம்பந்தனும், சம்பந்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இல்லை என்று சங்கரியும் மோதிக்கொண்டனர்.

இந்த நிலையில் 17 ஆம் திகதி உண்ணா விரதம் ஆரம்பமான வேளையில் சம்பந்தனின் ஒப்புதல் இல்லாமலே அநேகமான கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கரிக்குப் பின்னால் அணி திரண்டு ஒரு வேளை உணவைத் தியாகம் செய்து உண்ணாவிரதத்தில் முகம் காட்டினார்கள்.

இதனால் கூட்டணியில் ஒரு காலும் கூட்டமைப்பில் ஒரு காலும் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தன் தனது ஊன்றுதடியை எங்கே ஊண்டப் போகின்றார் என்ற சுவையான கேள்விக்கு விடை அண்மித்துக்கொண்டிருப்பது தெரிகின்றது.

இதேவேளை காணி விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கிக்கொடுத்திருப்பதும் தமிழ் கட்சிகள் ஏன் உண்ணாவிரதத்தை நடத்த வேண்டும் என அமைச்சர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஆனால் ஆனந்தசங்கரி போன்றவர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக இல்லை என்பதையும் கூட்டமைப்பின் பெயரால், பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும் அது கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகளுக்கோ, கூட்டமைப்போடு கூடிவிட நினைக்கும் கட்சிகளுக்கோ ஏற்படையதாக இருக்குமோ என்பதையுமோ உண்ணாவிரதமும் தமிழ்க்கட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தும் கட்சிச் செயற்பாடுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக பொங்குதமிழ் நடாத்தவும், போராட்டம் நடத்தவும், ரயர் எரிப்பு, கல்வீச்சு என்பவற்றைப் புரியவும் தமிழ் மக்களை அழைத்தவர்கள் இன்று ஒருவேளை உண்ணாவிரதத்திற்கு அழைத்தது கவனத்திற்குரிய மாற்றமாகக் கருதலாம். ஆனால் இந்த உண்ணாவிரதமானது இந்த இயலாத தலைமைகளால் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட புள்ளியிலேயே அவர்கள் இன்னும் அடி தேய்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. எல்லா மக்களும் நாளுக்கு நாள் முன்நோக்கிப் போகையில் தமிழ் மக்கள் மட்டும் தாம் காட்டும் வழியில் 40 ஆண்டுகள் பின்நோக்கிப் பயணிக்க வேண்டுமென காலைவாரி இழுத்துவிடும் கயமை அரசியல் இதுவாகும்.

முன்னர் செய்ததை இப்போது செய்யும் போது சங்கரிக்கு வேண்டுமாக இருந்தால் இளமை திரும்புவது போல் இருக்கும். ஆனால் தமிழ் மக்களுக்கு??

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.




# அச்சுறுத்தும் அரசியல் துப்பாக்கிகள்

சிவன்

அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை தீர்த்துக்கொள்வதற்கும், அரசியல் வெற்றிகளை உறுதிப்படுத்துவதற்கும் வன்முறை ரீதியில் ஆயுதங்களைப் பயன்படுத்துகின்ற விடயத்தில் இலங்கைக்கு நீண்ட வரலாறு இருக்கின்றது.

1959 இல் S.W.R.D பண்டார நாயக்கா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வந்த ஆயுதக் கலாசாரமானது ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் விஜய குமாரதுங்க உட்பட்ட தலைவர்களை வேட்டையாடித் தீர்த்திருந்தது. அதேபோன்று "கத்தி எடுத்தவனுக்கு கத்தியாலே தான் மரணம்" என்று கிராமப் புறத்து பேச்சு வழக்கில் கூறப்படுவதுண்டு. இதேபோன்று ஜே.வி.பி. யின் தலைமையை வேட்டையாடி நாட்டில் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு அப்போதைய இலங்கை அரசுக்கு உதவியது உயிர்கொல்லும் ஆயுதங்கள்தான்.

பின்னர் நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் விடுதலை நோக்கிய ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தபொழுது, இரு தரப்பினரும் பேசிக்கொள்ளும் ஊடகமாக இந்த ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டன. தனித்தலைமை மோகம் கொண்ட புலிகள் ஏனைய இயக்கங்களையும் வேட்டையாடியதும் இந்த ஆயுதங்கள்தான். மறுபுறத்தில் தமது இருப்பிற்கு ஆபத்தானவர்கள் என்று கருதிய நாட்டின் தலைவர்கள் தீர்த்துக் கட்டவும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது புலிகளின் போராட்டம் முடிவடைந்துள்ளது. கடந்த காலங்களில் புலிகளின் அச்சுறுத்தலை காரணம் காட்டி ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட அரசியல் பிரமுகர்கள் தொடர்ந்தும் குறித்த ஆயுதங்களைத் தாங்கிய ஆயுத தாரிகளாகவே வலம் வருகின்றமையால் அரசியல் களத்தில் இன்றும் ஆயுத அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இதனை அண்மையில் நடந்த பாரத லக்ஷமனின் சம்பவம் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த முப்பது வருட காலமாக தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆயுத கையாளுகையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பல தரப்புகள் ஆயுதக் கலாசாரம் என்பதை தமிழ் மக்களோடு சம்பந்தப்பட்ட விவகாரமாகவே பார்த்து வந்தனர். கடந்த காலங்களில் நடைபெற்ற அரசியல் படுகொலைகள் புலிகளின் தலையிலேயே கட்டி விடப்பட்டது. கடந்த காலங்களில் இது தப்பித்துக் கொள்வதற்கான சிறந்த வழியாகக் காணப்பட்டது. இன்று புலிகள் இல்லை என்ற நிலையில் ஆயுதப் பயன்பாடு நடைபெறுமாயின் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியாகவே இருக்கும்.

அதுவே முல்லேரியாவில் நடைபெற்றுள்ளது. ஆயுத மோதலில் ஈடுபட்டவர்களில் ஒருவர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேண்டப்பட்டவர். மற்றையவர் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவிற்கு வேண்டப்பட்டவர். அதாவது இருவருமே தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய புள்ளிகள். எனவே குறித்த சம்பவத்திற்கான பழியை வேறு எவர் மீதும் சுமத்த முடியாத நிலை அரசிற்கு உருவாகியிருக்கிறது. எனினும் விசாரணையாளர்களினால் இக்கொலையில் வேறு யாராவது தவறு தலாகவேனும் மூக்கை நுழைத்துள்ளார்களா? என்பது துருவித் துருவி ஆராயப்படுவதாகத் தெரிகிறது.

இந்நிலையில் முல்லேரியாச் சம்பவம் உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் பாரிய தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இந்த துரதிர்ஷ்ட நிகழ்வினால் தேர்தல் வெற்றியைக் கூட கொண்டாட முடியாத நிலைக்கு அரச தரப்பு தள்ளப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதேவேளை இச்சம்பவம் அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர் மத்தியில் எந்தளவிற்கு ஆயுதங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அரசியல் ரீதியான மோதல்களில் எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதெல்லாம் வெளித்தெரிய ஆரம்பித்துவிட்டது.

கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவாக ஆயுதத் துணைப்படைகள் செயற்படுவதான குற்றச்சாட்டுக்களை சர்வதேச நாடுகளாலும், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்களாலும் சுமத்தப்பட்டு வந்தது. அண்மையில் கூட இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜதந்திரியான ரொபேட் ஓ பிளேக் வடக்கில் துணை ஆயுதக் குழு ஒன்றை பேணி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அதனை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஆதாரமற்றவை என மறுத்திருந்தன. இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதும் அதனை மறுப்பதும் கடந்த காலங்களில் பல தடவைகள் செய்திகளாக வெளிவந்திருப்பதை யாவரும் அறிவர்.

இந்நிலையில் அரசாங்கத்தின் பிரதான கட்சியான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு முக்கியஸ்தர்களே ஆயுதம் தாங்கி வந்து முல்லேரியாவில் சன்னதம் ஆடியதும் அதன்பின்னர் நடாத்தப்பட்ட தேடுதலில் பல்வேறு சட்டவிரோதமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் நிச்சயமாக சங்கடமான விஷயம்தான். எதிர்காலத்தில் ஆயுத அச்சுறுத்தல் இருக்கின்றது என்று எவராவது கூறினால் அதனை மறுக்க முடியாத தர்மசங்கடம் ஒன்று அரச தரப்பிற்கு ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் "புலிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக" என்ற போர்வையில் வரையறை இன்றி வகையறாக்களுக்கெல்லாம் ஆயுதங்களை கொடுத்தது தப்பாகிப் போய்விட்டது என்பது தற்போது அரசாங்கம் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு வழங்கப்பட்ட ஆயுதங்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கும் சில அரசியல்வாதிகளின் நண்பர்களான பாதாள கோஷ்டியினரின் தேவைகளுக்கும் கேள்வி நியாயம் இன்றி பயன்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு மறுக்கமுடியாததாகிவிட்டது.

**பெரும்பாலான தலைவர்கள் தங்களிடம் இருக்கின்ற ஆயுதங்களினால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்த போதிலும் கடந்த காலங்களில் தமது நலன்விரும்பிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் மௌசை அதிகப்படுத்துவதற்காகவும் இடுப்பில் சொருகிக் கொண்டு திரிகின்றனர்.**

அதைவிட வேறு சில அரசியல்வாதிகள் இவ்வாறான ஆயுதங்களை வைத்து 'பவர்' காட்டித் திரிகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இதைக் கூறும் பொழுது கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடந்து கொண்ட விதம் ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது முடி திருத்தும் இடத்திற்குச் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தனது சேட்டைக் கழற்றிவிட்டு இடுப்பில் இருந்த பிஸ்டல் வெளியே தெரியுமாறு அமர்ந்திருந்து குறித்த சிகையலங்கரிப்பாளரையும் அங்கு சூழ்ந்திருந்தவர்களையும கிலி கொள்ள வைத்து ரசித்திருந்தார்.

இவ்வாறுதான் பெரும்பாலான தலைவர்கள் தங்களிடம் இருக்கின்ற ஆயுதங்களினால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்த போதிலும் கடந்த காலங்களில் தமது நலன்விரும்பிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் மௌசை அதிகப்படுத்துவதற்காகவும் இடுப்பில் சொருகிக் கொண்டு திரிகின்றனர். இது கண்டும் காணாமல் விடப்பட்டதுதான் அரசுக்கு இந்தத் தலைகுனிவு ஏற்படக் காரணமாகவிருக்கிறது.

இதனை உணர்ந்து கொண்ட அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் பிரமுகர்களின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸார் சீருடையில் இருக்க வேண்டும் என்பதும் அவர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று விசாரணைகள் முடக்கிவிடப்பட்டிருக்கின்றன. அத்தோடு நாட்டில் காணப்படுகின்ற அனைத்து சட்டவிரோத ஆயுதங்களையும் களைவதற்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு அரசியலில் ஊடுருவியிருக்கும் ஆயுதக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா. பண்டார நாயக்கவில் ஆரம்பித்த ஆயுதப் பயன்பாடு பாரத லக்ஷமனுடன் முடிவுக்கு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முடிவுக்கு வராவிட்டால் எதிர்காலத்திலும் பெறுமதி மிக்க பல உயிர்கள் ஒருசிலரின் இருப்பிற்காக இல்லாது செய்யப்படுவதையும் தலைகுனிவுகளைச் சந்திப்பதையும் தவிர்க்க முடியாது போகும்.

எம்மால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் நாம் நினைத்த மாதிரி அமையவில்லை. இந்த ஊடறுப்பு தாக்குதல் தோல்வியடைந்த பின் பொட்டு அம்மான் திரும்பிவரவில்லை.

வராமை நமக்கு மேலும் பெரும் இடியாக விழுந்தது. இதன் பின் அண்ணன் மிகவும் மனமுடைந்தவராகவும் வேறு எந்தவொரு தளபதிகளுடன் கதைப்பதைக்கூட தவிர்த்தும் வந்தார்.

இதனால் அண்ணனை பாதுகாக்க நாம் எடுத்த கடைசி நடவடிக்கையும் தோல்வியில் முடிந்தது.. நம் தலைமை பதறிப்போனது. நாம் அனைவரும் இப்பொழுது பூரண முற்றுகைக்குள் வந்துவிட்டோம் என்பதால் எதுவும் செய்ய முடியாது இருந்ததனால் மேலும் அப்பொழுது ஆயுதங்களுடன் இருந்த ஆயிரம் போராளிகளை நிராயுத பாணிகளாக செல்லும்படியும் அவர்களை மக்களுடன் சேர்ந்து செல்லும்படியும் தலைவரால் பணிக்கப்பட்டது.

மேலும் நமது தலைவர்கள் ஒருபோதும் சரணடைவதை விரும்பவில்லை. இத்தனை போராளிகள் மக்கள் சொத்துக்களை இழந்த பின் நாம் சரணடைவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. மக்களுக்கும் என்னால் எந்தவிதமான பதிலும் சொல்லமுடியாது. நாம் நேசித்த அத்தனையும் போய் விட்டது.நீங்கள் செல்லுங்கள் உங்களுக்காக நம் புலம்பெயர்ந்த சமூகம் உள்ளது. அவர்கள் அடுத்த நகர்வுகளை செய்வார்கள். நீங்கள் அவர்களது செயல்களுக்கு உருவம் கொடுக்கும் போராளிகளாக இருங்கள் என சொல்லி அனுப்பினார்.

அதனால் தானும் சில முக்கிய போராளிகளும் கடைசிவரை போராடவுள்ளதாகவும், நம்மை இனி நாமே பார்த்துக்கொள்ளுகின்றோம் நீங்கள் நல்ல நம்பிக்கையுடன் செல்லுங்கள். நான் கடைசிவரை சரணடையமாட்டேன். அப்படி ஒரு நிலை வந்தால் நான் இருக்கமாட்டேன் என சொல்லி வற்புறுத்தி நம்மை மக்களுடன் செல்ல வைத்தார். சண்டை கடைசிக்கட்டத்தை எட்டிவிட்டது. வெளியுலகுக்கு எந்த தகவலையும் அதன் பின் நமது கட்டுப்பாட்டிலிருந்து கொடுக்க முடியவில்லை.

தலைவரின் இந்த கடைசி நேரக் கட்டளைப்படி மக்களுடன் சேர்ந்து வந்தவர்களில் நானும் ஒருவன். தொடர்பிலிருந்த பொழுது சொல்லியது, உங்களை நம்பி ஆயுதங்களை கீழே போட்டு சரணடைந்த இந்த போராளிகளின் மறுவாழ்வை கவனியுங்கள், அவர்கள் குடும்பத்தை வாழவைக்க அவர்கள் விடுதலைக்கு உதவுங்கள் என்பதும், எமது அடுத்த கட்ட போராட்ட களம் புலம்பெயர் தலைவர்களிடமும் அத்தேச மக்களிடமும் தான் உள்ளது. அதனால் நீங்கள் அதற்கான வழியை எடுங்கள் என்பதுமே.

தலைவரின் கட்டளை ஒருபுறம் தலைவருக்கு இந்த புலம்பெயர் தேசத் தலைவர்கள் கொடுத்த உறுதிமிக்க வார்த்தைகள் ஒருபுறம் என எல்லாவற்றையும் நம்பி தலைவர் நம் போராளிகளைச் சரணடையவைத்தார்.

நமது தமிழர் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் செய்தி இப்படி இருந்தது. அதாவது யுத்தம் நடக்கிறது. நமது மக்களை காக்க ஏதாவது எடுங்கள் என எமது தலைமையால் கோரப்பட்டது. இதற்கு இப்போது தமிழர் தலைவர்கள் நாங்களே நாம்தான் ஏக பிரதிநிதிகள் என கூறும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சொன்னது மிகவும் வேதனைமிக்கது.

ஆம், நம் தலைவர்களை காப்பாற்ற தலை வர்களுடன் பேசும்படி நடேசனாலும், சூசையாலும் கோரப்பட்டதற்கு நமது செல்வாக்கினால் பதவி ஏறிய இந்த சம்பந்தன் சொன்ன சொல் எப்படி இருக்குது? அவரைப் போல்தான் மாவையும் எதுவும் செய்யாது ஒதுங்கி விட்டார். இப்போது தேர்தல் காலங்களில் மறுபடியும் நமது கதையை சொல்லி வாழ்க்கை ஓட்டுகின்றார்கள்.



நம் தலைவர்களைக் காப்பாற்ற அரசுடன் பேசுமாறு சம்பந்தனுக்கு கூறப்பட்டது அதற்கு அவர் கூறிய பதில் "இன்னும் சில நாளில் முடியப்போகும் விடையத்தை பற்றி பேசுவத னால் எமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கு சிங்கள தேசத்தில் எதிர்ப்பு கூடிவிடுவதுடன் நாம் வாழ முடியாது. எமக்கு இப்பொழுது இந்த வழி மோசமானதாக இருக்கிறது. இனி என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்" என்றார்.



எப்படி இருக்கு இந்த நம் ஏக பிரதிநிதியின் கூற்று ??

# நமது தலைவர்கள் ஒருபோதும் சரணடைவதை விரும்பவில்லை

## அப்படி சரணடைவதால் எதுவும் நடக்கப்போவதுமில்லை

இன்னும் சில நாளில் முடியப்போகும் விடயத்தை பற்றி பேசுவத னால் தங்களது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கு சிங்கள தேசத்தில் எதிர்ப்பு கூடிவிடுவதுடன் தாம் வாழ முடியாது என்றும் தமக்கு இப்பொழுது இந்த வழி மோசமானதாக இருக்கிறதென்றும் சொல்லியதுடன் இனி தன்னுடன் தொடர்புகொள்ள வேண்டாம் என்றும் அவர் சொல்லி தொடர்பை துண்டித்துவிட்டார்.

எப்படி இருக்கு இந்த நம் ஏக பிரதிநிதியின் கூற்று??

மக்களே நீங்கள் இந்த போலிகளை நம்பாதீர்கள் இவர்கள் சுயநலவாதிகள் உங்களுக்கு எதையும் இவர்கள் செய்யவும் போவதில்லை.

இவர்கள் போன்றவர்கள்தான் நம் தலைவரை இராணுவத்திடம் சரணடைந்துவிட்டார் என செய்தி பரப்பியவர்கள். அதுமட்டுமல்ல கைது செய்யப்பட்டு தலைவர் நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டார் எனவும் சொன்னார்கள்.

(தொடரும்...)

**புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்**

நன்றி : இணையம்

# ராஜ் ராஜரட்ணம் 11 ஆண்டுகள் சிறை

## வர்த்தகத் தந்திரம் மோடியானது

அமெரிக்காவில் பங்குச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இலங்கைத் தமிழரான ராஜ் ராஜரட்ணம் மோசடி வர்த்தகத்தில் ஈடுபட்டு இலாபம் சம்பாதித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டார். இவர் கைது செய்யப்பட்டு, வழக்குத் தாக்குதல் செய்யப்பட்ட நிலையில் தற்போது தீர்ப்பு வெளியாகியுள்ளது.

இத்தீர்ப்பின்படி ராஜ் ராஜரட்ணத்திற்கு 11 வருட கால சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது நீதிமன்றம். இந்த வழக்கில் ராஜ் ராஜரட்ணத்திற்கு எதிராக வாதாடிய அரச தரப்பு வழக்கறிஞர்கள் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை மோடி செய்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதால் குறைந்த பட்சம் 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டுமென நீதிபதியைக் கேட்டுள்ளனர்.

எனினும் ராஜரட்ணம் சார்பாக வாதாடிய வழக்கறிஞர்களால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதலைக் கவனத்தில் எடுத்த நீதிபதி, சுமார் 54 வயது நிரம்பிய ராஜரட்ணத்திற்கு நீரிழிவு நோய் காரணமாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருப்பதால் அவருக்கான தண்டனையைக் குறைப்பதாகக் கூறி 11 ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தார். அதன்போது "தீவிர நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற தண்டனைகளே ராஜ் ராஜரட்ணம் என்ற இந்தக் கைதிக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இவருக்கு சிறையை விட்டு வெளியே செல்வதற்கான அட்டை வழங்கப்படமாட்டாது" என அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கடமையாற்றிய ரிச்சர்ட் தெரிவித்தார்.



எனினும் ராஜரட்ணத்தின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி வடகரோலினாவில் உள்ள குட்நர் என்ற சிறைச் சாலைக்கு இவரை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இக்குறித்த சிறைச்சாலையில் சகல வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல மில்லியன்களுக்குச் சொந்தக்காரரான ராஜரட்ணம் சிறிலங்கா, பாகிஸ்தான், அமெரிக்கா, இந்தியா போன்ற பல நாடுகளில் இயற்கை அனர்த்தங்கள் நடைபெற்ற வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு தொண்டுகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1997 ஆம் ஆண்டு ஹேலியோன் என்னும் நிதி நிறுவனத்தை நிறுவி அதனை உலகின் மிகப்பெரிய வர்த்தக நிறுவனங்களில் ஒன்றாக வளர்த்தெடுத்த ராஜரட்ணம் சர்தேச ரீதியில் பல்வேறு விதமான வியாபாரங்களில் தன் முதலீடுகளை மேற்கொண்டுள்ளார். இலங்கையில் இயங்கிவருகின்ற கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை உட்பட பல்வேறு நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் ராஜரட்ணம் கைது செய்யப்பட்டு அவர் மீது 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் 10 மில்லியன் டொலர்களைத் தண்டப் பணமாகச் செலுத்தியதுடன் குறித்த வழக்கில் சட்டச் செலவு மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வதற்கென 53.8 மில்லியன் டொலர்கள் வழங்கவேண்டுமெனவும் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி: த.பெ.இல : 167,யாழ்ப்பாணம்.

# கப்பற்படையில் முதன்முதலாக பெண் அதிகாரி



இங்கிலாந்தின் வலிமைமிக்க படைப்பிரிவுகளில் கப்பற்படைதான் சிறந்தது. கப்பற்படை வாயிலாகவே ஆங்கிலேயர் தங்களது காலனி ஆதிக்கத்தினை உலகம் முழுவதும் நிறுவினர். உலகிலேயே மிகவும் பழமையானதும் கூட, சுமார் 500 ஆண்டுகள் பழமையானது இங்கிலாந்து கப்பற்படை. இப்படையின் எச்.எம்.எஸ். போர்லாண்ட் பிரிவில் 185 ஆண் வீரர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு தலைமை ஏற்று வழிநடத்தும் லெப்டினன்ட் அதிகாரியாக, சாராவெஸ்ட், வயது 39 என்ற பெண் வீராங்கனை தேர்வு செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்து இராணுவத்தின் 500 ஆண்டுகால கப்பற்படை வரலாற்றில் முதன்முதலாக பெண் அதிகாரி ஒருவர் லெப்டினட் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் கப்பல்படையில் சிறிய ரக போர்க்கப்பல்கள், மீன்பிடி கப்பல்களில் தான் பெண்கள் இருந்து வந்தனர்.ஆனால் லெப்டினட் அதிகாரி பதவிக்கு இதுவரை எந்த பெண்களும் வரவில்லை. ஆகையால் ஆண்களுக்கு நிகராக கடும் உழைப்பிற்கு பின்னர் தான் சாரா வெஸ்ட் தேர்வானார்.

இவர் 1995ஆம் ஆண்டு ஹெர்போர்ட்ஷெயர் பல்கலையில் கணிதம் படித்தார். எச்.எம்.எஸ்.போர்லாண்ட் பிரிவில், சாரா வெஸ்ட் அடுத்த ஆண்டு (2012) ஏப்ரல் மாதம் முதல் லெப்டினட் அதிகாரியாக பதவியேற்பார். அதுவரை அவருக்கு உரிய பயிற்சிகள் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. லெப்டினட் அதிகாரியாக பொறுப்பேற்றால். போரின் போது சுமார் 5 ஆயிரம் டன் எடையும், 133 மீற்றர் நீளம் கொண்ட போர் கப்பலை இயக்கி கடலிலிருந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்துவது, நீர்முழ்கி கப்பல்களை இயக்க உத்தரவிடுவது போன்ற பயிற்சிகளை மேற்கொள்வார். இவருக்கு 4.05 இன்ஞ்ச் கொண்ட துப்பாக்கி தற்காப்பிற்காக கொடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

# கர்ப்ப காலத்தில் தாயின் உடல் எடை?


கர்ப்ப காலத்தில் சத்தான உணவுகளை சாப்பிடுவதன் மூலம், சரியான அளவு உடல் எடை அதிகரித்தால், கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் கிடைத்து, குழந்தை நன்றாக வளர்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். கர்ப்பிணிகளுக்கு உடல் எடை அதிகரிக்க அதிகளவிலான உணவுகளை சாப்பிட வேண்டும் என்பதில்லை.

அதிக கலோரிகள் தேவை என்பதால் நல்ல சத்தான உணவை சாப்பிடுவதே மிக முக்கியம். அப்போது தான் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் வளர்ச் சியடையும். கர்ப்பமடைவதற்கு முன் எடுத்துக் கொண்ட கலோரி அளவிலிருந்து, 100 முதல் 300 கலோரி வரையே கர்ப்பமடைந்த பின் பெண்களுக்கு தேவைப்படும். பொதுவாக கர்ப்ப காலத்தில் சாதாரண எடையுள்ள, ஒரு பெண்ணின் எடை 12 முதல் 16 கி.கி., வரை அதிகரிக்க வேண்டும்.

குறைந்த உடல் எடை கொண்ட பெண்களின் எடை, கர்ப்ப காலத்தில் 13 முதல் 18 கி.கி., வரை அதிகரிக்க வேண்டும். அதிக உடல் எடை கொண்ட பெண்கள் கர்ப்ப காலத்தில் 7 முதல் 11 கி.கி., வரை உடல் எடை அதிகரிக்க வேண்டும். கர்ப்பமடைந்த முதல் மூன்று மாதங்களுக்கு 1 முதல் 2 கி.கி., வரை உடல் அதிகரிக்க வேண்டும்.

அதன் பின் ஒவ்வொரு வாரமும் அரை கிலோ கிராம் வரை அதிகரித்து கொண்டே வர வேண்டும். அதுவே இரட்டை குழந்தையாக இருந்தால் கர்ப்ப காலத்தில் 16 முதல் 20 கி.கி., வரை உடல் எடை அதிகரிக்க வேண்டும். முதல் மூன்று மாதங்களுக்கு பின் ஒவ்வொரு மாதமும் 1 கி.கி., குறைவாக உடல் எடை அதிகரிக்க வேண்டும்.

# வர்ண வளையல்களை அணிய விரும்புகிறீர்களா?



நிற நிறமான ஆடைகள், வண்ண வண்ண வளையல்கள் என உலா வரும் பெண்களே! வளையல்கள் அணியும்போது அதற்கென சில முறைகள் உண்டு. அதை வெள்ளை ரிசூவில் சுற்றி பெட்டியிலே வைத்து பாதுகாப்பாக வையுங்கள். இதனால் பொருளின் உபயோகக் காலம் கூடும். வளையல்களை அணியும் போது: உதாரணமாக, கண்ணாடி, ஸ்டீல், பிளாஸ்டிக் என ஏராளம். நாம் புடவை அணியும் சந்தர்ப்பங்களில் கை நிறைய வளையல்களை அணியலாம். சுடிதார் அணியும் பெண்கள் அளவாக வளையல் போடலாம்.

ஜீன்ஸ் அணியும் பட்சத்தில் ஓரிரு வளையல்களை போட்டால் எடுப்பாக இருக்கும். நாம் அணியும் ஆடைகளில் எத்தனை வர்ணங்கள் உள்ளதோ அத்தனை வர்ணத்திலும் ஒவ்வொரு வளையல் தெரிவு செய்து அணியும்போது அது அழகாகக் காட்சி தரும்.

வைபவங்களுக்கு அணியும் வளையல்கள் கொஞ்சம் மினுமினுப்பாக இருந்தால் அழகாய் இருக்கும். கற்கள் பதித்த வளையல்கள் பட்டுச்சேலைக்கு பொருத்தமாய் இருக்கும். எப்படியும் ஒற்றை வளையல் அணியும்போது விரல்களுக்கு மோதிரங்களை குறைத்து போடவேண்டும்.

# பிள்ளையின் மனதில்...

அன்னையிடம் அன்பை வாங்கவும் தந்தையிடம் அறிவை வாங்கவும் நம்முடைய சமுதாய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இறைவன் ஒவ்வொரு குடும்பத்திலும் உலவுவதற்குப் பதிலாகத்தான் அம்மாவை அனுப்பியுள்ளான் என்று ஆன்றோர்கள் சொல்லிச் சென்றனர். நாம் தெய்வம் எங்கே எங்கே என்று வெளியில் தேட வேண்டியதில்லை நம் வீட்டிலேயே சேலை கட்டிய தெய்வமாக அன்னை இருக்கின்றார். அவர்களை வணங்கினால் போதும் அகிலத்தை ஆளலாம்.




"நல்லராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே" என்பார்கள்.

தந்தை ஆகிய உங்களுக்குத்தான் அதிகமான பங்கு இருக்க வேண்டும். ஏனெனில் உங்களின் செயல்கள் குழந்தையின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிகின்றது. நீங்கள் கோபப்படுபவர்களாகவோ, கருணை நிறைந்தவர்களாகவோ, பாசம் காட்டக் கூடியவர்களோ, உதவி செய்யக் கூடியவர்களாகவோ, இருந்தால் அப்படியே படம் பிடித்தாற்போல் பிள்ளைகள் வளர வாய்ப்பு இருக்கின்றது.

அவனைச் சுற்றியுள்ள அவனது நண்பர்கள், உறவு, நட்பு இப்படிப் பலர் சூழ்ந்திருந்தாலும் தந்தையின் போக்கு அதிகமாக பிள்ளையின் மனதில் பதிவதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே உங்களது பிள்ளை வாழ்வியலில் உயர்நிலைக்கு வரவேண்டும் என்றால் நீங்களும் எடுத்துக்காட்டாய் இருங்கள்.

# பேரீச்சம்பழ, அன்னாசிக் கேக்



## தேவையான பொருட்கள்

400-கிராம் றவ்வை
350-கிராம் சீனி
250-கிராம் மாஜரீன்
400-கிராம் பேரீச்சம்பழம் ( விதை நீக்கியது)
250-கிராம் முந்திரிகை வற்றல்
1/2-ரின் அன்னாசி, 1/2 ரின் ரின்பால்
5-முட்டை, 50 கிராம் இஞ்சி
1-கிளாஸ் தேயிலைச்சாயம் (4 பைக்கற் தேயிலையை ஊற வைத்து எடுக்கவும்)
1-மேசைக் கரண்டி பேக்கிங் பவுடர்
1-மேசைக்கரண்டி வனிலா
50-கிராம் கஜு

## செய்முறை

முதலில் இஞ்சியை சுத்தமாக்கி விழுது போல் அரைத்து எடுக்கவும். அதனோடு பேரீச்சம்பழம், தேயிலைச்சாயம் சேர்த்து 6-10 மணித்தியாலங்கள் ஊற வைக்க வேண்டும். வேறொரு பாத்திரத்தில் சீனியையும் மாஜரீனையும் சேர்த்து நன்கு அடிக்க வேண்டும். சீனி கரைந்ததும் அதனுள் முட்டையையும் ரின்பாலையும் சேர்த்து அடிக்கவும். பின்னர் ஊறவைத்த சேர்வையை கசக்கி தனியாக அடித்து கொள்ளவும். பின்னர் இரண்டையும் சேர்த்து நன்றாக அடிக்கவும். அன்னாசியையும் சிறு துண்டுகளாக்கி அதனுள் சேர்த்துக் கொள்ளவும். கடைசியில் றவ்வை, பேக்கிங் பவுடர், வனிலா போன்றவற்றை தனியாக கலக்கிய பின்னர் அதனுள் சேர்த்து கொள்ளவும். அத்துடன் கஜு, முந்திரியை வற்றல் என்பவற்றையும் சேர்த்து கலக்கிய பின்னர் 175 பாகையில் 30 நிமிடம் பேக் பண்ணி எடுக்கவும்.

**குறிப்பு:** இஞ்சியை அரைத்து தேயிலை சாயத்தினுள் ஊறவைத்து பின்னர் தும்பு இல்லாது வடித்து சாயத்தை எடுத்தும் பயன்படுத்தலாம்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 291**

கேள்வி : இங்கிலாந்தில் முதன்முதலாக கப்பற்படை அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் அதிகாரி யார்?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 291**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **30.10.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 289 இற்கான விடை:- இடதுபுறமாக ஒருக்களித்துப்படுத்துறங்குவது.**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- கே.எஸ்.சிவஞானராஜா,கொக்குவில் மேற்கு. கொக்குவில்.**

**291**

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
........................................
தே.அ. அட்டை இல : ........................................
விடை : ........................................
கையொப்பம் : ........................................

# சிலரின் தவறான செயற்பாடுகளால்
# பழியைச் சுமக்கும் இந்து ஆலயங்கள்

**ஒரு பிரதேசத்தின் பொருளாதாரம் ஊர்களில் இருக்கின்ற ஆலயங்களிடமே தங்கியிருக்கிறது எனும் அளவுக்கு நிதி சேர்கின்ற ஒரு இடமாக அது மாறியிருக்கிறது. இந்துக்களின் பாரம்பரியங்கள் வெறுமனே இன்று நேற்று உருவாக்கப்பட்டவைகள் அல்ல. அவற்றின் ஒழுங்கு முறைகள் சாதாரணமானவைகள் அல்ல என்பது ஒவ்வொரு புதிய பரம்பரைக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும், திருவிழாக்களும், ஒவ்வொரு மனிதனையும், நன்நெறிப்படுத்தும் மற்றும் சமூக மயமாக்கும் செயற்திட்டங்களாகும் அவ்வாறான ஒழுங்கு விதிமுறைகள் வழிமுறைகள் இருக்கையில், ஆலயங்கள் தமது சொத்துக்கள் என்ற போர்வையில் ஒரு சிலர் செயற்படுவதானது, எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.**

லோகேஸ்வர்

இந்து ஆலயங்களின் குழப்பங்கள் அண்மைக்காலங்களாக மட்டக்களப்பில் அதிகரித்து வருவதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் பலவற்றின் நிருவாக, நிதி விடயங்கள் நீதிமன்றம் வரை சென்று விசாரணைகள் நடைபெற்றுவருகின்றமையும் குறிப்பிடப்பட வேண்டும். இந்தக் கட்டுரை இந்து ஆலயங்களின் ஆரம்பகால, இக்கால, எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளது.

இந்து மதம் என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடுகள் இறுக்கமாகவோ, வரையறைகள் கொடுக்கப்பட்டோ இல்லாத வகையில் கடைப்பிடிக்கின்ற ஒன்றாக இருக்கிறது. இந்து ஒருவர் கட்டாயமாக தீட்சை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வரையறை இல்லாத நிலையே காணப் படுகிறது.

அவ்வாறாக இருந்தாலும் மனச் சுத்தம் என்பது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் ஒரு மனி தனுடைய மதக் கொள்கை சிறப்பாகச் செயற்பட வாய்ப்பிருக்கிறது.

ஆலயங்களின் நிருவாகங்களில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தாமே தொடர்ந்தும் தலைவராகவும், செயலா-ளராகவும், பொருளாளராகவும், என தம்மைச் சுற்றிய தம்மை அடக்கிய ஒரு கூட்டமே இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்புகள் இருக்கிறது.

பல்வேறு ஆலயங்கள் பல்வேறு பட்ட காலப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து இப்போது பெரிய எவு-களில் உயர்ந்திருக்கும் நிலை உள்ளது. அதில் நான் முந்தி நீ முந்தி நிலை-லயாக எனது கோவில், இதனை நாங்கள் தான் உருவாக்கினோம். நாங்களே நிருவாகங்களைப் பார்த்துக் கொள்வோம் என்ற நிலை எல்லா இடங்களிலும் காணப்படுகிறது.

மக்களின் பணங்கள் வீணாகி யார் யாரோ அதனைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்லும் சூழல் இவ்வாறான பிரச்சினைகளால் ஏற்படுகிறது.உண் மையைச் சொன்னால் ஒரு பிரதேசத்தின் பொருளாதாரம் ஊர்களில் இருக்கின்ற ஆலயங்களிடமே தங்கியிருக்கிறது எனும் அளவுக்கு நிதி சேர்கின்ற ஒரு இடமாக அது மாறியிருக்கிறது. இருந்த போதி லும் ஒரு சில ஆலயங்களைத் தவிர பல இன்னமும் பாழடைந்த நிலை போல் காணப்படுவதையே அவதானிக்க முடிகி றது.

உலகின் அனைத்து இடங்களிலிருந் தும் ஆலயத்துக்கு நிதி சேகரிக்கும் ஆலயங்களின் நிலை அதைவிடவும் மோசமாக இருக்கிறது. இதில் பலர் இவை எல்லாம் மக்களின் பணம் என்ற ஒரு விடயத்தினை மறந்து விடுகிறார்கள்.

காலத்துக்குக் காலம் மாறிவருகின்ற உலகத்தில் தமது அசட்டு கௌரவம், பிடிவாதம், வீண்வாதங்களுடன் ஆல யங்களை நடத்திச் செல்ல முற்படு வதானது, எதிர்காலச் சந்ததியினருக்கு பிழையானதொரு இருப்பினை விட்டுச் செல்வதற்கான வாய்ப்புக்களையே ஏற்படுத்தும்.

ஒவ்வொரு ஆலயங் களும், தங்களது கிரா மங்களில் உள்ள கலை களை வளர்க்கவும், அப் பிரதேசக் கல்வி அறிவினை அதிகரிக்கவும், தொழிலற்ற வர்களுக்கு தொழில் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், என திட்டங்களை முன்வைத்து செயற்பட முற்படுமாக இருந்தால் அப்போது சிறப் பானதொரு மேம்பாட்டு நிலையைக் கண்டடைய முடியும்.

இந்துக்களின் பாரம்பரியங்கள் வெறு மனே இன்று நேற்று உருவாக்கப்பட்ட வைகள் அல்ல. அவற்றின் ஒழுங்கு முறைகள் சாதாரணமானவைகள் அல்ல என்பது ஒவ்வொரு புதிய பரம்பரைக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும், திருவிழாக்களும், ஒவ்வொரு மனிதனை யும், நன்நெறிப்படுத்தும் மற்றும் சமூக மயமாக்கும் செயற்திட்டங்களாகும்.

அவ்வாறான ஒழுங்கு விதிமுறைகள் வழிமுறைகள் இருக்கையில், ஆலயங்கள் தமது சொத்துக்கள் என்ற போர்வையில் ஒரு சிலர் செயற்படுவதானது, எதிர்காலத் தில் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

பல முக்கிய ஆலயங்கள் தனிக் கிராமங்களின் நிருவாகங்களுக்குக் கீழும் சில கிராமங்களின் நிருவாகங்கள் இரண்டு கிராமங்களின் கீழும் தங்கியிருக்கின்றன. அவ்வாறான இரண்டு கிராமங்களின் கீழ் உள்ள சில ஆலயங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றுக்குத் தீர்வுகள் எவராலும் எடுக்க முடியாதவைகளாக ஆகிவிடுகின்றன.

ஞானஸ்தானம் கிறிஸ்தவர்களுக்கும், சுன்னத்து இஸ்லாமியர்களுக்கும் இருப்பது போன்று இந்துக்களுக்கு கட்டாயமான கடமைகள் எதுவுமில்லாது இருக்கின்றமையானது, எந்தவிதமான தடைகளும் இல்லாது இருந்து விடக்கூடிய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்து சமயத்தில் இருக்கின்ற முழுமையான மதச்சுதந்திரத்தினை அறிந்து கொள்ள முடியாதவர்கள் வேறு மதங்களுக்குச் செல்வதும் உண்டு. இந்தக் கட்டுரையின் நோக்கம் பற்றி யாரும் பிழையாக புரிந்து கொள்ளக் கூடாது. இது இந்துக்களின் ஆலயங்கள் சிலவற்றின் செயற்பாடுகள் குறித்து விளக்கங்களைக் கொண்டு வருவதற்காக எழுதப்படுகிறது. மாறாக அனைத்து ஆலயங்களுக்கும், நிர்வாகங்களையும் இக்கட்டுரை தனது சுட்டு விரலைக் காட்டவில்லை. நேர்மையான வழி யில் செயற்பட்டு மக்களுக்கு நேர் வழியைக் காட்டுகின்ற எத்தனையோ இந்து ஆலயங்கள் எம்மை சூழ்ந்து காணப்படுவது மறுப்பதற்கில்லை.

கோடிக்கணக்கில் வருட வருமானங்கள் பெற்றுக் கொள்ளும் ஆலயங்கள் பல மட்டக்களப்பிலும் இருக்கின்றன எனத் தகவல்கள் தெரி விக்கின்றன. இவ்வாறான கோயில்களில் எந்த அளவுக்கு சுத்தமான கணக்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதில் கேள்விகளும் இருக்கின்றன.

கோயில்களின் தர்மகர்த்தா, தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு மல்லுக்கு நிற்கும் பல-ரைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் அனைவரும் கடவுள் பக்தியுடன்தான் இந்த வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு முண்டியடிக்கிறார்கள் என்றும் எண்ணியிருக்கிறோம். ஆனால் ஏதோ ஒரு விதமான எதிர்பார்ப்பும் கௌரவ-மும் எனப்பல விடயங்களுக்காகவுமே அவர்கள் அவ்வாறு மல்லுக்கு நிற் கிறார்கள் என்பதை இப்போதுதான் அறிந்து கொள்கிறோம்.

ஆலயங்களில் நடைபெறுகின்ற நிதி மோசடிகள் சுத்துமாத்துகள் வீணான நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க வாய்ப்புகளை உருவாக்குகின்றன. அதனை மாற்றிய மைக்க வேண்டுமானால், ஒவ்வொரு அலுயங்களும் மிகவும் வெளிப்படையாக அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். அதே நேரம் ஆலயங்கள் தமது பிரதேசங்களுக்கு அல்லது, கிராமங்களுக்கு எனத் தனிமைப்படுத்தப்பட்டவை எனில் அதே போன்றே அதன் செயற்பாடுகளையும் வைத்துக் கொள்ளலாம்.


ஆலயங்கள் தொட்ர்பிலோ அமைப் புகள் தொடர்பிலோ அவற்றின் பிரச்சி னைகள் வீதிக்கு வந்துவிட்டால் அனைவரும் பேசவும் செய்வார்கள், விசாரிக்கவும் செய்வார்கள் என்பதனை அனைத்து இந்துக்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்க ளின் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள், மிகச் சுதந்திரமான மதக் கடப்பாடுகளை மறந்து மதத்தின் பெயரால் தம்மால் முடிந்த வருமானங்களை பெற்றுக் கொள்ள முயற்சி செய்பவர்கள் அவற்றி லிருந்து விடுபட்டு வாழ முயற்சிக்க வேண்டும். அத்துடன் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள். என்ற வரைமுறைகளை வைத்துக் கொண்டு மதத்தின் பெயரால் மக்களது மனோநிலைகளில் கவலை யான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களையும் உருவாக்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

மதம் என்பது ஒவ்வொரு மனிதனை யும் நல்ல முறையில் வழிப்படுத்தி எதிர் கால சமுதாயங்களினை சிறப்பானதாக அமைத்து கொண்டு செல்வதற்காக என்பதனை எப்பொது எல்லோரும் புரிந்துகொள்கிறார்களோ அப்போதுதான் இந்து மதத்தினரின் ஆலய, மதம் சார் பிரச்சினைகள் தீர்வுக்கு வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

ஒரு சில ஆலயங்களில் நடை பெறுகின்ற தேவைலயற்ற பிரச்சி னைகள், வேண்டத்தகாத வேலைகளால் சிறப்பாகச் செயற்பட்டு மதத்திற்கும், ஆலயத்திற்கும் மக்களுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் செயற்பட்டு வரும் ஆலயங்களுக்கும் அவற்றின் நிருவாகிகளுக்கும் அவப் பெயற்களும் ஏற்பட்டு விடுகின்றன.

அவற்றினை மாற்றியமைப்பதற்கு ஒருமித்த வகையில் விட்டுக் கொடுப்புடன் பாகுபாடுகளை மறந்து மதத்தின் பெயரால் செய்யப்படுகின்ற பிழைகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும்.



# இலங்கை மீதான இந்தியாவின் புதிய பார்வை



- அமலன் -

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக தமிழக மீனவர் பிரச்சினை ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் வைத்து தாக்கப்படுவதாக இந்திய நாளேடுகளில் செய்திகள் வெளியாகின்றன. எனினும் அதனை இலங்கை தரப்பு மறுக்கின்றது. இது வாரத்தில் ஒரு தடவையாவது வரும் செய்திகளாக மாறிவிட்டன. இந்தநிலையில் இதற்கு தீர்வுகாணும் வகையில் அண்மையில் இலங்கைக்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் விஜயம் செய்திருந்தார்.

இந்த இடத்தில் ஒன்றை குறிப்பிடவேண்டும். இதுவரை இலங்கைக்கு இந்திய அதிகாரிகள் வந்து செல்வது சாதாரண விடயமாகவே இருந்து வந்தது. இந்திய அதிகாரிகள் வரும் இலங்கையில் உள்ள தமிழ்மக்கள், இந்தியா, இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண ஏதாவது திட்டத்துடனேயே வருகிறது என்று நினைப்பர். ஆனால் குறித்த இந்திய அதிகாரிகள் வந்து சென்ற பின்னர் அவர்கள் வழமைபோல இலங்கைக்கு வந்து சென்றிருக்கிறார்கள் என்ற எண்ணமே தமிழ் மக்கள் மத்தியில் எழும். இது 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்று வருகின்ற செயலாகவே இருக்கிறது.

எனினும் இதுவரை காலத்தை விட இந்தமுறை இலங்கைக்கு விஜயம் செய்த, இந்திய வெளியுறவு செயலாளர் ரஞ்சன் மாத்தாய், இலங்கையுடன் முன்னர் நேரடியான தொடர்புகளை கொண்டிராதவர் என்று கூறப்பட்டது. ஏற்கனவே இருந்த வெளியுறவுச்செயலாளர்களில் பெரும்பாலானோர் இலங்கையில் உயர்ஸ்தானிகர்களாக இருந்து பதவி உயர்வு பெற்றவர்களாக இருந்தனர். எனவே அவர்கள் இலங்கைக்கு எதிராகவோ அல்லது தமிழ் மக்களுக்குச் சார்பாகவோ நடந்துகொள்ளமாட்டார்கள் என்ற தோற்றப்பாடு இலங்கையின் தமிழ்த்தரப்புக்கள் மத்தியில் கூறப்பட்டு வந்தது. இந்தநிலையில் ரஞ்சன் மாத்தாய், இலங்கையுடன் நெருக்கமான உறவை கொண்டில்லாதவர் என்பதன் காரணமாக அவர் இனப்பிரச்சினை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினையை தீர்த்து விடப்போகிறார் என்று எண்ணுவது இயலாத காரியம்.

ஏனெனில் இந்தியா, தமது வெளிநாட்டுக் கொள்கையில் தீவிரமான கொள்கையை கடைபிடித்து வருகிறது. எனவே அந்தக்கொள்கையில் இருந்து விலகிச்சென்று இலங்கைப் பிரச்சினையை ரஞ்சன் மாத்தாயினால் தீர்க்கமுடியாது. மாறாக ராஜதந்திர முறைகளில் ஏதாவது மாற்றங்களை எதிர்பார்க்கலாம் எனினும் தற்போதைய இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நடப்புகள் யாவும் பிரதமமந்திரி மன்மோகன்சிங்கினால் நடைமுறைப்படுத்தப் படுகின்றதே தவிர அவரால் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய மத்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கைகளை காங்கிரஸின் தலைவி சோனியா காந்தியே தீர்மானிக்கிறார். அதனை பிரதமராக இருந்து மன்மோகன் சிங் நிறைவேற்றுகிறார் என்ற குற்றச்சாட்டு இலங்கை விடயத்தில் மாத்திரம் அல்ல. இந்திய உள்நாட்டு விடயங்களிலும் கூறப்படும் செய்தியாக இருக்கிறது.

குறிப்பாக இந்தியாவில் ஊழல்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் காந்தீயவாதியான அன்னா ஹசாரே. இந்தக் கூற்றை அடிக்கடி கூறிவருகிறார். பிரதமர் மன்மோகன் சிங் நல்லவர் நேர்மையானவர். ஆனால்,அவரால் சுயமாக இயங்க முடியவில்லை என்று அன்னா ஹசாரே கூறிவருகிறார். இந்தியாவில் அப்படியென்றால் இலங்கை விடயத்திலும் மன்மோகன்சிங்கினால் புதிதாக ஒன்றையும் தனித்து நடத்திவிடமுடியாது என்பது இதில் இருந்து தெரிகிறது. அதிலும் முன்னர் இருந்த இலங்கை அரசாங்கங்களை போலன்றி தற்போதைய அரசாங்கம் இந்தியாவுக்கு எளிதில் வளைந்து கொடுக்கும் அரசாங்கம் அல்ல. இலங்கையில் நிரந்தர வெளிநாட்டுக்கொள்கை இல்லாத போதும், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் எந்த நாடும் இலங்கையை தனித்து நின்று எதிராக செயற்படும் நிலையை மாற்றியுள்ளது என்றே கூறவேண்டும்.

முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அடுத்ததாக பிரேமதாஸ, மற்றும் சந்திரிகா ஆகியோர் ஜனாதிபதிகளாக இருந்தபோது, இந்தியாவின் எண்ணங்களை இலங்கை அரசாங்கங்கள் பிரதிபலித்து வந்தன. ஆனால் தற்போது இலங்கை சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கொண்டிருக்கும் உறவு இந்தியாவை இலங்கை விடயத்தில் கவனமாக காய்நகர்த்த வேண்டிய நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. இதற்கு உதாரணமாக இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினையை தீர்க்க ஆழ்கடல் மீன்பிடியை இரண்டு நாட்டினரும் மேற்கொள்ளும் யோசனையை இந்திய புதிய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய், இலங்கை வந்தபோது முன்வைத்திருந்தார். எனினும் இலங்கை அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இது ரஞ்சன் மாத்தாயின் இலங்கை விடயத்தில் முதல் பின்னடைவு என்றே கொள்ளவேண்டும். இந்திய மத்திய அரசாங்கம், வெளியுறவுக்கொள்கையை இறுகப்பிடித்திருந்தாலும் உள்நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் தமது கொள்கைக்கு எதிராக எழுப்பப்பட்டு வரும் குரல்கள் அந்த அரசாங்கத்தின் கொள்கையில் சற்று தளர்வுப்போக்கை காண வைத்துள்ளன.

இதன் அடிப்படையிலேயே தாம் இனப்பிரச்சினை தொடர்பாக பேச இலங்கை செல்லப்போவதாக காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ராகுல் காந்தி கடந்த தமிழக சட்டசபைத் தேர்தலின்போது உறுதிவழங்கியமையை சுட்டிக்காட்டலாம். இந்தநிலையில் இந்தியாவை பகைத்துக்கொண்டு தொடர்ந்தும் சீனா மற்றும் பாகிஸ்தானை நம்பி இலங்கையினால் காய் நகர்த்த முடியாத நிலை ஒன்றும் இல்லாமல் இல்லை ஏனெனில் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் என்று அஞ்சப்படும் போர்க்குற்றச்சாட்டுக்களின் இந்தியாவின் உதவி, நிச்சயம் இலங்கைக்கு தேவைப்படும். அத்துடன் இந்தியாவும் அமரிக்காவும் முன்னரைப் போலல்லாமல் தற்போது நெருங்கிய உறவைக் கொண்டிருக்கின்றன. இது சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் எதிரான போக்குக்கு மகுடம் சூட்டிய நிலையையே குறித்து நிற்கிறது. இந்தநிலையில் அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அழைத்து பேசுவது கூட, இந்திய அமெரிக்க உறவின் ஒரு கட்டமாகவே பார்க்கப்படுகிறது. அத்துடன் நடைமுறையில் சீனாவே அமெரிக்காவின் முதன்மை முதலீட்டாளர் என்ற வகையில் அந்த நாடும் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்காவுக்கு எதிராக எந்தளவு செயற்படும் என்பதும் கேள்விக்குறியாகும்.

எனவே கவனமாக காய் நகர்த்தவேண்டிய கட்டாயத்தில் இலங்கையின் அரசியல் உள்ளது என்பதை மறுக்கவியலாது

> **இந்தியா, தமது வெளிநாட்டுக் கொள்கையில் தீவிரமான கொள்கையை கடைபிடித்து வருகிறது. எனவே அந்தக் கொள்கையில் இருந்து விலகிச்சென்று இலங்கைப் பிரச்சினையை ரஞ்சன் மாத்தாயினால் தீர்க்கமுடியாது. மாறாக ராஜதந்திர முறைகளில் ஏதாவது மாற்றங்களை எதிர்பார்க்கலாம் எனினும் தற்போதைய இந்திய மத்திய அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நடப்புகள் யாவும் பிரதமமந்திரி மன்மோகன்சிங்கினால் நடைமுறைப்படுத்தப் படுகின்றதே தவிர அவரால் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

# விஜய்க்கு வந்தது எச்சரிக்கை!

# அடுத்தது என்ன?

**நடிகர்** விஜய் தொடங்கியிருக்கும் 'மக்கள் இயக்கம்' மற்றொரு ட்ராக்கில் தமது அரசியல் ஆசைகளை பூர்த்தி செய்ய சில நகர்வுகளை சொந்தமாக செய்வது அ.தி.மு.க. தரப்பை எரிச்சல்

தொடக்கத்திலேயே வெட்டிக் கொண்டது அ.தி.மு.க. தலைமை.

ஆனால், உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரங்கள் உச்சத்தில் இருக்கும் நேரத்தில் தென் மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளில் இருந்து அ.தி.மு.க.

என்று சூடாகவே சொற்கள் வந்து விழுந்திருக்கின்றன. அதன் பின்னர்தான் சந்திரசேகருக்கு, இதெல்லாம் சினிமா அல்ல, நிஜமாகவே நெருப்புடன் விளையாடுவது என்ற விஷயம் புரிந்திருக்கின்றது.

தேர்தலுக்கு தேர்தல் அணி மாறுவது நல்லதல்ல. அப்படி செய்தால் அந்த இயக்கத்தால் வளர முடியாது. இந்த தேர்தலில் அ.தி.மு.க. தனியாக போட்டியிடுவதால், அ.தி.மு.க.வுக்கு ஆதரவான

படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதையடுத்து, விஜய்யின் தகப்பனார் எஸ்.ஏ.சந்திரசேகருக்கு சூடான எச்சரிக்கை ஒன்று அ.தி.மு.க. தரப்பில் இருந்து சென்றிருப்பதாக, தெரியவருகிறது.

விஜய்யும் சந்திரசேகரும் சட்டமன்றத் தேர்தல் நாட்களில் மதுரையில் பரீட்சித்துப் பார்க்க நினைத்த விஷயம் பக்குவமாக அ.தி.மு.க. தலைமைக்கு எடுத்துச் சொல்லப்பட்டதில், அம்மையாரின் நற்பெயர் பட்டியலில் இருந்து விஜய்யின்

தலைமைச் செயலகத்துக்கு புகார் மேல் புகார்கள் வரத் தொடங்கின. அ.தி.மு.க. வேட்பாளர் ஒருபக்கமாக பிரச்சாரம் செய்ய, விஜய் இயக்கத்தினர் அதே தொகுதியில், தமது சொந்த வேட்பாளரை, 'அ.தி.மு.க. ஆதரவு பெற்ற வேட்பாளர்' என்று விறுவிறுப்பாக பிரச்சாரம் செய்ய, ஏகப்பட்ட குழப்பங்கள். இறுதியில், சென்னையில் வைத்து சந்திரசேகரிடம், "இதையெல்லாம் உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் அவரோ, இது

திருச்செந்தூரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், "உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் மக்கள் இயக்கத்தினர் அனைவரும் போட்டியில் இருந்து விலக வேண்டும். அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்படவேண்டும்" என்று அறிவித்தார்.

போட்டியிடும் ஆட்கள் யார் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அவர்கள் போட்டியிட அனுமதி கொடுத்ததே இவர்தான் என்கிறார்கள். பேசாமல், அவர்களை தொடர்பு கொண்டு போட்டியில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும்படி கூறி, ஓசைப்படாமல் காரியத்தை முடித்திருக்கலாம்.

நிலைபாட்டை நாம் எடுத்து உள்ளோம்" என்று கூறியிருக்கிறார்.

இந்தத் தேர்தலில் மட்டுமென்ன, அடுத்த தேர்தலிலும் அ.தி.மு.க. கூட்டணியில் இவர்கள் பெயர் இடம்பெற சந்தர்ப்பம் அவ்வளவாக இல்லை. காரணம், எஸ்.ஏ.சந்திரசேகர் ஸ்டைல் அரசியல் ஜெயலலிதாவுக்கு சரிப்பட்டு வராது.

எமது ஊகம் சரியாக இருந்தால், இப்படி ஒரு அறிக்கை விட்டுவிட்டு, திரை மறைவில் தமது இயக்க ஆட்களை போட்டியில் இருந்து விலக வேண்டாம் என்று சிக்னல் கொடுக்க



(நன்றி இணையம்)

பெயர் கிட்டத்தட்ட காணாமலேயே போய்விட்டது என்கிறார்கள் அம்மையாருக்கு நெருக்கமானவர்கள்.

இந்த விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ, உள்ளாட்சித் தேர்தலில் விஜய்யின் மக்கள் இயக்கம் ஆட்களை வேட்பாளர்களாக இறக்க சந்திரசேகர் முடிவு செய்தார். சுருக்கமாகச் சொன்னால், அ.தி.மு.க.வின் பெயரை சொல்லிக் கொண்டு, தனி ட்ராக்கில் ஓட விரும்பும் இவர்களது இயக்கத்தை

எதுவுமே தனக்குத் தெரியாதது போல நடித்திருக்கிறார். விஜய் ரசிகர்கள் சிலர் ஆர்வக் கோளாறில் தாங்களாகவே முடிவு செய்து தேர்தலில் நின்றிருக்கலாம். அதற்கும் எமக்கும் தொடர்பு இல்லை என்ற ரூட்டில் அவர் போயிருக்கிறார். இது அம்மையாரை ரொம்பவும் எரிச்சலடைய வைத்துவிட்டது.

"ஓகோ, உங்களுக்குத் தெரியாதா? அப்ப சரி. அவர்களை எப்படி கவனிப்பது என்று எங்களுக்குத் தெரியும்"

அப்படிச் செய்யாமல் பப்ளிக்காக வேண்டுகோள் விட்டதன் காரணம், அ.தி.மு.க.வை சாந்தப்படுத்த என்கிறார்கள்.

அவரது பகிரங்க வேண்டுகோளில், "எமது மக்கள் இயக்கத்தின் கட்டுப்பாட்டை மீறி யாரேனும் போட்டியிட்டால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் இயக்கத்தின் பெயரையோ, படத்தையோ, கொடியையோ, விஜய்யின் பெயரையோ பயன்படுத்த கூடாது.

விரும்புவார் எஸ்.ஏ.சந்திரசேகர். அது அவரது ஸ்டைல். அதை அவர் செய்வது?, செய்யாமல் விடுவதும், அ.தி.மு.க.வில் இருந்து கொடுக்கப்பட்ட எச்சரிக்கை எவ்வளவு சூடானது என்பதில் தங்கியுள்ளது.

ஒருவேளை அவர் ரிஸ்க் எடுத்து, தனது ஸ்டைலில் அ.தி.மு.க.வை ஏமாற்ற முயன்றால், அதன்பின்தான் ஜெயலலிதாவின் ஸ்டைலைக் காண வேண்டியிருக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.

> கீழ்த்தரமான தந்திரங்களினால், இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்து விட முடியாது.
>
> — விவேகானந்தர்

## வாரம் ஒரு திருக்குறள்




### அறிவுடைமை

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

குறள்:423

# சேவை




ஒரு ஊரில் வயதான செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. ஆனால், அவருக்கு வாரிசு இல்லை. எனவே அவர் அதிகளவு தான, தர்ம காரியங்களில் ஈடுபட்டார். அவருக்கு உதவியாக செல்வம், மருது என்ற இரண்டு இளைஞர்கள் பணிபுரிந்தனர்.

செல்வந்தர் தனக்குப் பிறகு, இவர்களில் யாரிடம் பொறுப்பை ஒப்படைப்பது என்று குழம்பினார். எனவே இருவருக்கும் ஒரு சோதனை நடத்த முடிவு செய்தார்.

அதன்படி, ஒருநாள் இருவரிடமும் சிறிது பணத்தைக் கொடுத்தார்.

"நண்பர்களே! உங்கள் இருவரிடமும் பணம் கொடுத்துள்ளேன். இந்தப் பணத்தைக் கொண்டு விலைமதிப்பற்ற ஒன்றை வாங்கி வாருங்கள். ஒரு வார காலம் உங்களுக்கு அவகாசம் தருகிறேன்" என்று கூறினார்.

இருவரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு தனித்தனியாகப் பிரிந்து சென்றனர்.

ஒரு வாரத்திற்குப் பின்... இருவரும் வீட்டிற்கு திரும்பி வந்தனர். "மருது நீ என்ன கொண்டு வந்துள்ளாய்?" என்று கேட்டார், செல்வந்தர்.

"ஐயா, நீங்கள் கொடுத்த பணத்திற்கு நான் நவரத்தின கற்கள் வாங்கி வந்துள்ளேன். இவை அதிர்ஷ்ட கற்கள். இதை அணிபவருக்கு யோகம் கூடும். எனவே, நான் பல சிரமங்களுக்கு இடையே இதைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான், மருது.

"அப்படியா? மகிழ்ச்சி. செல்வம், நீ என்ன வாங்கினாய்?" என்று செல்வத்தைப் பார்த்துக் கேட்டார்.

"ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். நான் சென்ற ஊரில் குடிநீர் பஞ்சம் தலைவிரித்தாடியது. எனவே, நீங்கள் கொடுத்த பணத்தைக் கொண்டு, ஒரு ஆழ்துளைக் கிணறு வெட்டி, குடிநீர்த் தொட்டிக்கு ஏற்பாடு செய்யப் பணத்தை வழங்கிவிட்டேன்" என்றான்.

செல்வந்தர், செல்வத்தைக் கட்டித் தழுவினார்.

"மிக்க மகிழ்ச்சி, செல்வம். மக்களின் தாகத்தைப் போக்கி, நிலையான பெயரைப் பெற்று விட்டாய். உன்னைப் போன்ற தயாள குணம் உடையவனைத் தான் எனது சொத்துக்களுக்கு வாரிசாக நியமிக்க எண்ணி இருந்தேன். இனி நீ தான் எனது சொத்துக்கு வாரிசு. இந்தப் பணத்தை ஏழைகளின் நலனுக்குச் செலவிடு" என்றார், மகிழ்ச்சியுடன்.

"அப்படியே செய்கிறேன் ஐயா!" என்றான், செல்வம்.

**கதை உணர்த்தும் நீதி:** பிறருக்குச் சேவை செய்யும் போது தான் மனிதன் உன்னத நிலையை அடைய முடியும். அப்போது அவனது தேவையும் தானாகவே நிறைவேறிவிடும்.

## வாரம் ஒரு நாடு




# கயானா

**தலைநகர்** : ஜோர்ஜ் டவுன்
**பரப்பளவு** : 2 இலட்சத்து 14 ஆயிரத்து 999 சதுர கிலோமீற்றர்
**மக்கள் தொகை** : 8 இலட்சத்து 59 ஆயிரம்
**எழுத்தறிவு** : 100 சதவீதம்
**மொழி:** ஆங்கிலம், இந்தி, உருது, கிரியோல்
**மதம்:** கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம்
**அமைவிடம்:** தென் அமெரிக்காவின் வடகிழக்கே அமைந்துள்ள நாடு கயானா. இதன் கிழக்கில் சூரினாம், தெற்கு மற்றும் தென்மேற்கில் பிரேசில், மேற்கில் வெனிசுலா, வடக்கில் அட்லாண்டிக் கடல் ஆகியவை அமைந்துள்ளன.
**விளைபொருட்கள்:** கரும்பு, அரிசி, தேங்காய், எலுமிச்சை, சர்க்கரை, அரிசி, அலுமினியம் போன்றவை.
**தொழில்கள்:** சுரங்கத் தொழில், துணி ஆலைகள்
**ஏற்றுமதிப் பொருட்கள்:** தங்கம், வைரம்.

## சூரியனில் புயலா?



பூமியில் புயல் வீசுவதைப் போல, சூரியனிலும் புயல் வருமா? இந்த கேள்விக்கு உங்களுக்கு விடை தெரியுமா? சூரியனில் தோன்றும் புயல், காற்றால் வருவது கிடையாது. அங்கேதான் பூமியைப் போல காற்று மண்டலமே கிடையாதே. (இப்ப உங்களுக்கு ஞாபகத்துக்கு வந்திருக்குமே..!) சரி... சூரியன் என்றால் ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற வாயுக்களின் கலவை தான் சூரியன். சூரியன் அதிகப்படியாக வெப்பத்தை உமிழ்வதால்தான், ஒளிருது. சூரியனில் வேகமாக புயல் அடித்தால், பூமிக்கு எந்த ஆபத்தும் கிடையாது. ஆனால், ரேடியோ தொடர்பு மட்டும் பாதிக்கப்படும். சூரியனின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலை எவ்வளவு தெரியுமா? 6 ஆயிரம் டிகிரி. மேற்பரப்பிலயே இப்படி என்றால், அதுக்குள்ளே எப்படி இருக்கும்? நாலு கோடி டிகிரியாம்.

## முயல்களின் நடுக்கத்திற்கு காரணம்



துள்ளித் துள்ளி அழகாக விளையாடும் முயல்குட்டியைத் தொட்டுப் பார்த்திருக்கிறீர்களா, குட்டீஸ்? ரொம்ப பயப்படும் இல்லையா? அதை காதைப் பிடிச்சுத் தான் தூக்குவார்கள், ஏன் தெரியுமா? அது ஏன் இப்படி பயந்து நடுங்குகிறது. முயல், மற்ற விலங்குகளைப் போல தைரியமாக இருப்பதில்லை. பயந்த சுபாவம் உள்ளவை. முயல் கூட்டத்திலும் ராஜா, ராணி, வில்லன், சேவகன் மாதிரி நிறைய பேர் இருப்பார்கள். ஆண் முயல் கொஞ்சம் சாது தான். தங்குவதற்கு வசதியாக பள்ளம் தோண்டுவது, குட்டிகளைக் கவனிப்பது எல்லாமே பெண் முயல்தான் செய்யுது. குட்டிகளுக்கு ஒரு சின்ன ஆபத்து என்றாலும் சும்மா இருக்காது. தைரியமாக, ஆபத்தை எதிர்த்து போராடும். அதேபோல் குட்டிகளும், அம்மா முயலோடு வளரும் வரை அடக்கமாகத் தான் இருக்கும். இன்னொரு முக்கியமான விஷயம். முயலுக்கு தனது பலமும், செல்வாக்கும் அதிகமாகினால் உடனே தான் வசிக்கும் பொந்தையும் பெரிசாக்கிக் கொண்டே இருக்குமாம்.

## பொது அறிவு

* முதன் முதலில் கிரிக்கெட்டில் உலகக்கோப்பையை வென்ற நாடு எது? – மேற்கு இந்தியத்தீவுகள்
* கிரிக்கெட் ஆடுகளத்தின் நீளம் என்ன? – 22 அடி
* இந்தியாவின் தேசிய விளையாட்டு எது? – ஹொக்கி
* ஒலிம்பிக் துவங்கப்பட்ட ஆண்டு எது? – கி.மு.766
* தேசிய பஞ்சாயத்து என்று அழைக்கப்படும் பாராளுமன்றம் உள்ள நாடு எது? – நேபாளம்

# பாப்பா முரசு



## மீன்மழை பெய்வது எப்படி?



சுழல் காற்று அடிக்கும் போது, காற்றானது தரையில் கிடக்கும் இலை, தழைகளையும், சருகுகளையும் மேலே இழுத்துச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதேபோல், நன்னீர் குளத்திலும் சுழல் காற்று அடிக்கும்போது அதில் உள்ள மீன்களையும் சேர்த்து காற்று மேலே அள்ளிச் சென்று விடுகிறது. மேகம் குளிர்ந்து மழை பெய்யும் போது, மேலே சென்ற மீன்கள் மழைநீரோடு சேர்ந்து கீழே விழுந்து விடுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.10.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.912**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 910

**பரிசுக்குரியவர்:** உ.நிதர்சன், யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. யூ.விஷாக்கா, மிலேனியா, தோணிக்கல், வவுனியா.
02. யோகரா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
03. எஸ்.கீர்த்தனா, புன்னைநீராவி, விசுவமடு.
04. வை.நந்தகோபன், செங்கலடி, மட்டக்களப்பு.
05. க.ஜெசிக்கா, கொக்குவில், யாழ்ப்பாணம்.
07. ம.ராகேஷ், கடற்கரைவீதி, நீர்கொழும்பு.
08. எம்.கயல்விழி, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
09. து.மிதுலன், தென்னங்கும்புர, கண்டி.

## வழிகாட்டுங்கள்



## பூமியின் வெப்பநிலை மாறுமா?

பூமியின் அடியில் வெப்பநிலை மாறிக் கொண்டே இருக்குமா? இருக்காது. நமக்குப் பூமியின் மேல் பருவகால வேறுபாடுகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. ஒரு இடத்தில் சற்று நேரத்திற்கு முன்பு வரை வெப்பம் அதிகமாக இருக்கும். அதன் பின்னர் கொஞ்சம் மழை பெய்தாலும், அங்குள்ள வெப்பநிலை மாறிவிடும்.

பாரிஸில் வான ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. அங்கு தரைக்குக் கீழே 28 மீற்றர் ஆழத்தில் பாதாள அறை ஒன்று உள்ளது. அங்கு 150 ஆண்டுகளுக்கு முன்பாக லவாய்ச்சர் என்பவர் வெப்பமானி ஒன்றை அமைத்து இருந்தார். அது ஒரே மாதிரி 11.7 சென்டிகிரேட் டிகிரி வெப்பநிலையைத்தான் இன்று வரை காட்டிக் கொண்டிருக்கிறது.

# உடலை பலவீனமாக்கும் குளிர்பானங்கள்!



இப்போது, எந்த விசேஷமாக இருந்தாலும் அங்கே குளிர்பானங்கள் முக்கிய இடம்பிடித்துவிடுகின்றன. வண்ண வண்ண நிறங்களில் அந்த குளிர்பானங்களை கிளாசில் சப்பிக் குடிப்பதில் தனிப்பெருமை இருப்பதாக பலரும் நினைக்கிறார்கள். இன்னும் சிலர் இதைவிட பல படி மேலே போய் சாப்பிடும்போது குடிநீருக்கு பதிலாக இந்த குளிர்பானங்களையே பயன்படுத்துகின்றனர்.

இப்படி, தொடர்ந்து கலர் கலராக குளிர்பானங்களை வயிற்றுக்குள் தள்ளி வந்தால் உங்கள் உடல் எலும்புகள் பலவீனமடைந்து விடும் என்று எச்சரிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கிரீஸ் நாட்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் இது உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி குடித்து வரும் இந்த குளிர்பானங்களின் அளவு மிகவும் அதிகரித்தால் உடல் உறுப்புகள்கூட செயலிழக்கலாம், நீரிழிவு நோயும் ஏற்படலாம் என்பதும் அந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.


குளிர்பானங்கள் உடலில் எந்தவித மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி அந்த ஆய்வாளர்கள் கூறும்போது, "குளுக்கோஸ், பிரக்டோஸ், காபின் போன்ற மூலக் கூறுகள் குளிர்பானங்களில் அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்ட குளிர்பானம் அதிகம் குடித் தால் உடலில் உள்ள பொட்டாசியத்தின் அளவு குறைந்துபோய் விடுகிறது. அதன்காரணமாக உடலின் தசைகள் சக்தி இழந்து விடுகின்றன. மேலும், சிறுநீரகத்திற்கு அதிக வேலை கொடுத்து அங்கேயும் பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றன. அத்துடன், உடல் பருமனையும் ஏற்படுத்தி இல்லாத நோய்களையும் வரவழைத்து விடுகின்றன" என்று தெரிவித்தனர்.

நீங்களும் குளிர்பான பிரியர் என்றால் இப்போதே நீங்கள் சாப்பிடும் குளிர்பானத்தின் அளவை குறைத்துக் கொள்ளுங்கள். அல்லது, குளிர்பானம் குடிப்பதையே தவிர்த்துவிடுங்கள்.

# மீன் சாப்பிட்டால் சருமம் பளபளக்கும்

மீனில் காணப்படும் 'ஓமேகா 3' என்ற பொருள், நம் சரும செல்களை புதுப்பிப்பதோடு, சருமத்தை பளபளக்கவும் செய்கிறது. அதனால், வாரத்துக்கு 3 நாள் மீன் சாப்பிடுவது நல்லது. மீன் சாப்பிடாதவர்கள் மீன் மாத்திரை சாப்பிடலாம்.

சோயாபீன்சை வாரத்துக்கு 3 நாள் உணவில் சேர்த்துக் கொண்டால் சருமம் புதுப்பொலிவுடனும், ஈரப்பசையுடனும் இருக்கும். முகப்பருக்களும் வராது.



கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் சருமத்தை பொலிவுடன் வைக்கும். ஒரேஞ்சு, பப்பாளி, பூசணி,



மாம்பழம் சாப்பிட்டாலும் சருமம் பொலிவுடன் இருக்கும்.

சிலர் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும், அவர்களது முகத்தில் ஏதோ ஒரு சோகம் இழையோடிக் காணப்படுவதுபோல் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் தினமும் அதிகளவில் தண்ணீர் குடிப்பது நல்லது. அவ்வாறு தண்ணீர் குடித்து வந்தால் சருமம் புத்துணர்ச்சி பெற்று ஈரப்பசையுடன் இருக்கும். குறைந்தது ஒரு நாளுக்கு 3 லீற்றர் தண்ணீராவது குடிக்க வேண்டும். அதற்கு மேல் குடித்தாலும் தப்பில்லைத்தான்.




**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றன.**

திடீரென்று கெட்ட மிருகங்கள் இருக்கும் காட்டுக்குள் தூக்கிவீசப் பட்டது போல இருந்தது பூலானுக்கு.

நேற்றுவரை எத்தனை சந்தோசமாக எத்தனை குதூகலமாக இருந்தது.

இப்போது எல்லாம் போய்விட்டது.

'என் துர்க்கையம்மா. நல்ல பாதையைக் காட்டுகிறாய் என்று நினைத்தேன். பாதித் தூரத்தில் இப்படித் தூக்கி முட்புதர்மேல் என்னை எறிந்துவிட்டாயே தாயே! என்று வருந்தினாள் பூலான்.

அன்று இரவு பூலானுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது.

"குருஜி உன்னை அழைக்கிறார். என்னவென்று கேள் போ!" என்று மல்லா சொன்னதும் முகத்தில் ஓங்கி அறைபட்டது போல நிலை குலைந்து போனாள் பூலான்.

மல்லாவும் தெரிந்துதான் தன்னை அவனுக்குக் கொடுக்கப்போகிறானோ என்று பூலானுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

குருதட்சணை என்று பூலான் கேள்விப்பட்டிருக்கிறாள். தட்சணையாகக் கொடுக்க மல்லா தயாராகிவிட்டானோ என்று நினைத்தபோதே கண்களிலிருந்து பொலபொலவென்று கொட்டத் தொடங்கியது.

மல்லா, பூலான் அழுவதைப் பார்த்துவிட்டான். ஒன்றும் புரியாதவனாக அவளின் தாடையைத் தொட்டு நிமிர்த்தி, "ஏன் இப்போது அழுகிறாய்? என்ன நடந்துவிட்டது!

ஓ... குருஜியைக் கண்டதும் பயந்துவிட்டாயா? முண்டம், முண்டம், குருஜி ரொம்ப நல்லவர் தெரியுமா? வெந்நீர் வைத்துக் குளிக்கவேண்டுமாம். அதுதான் கூப்பிடுகிறார் போ! நானும் பின்னால் வருகிறேன் போ கண்களைத் துடைத்திட்டுப் போ!"

'மல்லா! நீ ஏமாந்து கொண்டிருக்கிறாயா? அல்லது நீயும் சேர்ந்து என்னை ஏமாற்றுகிறாயா என்று கத்த வேண்டும் போல, மல்லாவின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து உலுப்ப வேண்டும் போல இருந்தது பூலானுக்கு.

பேசாமல் மல்லா சொன்னபடியே ஸ்ரீராம் இருந்த அறையை நோக்கிப் போனாள்.

போகும்போது மின்னலாக



அந்த யோசனை எழுந்தது அவளிடம்.

மல்லாவையும் ஸ்ரீராமையும் பிரிப்பது என்றால் நேரடியாக எதிர்ப்பதும், முரண்டு பிடிப்பதும் கூடவே கூடாது.

பாபுசிங் குஜாரை அறைக்குள் பூலான் நுழைந்ததுமே பின்புறமிருந்து பக்கவாட்டில் இருந்து ஓர் உருவம் அசைந்தது போலிருந்தது.

அதனை உணர்ந்து உணர்ந்து பூலான் திரும்பிப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பமின்றி பின்புறமிருந்து அவள் கட்டியணைக்கப்பட்டாள். உடம்பெங்கும் ஒரு வெறித்தனத்துடன் கைகள் பரவக் கண்டாள்.

பின்புறமாக நின்று அவளைக் கட்டி அணைத்துக் கொண்டே தன் கைகளை அவசரஅவசரமாகப் பரவவிட்டுக்கொண்டு மூச்சிரைத்தான் ஸ்ரீராம்.

பூலான் அசையவில்லை.
பூலான் திமிறவில்லை.
பூலான் அஞ்சவில்லை.

விக்ரம் மல்லா சொல்லிக் கொடுத்த பயிற்சியை நினைத்தாள்.

அப்படியே சற்று முன்னால் நகர்ந்து, அவன் கைகள் தன் மீது பரவிக் கொண்டிருப்பதைத் தடுக்காமல் மெல்ல உடலை முன்னோக்கிச் சரித்து, தன் இடக்காலை பின்புறமாய் மடக்கி, சட்டென்று நன்றாக உடலை முன்னோக்கி வளைத்தபடி குதிக்காலால் அவன் இடுப்புக் கீழே மையமாக உதைத்தாள்.

"ஹக்.. ய..யம்மா" என்றொரு முனகலுடன் பின்னோக்கிப் போய், உதைபந்தாட்ட பிரதேசத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டான் ஸ்ரீராம்.

சட்டென்று திரும்பிய பூலான், குரலில் போலியான அப்பாவித்தனத்துடன், முகத்தில் வரவழைத்த பயத்துடன், "ஐயோ... குருஜி நீங்களா?" என்றாள்.

ஸ்ரீராமுக்குப் பாடம் புகட்டுவதற்காகவே அவன் கைகள் தன் முன் உடம்பில் பரவ அனுமதித்தாள். அவ்வாறு பரவ அனுமதித்தமையால் ஸ்ரீராம் உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிக்கொண்டான்.

பூலானின் உறுதியான உடலின் திண்மைகளும், ஏற்ற இறக்கங்களும் ஸ்ரீராமின் கைகளில் உணரப்பட்டபோது அவன் தன்நிலை மறந்து போனான்.

எத்தகைய கொடியவனாக இருந்தாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனாகிவிடுவது இயல்புதானே!.

எத்தனை பலமானவனாக இருந்தாலும் பெண்ணின் உடலில் கவனம்கொண்டு தொட்டுவிட்டான் என்றால், அதற்கு அனுமதியும் எதிர்பாராமல் கிடைக்கும் போது சித்தம் கலங்கி மயங்கிப் போவான்.

ஸ்ரீராமும் அப்படித்தான் இருந்தான். அதனால்தான் பூலான் அவன் பிடியில் இருந்து தன் உடலை முன்னால் வளைத்தும், குனிந்தும் தன் கால்களைக் கச்சிதமாகப் பின்புறமாக மடக்கியும் ஸ்ரீராமின் அடிவயிற்றின் கீழே மையமாக-அவன் உயிர்நிலையில் உதைக்க முடிந்தது.

பூலானின் குதிக்கால் மிகத் துல்லியமாக அவன் உயிர்நிலையில் 'நச்' என்று உதைத்தது.

பொறிகலங்கிப்போனான் ஸ்ரீராம். அப்படியே தன் இரு கைகளாலும் பொத்திக் கொண்டு, வேதனையில் முகம் விகாரமாகியபடியிருக்க. தரையில் மடங்கி ஸ்ரீராம் அமர, நிதானமாகத் திரும்பிய பூலான்! "குருஜி நீங்களா?" என்ற குரலில் போலியான பயத்துடன், போலியான பதட்டத்துடன் கேட்டாள் அதேநொடியில் விக்கிரம்மல்லாவும் அங்கே வந்துவிட்டதால், ஸ்ரீராம் தன் நடிப்பை நம்பினானா இல்லை என்பதை பூலானால் அறியமுடியவில்லை.

(திருப்பங்கள் தொடரும்...)



# குரல் கொடுக்கிறார் அஜித்

அஜீத்குமார் பில்லா -2 படத்தில் படு பிசியாக இருக்கிறார். அதேபோன்று இயக்குனர் விஷ்ணுவர்தன் சிரஞ்சீவி தம்பியை வைத்து 'பஞ்சா' என்னும் படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த படத்தில் தீராத விளையாட்டுப் பிள்ளையில் நடித்த நடிகை சாரா ஜேன் மற்றும் மாடல் அழகி அஞ்சலி லாவனியாவும் நடிக்கின்றனர்.

இந்த படத்தை தமிழில் மொழி மாற்றம் செய்கிறார் இயக்குநர் விஷ்ணுவர்தன்.

நடிகர் பவன் கல்யாணுக்கு தமிழில் குரல் கொடுக்க யாரை அணுகலாம் என்று யோசித்த அவருக்கு சட்டென்று நினைவுக்கு வந்தது நம்ம தல தான்.

விஷ்ணுவர்தன் பில்லா 2 படத்தில் இருந்து விலகினாலும் அவருக்கும், அஜீத்துக்கும் இடையேயான நட்பு கெடவில்லை.

அதனால் அஜீத்குமாரை அணுகி பவன் கல்யாணுக்கு கொஞ்சம் குரல் கொடுங்களேன் என்று கேட்க அவரும் ஓ.கே சொல்லிவிட்டார் என்று கூறப்படுகிறது.

இந்த படம் டிசெம்பர் மாதம் வெளியிடப்படுகிறது. அஜீத் பில்லா-2 படத்தையும், விஷ்ணுவர்தன் பஞ்சா படத்தையும் முடித்த பிறகு இருவரும் சேர்ந்து பணிபுரியவுள்ளனர்.



# பொலிவூட்டின் பரபரப்பு சமாச்சாரம்

நடிகை பிரியங்கா சோப்ராவும், நடிகர் ஷாஹித் கபூரும் அவ்வப்போது சேர்வதும், பிரிவதும் அனைவரும் அறிந்ததே. ஆனால் இந்த முறை அவர்கள் பிரிந்ததற்கு ஷாருக்கான் தான் காரணமாம். ஷாருக்கானும், பிரியங்கா சோப்ராவும் மிகவும் நெருக்கமாகியுள்ளனர். இதனால் ஷாருக் வீட்டில் ஒரே புகைச்சல். கௌரிக்கும், ஷாருக்கிற்கும் அடிக்கடி தகராறு வருகிறது. அவர்கள் சண்டைபோட்டாலே அதற்கு காரணம் பிரியங்கா சோப்ராவாகத் தான் இருக்கிறதாம். ஏனென்றால் ஷாருக்கும், பிரியங்காவும் எப்பொழுது பார்த்தாலும் ஒட்டி, உறவாடுகிறார்களாம். அப்ப பொண்டாட்டிக்கு கோபம் வரத் தானே செய்யும். ஷாஹித் கபூரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாராம். என்னடா காதலன்னு நான் ஒருத்தன் இங்க இருக்கேன். என்ன மதிக்காம பிரியங்கா எப்ப .பார்த்தாலும் ஷாருக்குடன் ஊர் சுற்றுகிறாரே என்று கடுப்பான ஷாஹித் உனக்கும், உன் காதலுக்கும் ஒரு பெரிய கும்பிடு என்று சொல்லிவிட்டு இடத்தை காலிபண்ணிவிட்டாராம்.

ஷாருக் பெயரைச் சொல்லும் போதெல்லாம் பிரியங்கா வெட்கச் சிரிப்பு சிரித்து ஷாஹித்துக்கு கடுப்பேற்றியுள்ளார். எத்தனை நாட்கள் தாங்குவார் அவரும். இப்பொழுது பிரியங்கா ஷாருக்குடன் இருக்கிறார். ஆனால் ஷாஹித் ஆள் கிடைக்காமல் தனியே, தன்னந் தனியே இருக்கிறார்.

# தன்னையே தானம் செய்தார் சினேகா

நடிகர் கமலஹாசன் ஏற்கனவே உடல் தானம் செய்து பத்திரத்தில் கையெழுத்திட்டுள்ளார். அவரை தொடர்ந்து நடிகை சினேகாவும் உடல் தானம் செய்கிறார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில், சமூகத்துக்கு ஒவ்வொரு வரும் நல்லது செய்ய வேண்டும். எனது பிறந்த நாள் விழாவினை ஏழைகளுக்கு உதவிகள் வழங்கி கொண்டாடுகிறேன். இவ்வருட பிறந்த நாளில் மாற்றுத் திறனாளிகளுக்கு விருந்து கொடுத்து கொண்டாடினேன். இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இரு வருடங்களுக்கு முன் எனது கண்களை தானம் செய்தேன். விரைவில் உடல் தானம் செய்யவும் முடிவு செய்துள்ளேன். ரசிகர்கள் கண்களை தானம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

சினேகா தற்போது முரட்டுக் காளை, விடியல் ஆகிய இரு படங்களில் நடித்து வருகிறார். தெலுங்கில் ராமண்ணா என்ற படத்திலும் நடிக்கிறார்.



# ஆசை அ…


வழக்கமாக ரசிகர்கள் தான் நடி…
ஆனால் டாக்டர் சீனிவாசனே…
என்ற வைத்துக் கொண்…
வருகிறார். தான் நடிக்…
சேர நித்யாமேனனை…
இதை சற்றும் எதி…
போய்விட்டாராம்.
அதிர்ந்த அவர் …
சீனியர்களுடன் …
என்று கூறி அனு…
இவரது லத்திகா …
நாட்களைத் தான…
திரை யுலகினரை …
ஆழ்த்தியுள்ளது. …
சற்றும் சளைக்காமல்…
தொடர்ந்து விளம்பரம்…
கொண்டிருக்கிறார்
சீனிவாசன். 50 வய…
தாண்டிய இவர் நடி…
கதாநாயகனாக தா…
நடிப்பாராம். அதுவு…
இளம் நாயகிகளுட…
தானாம்! அதற்காக …
நித்தியாவுக்கு ரூ. 1…
வரை சம்பளம் தரு…
தெரிவித்திருக்கிறார்.…
அவர் 1 கோடி தரு…
நித்யாவுக்கு அதிர்ச்சி தரவி…
மாறாக, கூட நடிக்குமாறு …
அதிர்ச்சியாகிவிட்டது. சினி…
உலகில் வாய்ப்பு தேடி வ…
பிடிக்காவிட்டால் நேரடியா…
கூறமாட்டார்கள் ஏதாவது …
சொல்லி வேண்டாம் என்…
விடுவார்கள். அதே
பாணியில், நாசூக்காக …
நடிகர்களுடன் நான் ந…
என்று கூறியுள்ளார். …
கேட்ட பவர் ஸ்டாரு…
கொஞ்ச நேரம் பவ…
போய்விட்டது.

# உலகம் ரசிக்கும் நாயகி

சமீபத்தில் வியூகிளிப் வீடியோ நிறுவனம் செப்டெம்பர் மாத அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி, உலகளவில் முதல் 10 பிரபலங்களில் கரீனா கபூர் 4ஆவது இடத்திலும் மற்றும் சோனக்ஷி சின்ஹா 6ஆவது இடத்திலும் உள்ளனர்.

மேலும், இந்தியாவில் அதிகம் பார்க்கப்பட்ட வீடியோக்களில் அஜய் தேவ்கான் நடிப்பில் வெளியான ராஸ்கல்ஸ் படத்தில் கங்கனா ரணாவத் நீச்சல் உடையில் வருவது பார்க்கப்பட்டது. வித்யா பாலன் நடிக்கும் டர்ட்டி பிக்சர்ஸ், நடிகை ராக்கி சாவந்த் யோகா குரு பாபா ராம்தேவை திருமண செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தது ஆகியவை பிரபலமாக பார்க்கப்பட்டது என வெளியிட்டுள்ளது. உலகளவில், அப்பிள் ஐ-போன், பிளாக் பெர்ரி, நொக்கியா செல்போன்கள் உள்ளிட்ட 10 மொபைல் சாதனங்களின் அடிப்படையில் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.





# சோனியாவின் மகிழ்ச்சியான சுற்று

சோனியா அகர்வால் மீண்டும் பெரிய நடிகர்களின் கூட நடிக்க விரும்புகிறார்.

சோனியா அகர்வால் பல வருடங்களுக்கு முன் ஸ்ரீகாந்துடன் நடித்த சதுரங்கம் படம் தற்போது வெளியாகி உள்ளது. ராஜ்கிருஷ்ணா இயக்கும் ஒரு நடிகையின் வாக்குமூலம் படத்தில் நடித்து கொண்டு இருக்கிறார்.

அடுத்து மணிமாறன் இயக்கும் தீர்வு படத்துக்கு ஒப்பந்தமாகியுள்ளார் சோனியா அகர்வால். சினி-மாவில் தனது 2ஆவது சுற்று மகிழ்ச்சி தரும்விதமாக உள்ளது என்கிறார் நடிகை சோனியா. இதுகுறித்து சோனியாஅகர்வால் கூறியதாவது, சினிமாவில் மீண்டும் நடிக்க வந்திருப்பது சந்தோஷமாக உள்ளது என்கிறார். நல்ல கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். தீர்வு என்ற படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளேன் என்று கூறினார். இதில் எனக்கு வலுவான கதாபாத்திரத்தின் கதை ரொம்ப பிடித்தது. எனவே நடிக்க ஒப்புக்கொண்டேன் என்றார். என் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களாகவே வருகின்றன என்று கூறுகிறார்.

# பட்டது போதும்…

மங்காத்தா படம் வெற்றியானதற்கு அதில் நடித்த நடிகர் … விருந்து வைத்தார். மது விருந்தில் கலந்து கொண்ட கவர்… நடிகை சோனா பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.பி. சரண் தன்னோடு தகாத வழியில் நடக்க முயன்றதாக பொலிசில் புகார் கொடுத்தார்.

ஓடியோ ஆதாரங்களையும் கொடுத்தார். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சரணை சும்மா விடமாட்டேன் என்று வீரவசனம் பேசிய சோனா கடைசியில் சமாதானம் ஆகிவிட்டார்.

மன உளைச்சல் காரணமாக ஒரு ஆண்டுக்கு சினி மாவில் நடிக்கப் போவதில்லை என்றும் அறிவித்தார். சம்பந்தப்பட்ட பார்ட்டியில் வெங்கட் பிரபுவும் இருந்தார் அவரது பெயரும் கூட அடிபடத் தொடங்கியது.

தற்போது இரவுப் பார்ட்டி, மது பார்ட்டி என்றாலே பிரபுவுக்கு அலர்ஜியாகிவிட்டதாம். பார்ட்டிக்குப் போலாமா என்று கேட்டாலே ஓடிவிடுகிறாராம். தன் மகள் ஷிவானியின் பிறந்தநாளை கடந்த ஆண்டு சென்னையில் கோலாகலமாகக் கொண்டிய அவர் இந்த ஆண்டு மலேசியாவுக்கு மாற்றிவிட்டாராம். வெங்கட் பிரபு மலேசியாவில் கொடுத்த பார்ட்டியில் சர்ச்சைக்குரிய சென்னை பார்ட்டியில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் ஆஜராகியிருந்திருக்கின்றனர். ஆனால் சோனாவை மட்டும் அழைக்கவேயில்லையாம்.



# உறவு கசத்தது ஊடல் மலர்ந்தது

தெலுங்கு நடிகர் சித்தார்த்தும், ஸ்ருதிஹாஸனும் ஒரு படத்தில் இணைந்து நடித்தனர். அப்போது இருவருக்கும் காதல் ஏற்பட்டு, திருமணமாகாமலேயே இணைந்து வாழ்வதாக கடந்த சில மாதங்களாகக் கூறப்பட்டு வந்தது. கமல்ஹாஸனுக்கும் மகளின் இந்த உறவு குறித்து தெரியும் என்றும் கூறினர். இதனை ஸ்ருதி மறுக்கவில்லை. அவரிடம் கேட்டபோதெல்லாம், அது எனது தனிப்பட்ட விவகாரம் என்றே கூறி வந்தார். சித்தார்த்தும் இதுகுறித்து கருத்து தெரிவிக்க மறுத்து வந்தார்.

இந்த நிலையில் இருவரும் இப்போது கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டதாக தெலுங்கு திரைப்பட உலகில் பரபரப்பாக செய்தி பரவி வருகிறது. உறவு குறித்து மௌனம் காத்தது போலவே, இந்தப் பிரிவு குறித்தும் ஸ்ருதி - சித்தார்த் எதுவும் கூற மறுத்துவிட்டனர்.

ஆனால் சித்தார்த் தன்மேல் ஆதிக்கம் செலுத்துவது பிடிக்காததால் ஸ்ருதி விலகிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. சித்தார்த் ஏற்கெனவே திருமணமாகி, மனைவியை விவாகரத்து செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நத்தாருக்கு வருகிறது வேட்டை

பையா படத்தின் வரவேற்பை தொடர்ந்து, இயக்குனர் லிங்குசாமி இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் வேட்டை. மாதவன், ஆர்யா, சமீரா ரெட்டி, அமலா பால் மற்றும் பலர் நடித்து இருக்கிறார்கள். யுவன் சங்கர் ராஜா இசையமைத்து இருக்கிறார்.

லிங்குசாமியின் நிறுவனமான திருப்பதி பிரதர்ஸ் தயாரித்து இருக்கிறது, யு.டி.வி நிறுவனம் வெளியிட இருக்கிறது. இதில் மாதவன் வசன-மான 'எனக்கே ஷட்டரா' என்ற வசனம் வரவேற்பை பெற்றுள்ளது.

தற்போது இப்படத்தினை கிறிஸ்துமஸ் தின விடுமுறை நாட்களை கணக்கில் கொண்டு டிசெம்பர் 23ஆம் திகதி வெளியிட தீர்மானித்து இருக்கிறார்கள். லிங்குசாமியின் இயக்கம், மாதவன், ஆர்யா இணைந்து நடிப்பு, யு.டி.வி. யின் மார்கெட்டிங் என பெரும்படை இருப்பதால் இப்போதே விநியோகஸ்தர்கள் இப்படத்தினை பெரிய விலைக்கு பேசி வருகிறார்கள் என்று கூறப்படுகின்றன.

# ...சை அடங்காத நாயகன்

...ரசிகர்கள் தான் நடிகர்களுக்கு அடைமொழி வைப்பார்கள். ...ல் டாக்டர் சீனிவாசனோ தனக்குத் தானே பவர் ஸ்டார் ...ற வைத்துக் கொண்டு தமிழ்த் திரையுலகைக் கலாய்த்து வருகிறார். தான் நடிக்கும் படத்திற்கு தன்னுடன் ஜோடி சேர நித்யாமேனனை அணுகியுள்ளார் சீனிவாசன்.

இதை சற்றும் எதிர்பாராத நித்யா மிரண்டு போய்விட்டாராம். பவர் தாக்குதலில் சிக்கி அதிர்ந்த அவர் சற்றே சுதாரித்து சீனியர்களுடன் ஜோடி சேரமாட்டேன் என்று கூறி அனுப்பிவிட்டாராம்.

இவரது லத்திகா என்ற படம் 200 நாட்களைத் தாண்டி ஓடி தமிழ்த் திரை யுலகினரை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஆனாலும் சற்றும் சளைக்காமல் அதைப் பற்றி தொடர்ந்து விளம்பரம் கொடுத்து கலக்கிக் கொண்டிருக்கிறார் சீனிவாசன். 50 வயதைத் தாண்டிய இவர் நடித்தால் கதாநாயகனாக தான் நடிப்பாராம். அதுவும் இளம் நாயகிகளுடன் தானாம்! அதற்காக நித்தியாவுக்கு ரூ. 1 கோடி வரை சம்பளம் தருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அவர் 1 கோடி தருவதாக கூறியதுகூட ...வுக்கு அதிர்ச்சி தரவில்லையாம், ...க, கூட நடிக்குமாறு கேட்டதுதான் பெரும் ...ச்சியாகிவிட்டது. சினிமா ...கில் வாய்ப்பு தேடி வந்தால், அது ...க்காவிட்டால் நேரடியாக முடியாது என்று ...மாட்டார்கள் ஏதாவது சாக்கு போக்குச் ...சால்லி வேண்டாம் என்று விலகி ...டுவார்கள். அதே ...பாணியில், நாசூக்காக சீனியர் நடிகர்களுடன் நான் நடிப்பதில்லை என்று கூறியுள்ளார். இதை கேட்ட பவர் ஸ்டாருக்கு கொஞ்ச நேரம் பவர் போய்விட்டது.

# பட்டது போதும்

...தற்கு அதில் நடித்த நடிகர் மது ...ந்தில் கலந்து கொண்ட கவர்ச்சி ...பி. பாலசுப்பிரமணியத்தின் ...ாடு தகாத வழியில் நடக்க ...கொடுத்தார். ...கொடுத்தார். இதனால் பெரும் ...சும்மா விடமாட்டேன் ...ா கடைசியில் சமாதானம்

...ஒரு ஆண்டுக்கு சினி ...ல என்றும் அறிவித்தார். ...வங்கட் பிரபுவும் இருந்தார் ...டத் தொடங்கியது. ...து பார்ட்டி என்றாலே ...தாம். பார்ட்டிக்குப் ...ஓடிவிடுகிறாராம். தன் மகள் ...டந்த ஆண்டு சென்னையில் ...அவர் இந்த ஆண்டு ...ராம். ...கொடுத்த ...சென்னை ...வர்கள் அனைவரும் ... ஆனால் சோனாவை ...யாம்.



# தேன் கிண்ணம்

## உயிர் நீ...

யாரிடமும்
சொல்லிவிடாதே!
உன்னை என்னிடமிருந்து
பிரிக்க நினைப்பவர்கள்
தோற்றுப் போவார்கள்
ஏனென்றால்
நீ என்
இதயத்தில் இல்லை
உயிரில் உறைந்திருக்கிறாய்.

சௌமி,
மண்கும்பான்.

## நேற்றைய நினைவுகளின் தொகுப்பாய்...

என்
இதயப் புத்தகத்தில்
எழுதப்பட்ட பக்கங்களில்
எல்லாமே உன்னைப்பற்றிய பதிவுகள்தான்!

நீ தந்த இதமான வலிகளில் தொடங்கி
இரக்கமில்லாத மௌனப் பொழுதுகள் வரை
அனைத்தும் கைது செய்யப்பட்டுள்ளன
என் நினைவுப் பேனாவால்!

நேற்றைய நினைவுகளின்
நீண்ட தரிசனங்களை
முடிவில்லாமல் முற்றுவைக்காமல்
எழுதிக்கொண்டேயிருக்கிறேன்
நம் காதலின் சாட்சிப் பதிவாய்!

பொறுத்திருந்து பார்!
என் காதல் காவியமும்
பேசப்படலாம் ஒரு காலத்தில்...
கண்ணீரால் பதியப்பட்ட
ஓர் வரலாற்றுக் காதல் என்று!

இராமசாமி ரமேஷ்,
அளம்பில்.

## இறந்த பாதங்கள்

ஒற்றைப் புன்னகையில்
செப்பனிடப்படும் பாதைகள்
நீண்ட பெருவெளிகளில்
பசுமையாய் முளைக்க
எத்தனிக்கும் புற்கள்

ஐம்புலன்களும் மறந்து
விரிந்த வெறும் பாலைகளில்
நடக்கும் எனது கால்கள்

உள்ளங்கால் கரடுகள் வெடித்து
நீளும் ரேகைகளில்
புல்வெளிகள் அரைக்கப்பட்டுவிடும்
என்ற கிலேசத்தில்
பாலைகளில் மட்டும் நடப்பவை

நகரக் கடவதாய்ச்
சாபம் பெற்ற பாதங்களுக்கு
நாட்டியம் பற்றிய வருப்பெடுக்கும்
நாணற் புற்களின் பெயரால்
கண்மூடிப் பிரார்த்திக்கிறேன்.

இவை இறந்த பாதங்களாய்
இருப்பினும்–கால்களோடு சேர்த்து
வெட்டியெறியப்பட்டுவிடக் கூடாது
என்பதற்காய்.
மரித்துப்போனவை என்றாலும்
தகிக்கும் சமுதாய வெம்மையைத்
தாங்கி
பாலைவனங்களிலேயே
நடந்துகொண்டிருக்கட்டும்
அவை.

வை.சாரங்கன்.



## கனவுகளுக்காகவே உறங்குகிறோம்

குருதியைத் தொட்டு
எழுதப்படுகின்றன
புனிதக் கதைகள்

பயிர்களுக்கு தூவப்பட்ட
பசளைகளைப் பறித்து
வயிறு நிறைக்கின்றன
ஓரத்து களைகள்....
சம்பிரதாயங்களை
அடை காத்தவர்கள்-அவசரமாக
நிரந்தர
ஓய்வு கேட்கிறார்கள்.

தத்துவப் பாடல்களுக்கு
கொலை வாள்களால்
இசை மீட்டப்படுகிறது
கனிதரும் விருட்சங்களுக்கு
பாலை வனத்தில்
நில ஒதுக்கீடு.
முற்றுப்புள்ளிகள்
முன்னுரிமை கொடுக்கின்றன
கேள்விக்குறிகளுக்கு...
பறக்கும் பக்குவம்
வருகையில்... சிறகுகள்
அடகு வைக்கப்படுகின்றன.
மலிவு விற்பனையில்
மனித உயிர்கள்
இலட்சியத்திற்கான
பயணம்
குறுக்குப்பாதை
வழியாகவா...?
பூப்பறித்து வந்த பூங்கா
போர்க்களமாக
காட்சி தருகின்றதே...
சீக்கிரம் நமக்கான
கதவுகளை
திறவுங்கள்-எமது
கனவுகளாவது
வலதுகாலை எடுத்துவைத்து
உரிமையோடு
உள்ளே நுழையட்டும்.

வி.மகிலன்,
நெடுந்தீவு-13

## நரகத்து உறவு

உன்னோடு
உறவாடிய நினைவுகள்
நரகத்தில்
நான் வாழ்ந்த பதிவுகள்
விருந்தினர் விடுதியொன்றில்
விழிகளில் பட்டாய் நீ.

என்னை அறியாமலே
என்மனம்
உன் மீது பறிபோனது
என் பார்வையில்
எனக்கு நீ
சொர்க்கமாய் தெரிந்தாய்
நீயில்லா நாட்கள்
நரகமாய் ஆனது.

இதயத்தில் குடியிருந்த
எண்ணற்ற துக்கங்கள்
உன் உறவின்பின்
ஒழப்போனது உண்மைதான்.

எனக்குள் நீ
இருக்கையில்
எல்லாமே மறந்திருப்பேன்
உன்னோடு
உறவாடியதால்தானே.
ஊரும் வெறுத்தது
உறவும் வெறுத்தது
நானுனை வெறுத்தேனா?
எனக்கு நீ வேண்டுமென
இழந்தது எத்தனை.

போதும்
உன் வேசம் உணர்ந்தேன்.
நீ
கொஞ்சம் கொஞ்சமாய்
கொல்லும்
விசமென்றிருந்தேன்
இனியும் உனை நம்பி
ஏமாற மாட்டேன்.

இனிமேலும் உன்னுறவை
என்மனம் நாடாதே...
பொல்லாத மதுபானமே.

யோ.புரட்சி

## வாழப் போகிறாள்

வந்த வரன்களெல்லாம்
இலட்சங்களில் நிற்க
நிற்கிறாள் மூத்தவளாய் குடும்பத்தில்
நாற்பதை தொட்டுக் கொண்டிருக்குமவளுக்கு
அழகும் போயிட்டு
தரகருக்கும் போதும் போதுமென்றாயிட்டு
இரண்டாம் தாரமாய்
ஏற்றுக்கொள்ள வருவோர் ஏராளம்.
சாதி சனங்கள் பேசுமே
என்ற பயம் அப்பாவுக்கு
அக்காவுக்கு தாலி கிடைத்தால்
இளையவளுக்கும் சீக்கிரமே
ஒரு துணை கிடைக்கும்
என்ற தன்னம்பிக்கை அம்மாவுக்கு
ஜோடி பொருத்தமில்லாவிட்டாலும்
பொறுத்துப்போகும்
கடவுளின் வரம் கொண்டவள்
இனி வாழப்போகிறாள்.

எம்.ஏ.எம்.இன்ஷாப்,
கம்பளை.


**காதல்.** இதற்கு இதுதான் அர்த்தம் என்று இன்றுவரை யாருமே வகுத்து வைக்கவில்லை. அதுமுடியாத காரியமும் கூட. சிலர் காதலை புதிரானது என்கிறார்கள். அது ஒரு மாயம் என்பது சிலரின் கூற்று. சிந்தனையைத் தூண்ட உதவும் காதல், காதல் ஒரு மகிழ்ச்சியான அனுபவம், அது விவரிக்க முடியாத அனுபவம் என்பது சிலரின் வாதம். உற்சாகம் தருவது காதல், சொல்லித் தெரிவதில்லை காதல் என்றும் காதலுக்கு சிலர் வகுத்துள்ள இலக்கணங்கள்.

தத்துவ ஞானி பிளேட்டோ காதல் குறித்து என்ன கூறுகிறார் என்றால்- காதல் ஒருவரைத் தொடும்போது அவர் கவிஞராகிறார். அதையே வால்டேர் கூறும்போது, இயற்கை உருவாக்கிய அழகிய ஓவியம்தான் காதல். அதில், கற்பனையும் சேரும்போது அழகான காவியமாகிறது என்கிறார். காதலில் விழுந்தவர்கள் முதலில் கவிஞராகிறார்கள். பிறகு அவர்கள் பேசினாலே கவிதை மழைதான்.

“நிலவு சுடும் சூரியன் சுகமாகும் காதல்”

காதலியை நினைத்து இரவெல்லாம் தூங்க முடியாமல் தவிக்கும் காதலனுக்கு நிலவு கூட தகிப்பை, தவிப்பைத் தருகிறது. ஆனால் அவளை சந்திக்கப் போகும் பகலை நினைத்தால் சூரியனின் அனல் கூட எனக்கு சுகமாகத் தெரிகிறதாம்.

“உன் சிரிப்பு என்னை பலவீனமாக்கி விட்டது நான் பலம் பெற மீண்டும் ஒரு முறை சிரியேன்” அவளின் புன்னகையில் வீழ்ந்து போன அவனுக்கு மீண்டும் பலம் பெற அதே சிரிப்பு



## காதல் பதிரானதா?!

தேவைப்டுகிறது. காதலின் வினோதம் இது. “தெளிவான வானமாய் என் மனம் இருந்தும் நீ காதல் மேகமாய் நினைவில் வந்ததால் எனக்குள் மழை”

இப்படி கவிதை அருவியில் அவர்கள் நனைகிறார்கள் உலகக் காதலர்கள்.மார்ட்டின் லூதர் கிங்கிடம் காதல் குறித்து கேட்டபோது, வெறுப்புணர்வு வாழ்க்கையை முடமாக்குகிறது, காதல் வாழ்க்கையை உணர வைக்கிறது என்றார்.

கண்கள் சந்தித்த நொடியில் என் இதயத்தில் அவள் விழுந்தாள் என்பதுதான் காதல் வயப்பட்ட அத்தனை ஆண்களும் சொல்லும் ஒரே வார்த்தையாக உள்ளது. இப்படி காதலுக்கு உயர் மரியாதை கொடுத்தே அத்தனை பேரும் பேசியுள்ளனர், எழுதியுள்ளனர்.

காதல் பொறுமையானது, இரக்கமானது. பொறாமைக்கும், வெறுப்புக்கும் இங்கு இடமில்லை. பகிர்ந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளுதல் என்று பல நல்ல விஷயங்கள் கலந்ததுதான் காதல். பெருமைக்காக காதலைப் பயன்படுத்துவோர் பலர் உண்டு. அது காதலுக்கு பெரிய அவமரியாதை என்பதை அவர்கள் உணர்வதில்லை.

உண்மையும், நேர்மையும் கலந்த காதல் என்றும் அழிவதில்லை, தோற்பதில்லை என்பார்கள். காதலின் அடிப்படையும் கூட அதுதான். ஒரு பெண் ஒரு ஆணை ஏன் காதலிக்க முடிவு செய்கிறாள்? இவன் நம் மனதுக்கு ஒத்து வருபவனாக இருக்கிறான், இறுதிவரை உடன் வருவான், துயரங்களில் துணை இருப்பான், இவனின் சினேகிதம் ஆறுதல் தருகிறது என்ற எண்ணத்தில்தான். இது ஆண்களுக்கும் பொருந்தும். இந்த எண்ணங்கள் எந்தக் கோட்டில் உடைகிறதோ அந்த நொடியே அந்தக் காதலின் அத்திவாரம் தவிடு பொடியாகி விடுகிறது.


முழுமையான புரிந்து கொள்ளுதல், பாதுகாப்புணர்வு, முழுமையான நம்பிக்கை, உண்மையான நேசம், இன்ன பிறதான் ஒரு காதலை உயிர்ப்புடன், துடிப்புடன், உண்மையான காதலாக நீட்டிக்க வைக்கும்.

ஆண், பெண் இருவரின் உள்ளங்கள் நம்பிக்கை, நேசம், பாசம் ஆகிய இழைகளால் பிணைக்கப்படும்போது இருவரும் சேர்ந்து உயருகிறார்கள். நமக்கென்று ஒரு துணை இருக்கிறது என்ற நிலையை நினைக்கும்போது வரும் சந்தோஷம் அனுபவித்தால் மட்டுமே புரியக் கூடியது.

உணர்வுகளுக்கு அங்கு மதிப்பு இருக்க வேண்டும். பாசத்திலும், நேசத்திலும் பாசாங்கு இருக்கக் கூடாது. வெறும் வார்த்தையாக மட்டுமல்லாமல், உண்மையான செயல்பாடுகள் காணப்பட வேண்டும். உன் முன்னேற்றத்திற்கு நீ இப்படிச் செய்யலாம், இதை நீ செய்தால் சரியாக வரும். உனது உயர்வுக்கு இது உதவும் என்ற அறிவுரைகளில் உண்மையான காதலைக் காணலாம்.

காதல் என்றால் கூடவே எதிர்ப்பும் பின்னாலேயே நிற்கும். அதையும் உணர்ந்து, அதை எப்படி தாண்டுவது என்பதில் நேர்மையான சிந்தனை இருக்க வேண்டும். அவசரம் காட்டுவது அலங்கோலத்திற்கு வழி வகுத்து விடலாம். உண்மையான காதல், மரியாதை, நம்பிக்கை, பாசப் பிணைப்பு ஆகியவற்றை பலமாக கொண்ட ஒரு அடித்தளமாகும். ஒற்றுமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவும் சக்திதான் காதல். எனவே, உண்மையாக காதலிப்போம், உண்மையான காதலைக் காதலிப்போம், காதலைக் கொண்டாடுவோம்.

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு



Dr. சி. ஜமுனானந்தா

**காசநோய்க் களைவில் மனித உரிமைகளின் அடிப்படையிலான அனுகலில் கவனிக்க வேண்டியவை**

◉ பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்ட சமூகமும் முதன்மைப் படுத்தப்படல் வேண்டும்.

◉ அதிகம் பின் தங்கியவர்களுக்கு அல்ல. இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களிற்கு போதிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி சேவையினை வழங்கல் வேண்டும்.

◉ பாதிக்கப்பட்டவர்களின் இறைமை பாதுகாக்கப்படல் வேண்டும்.

◉ காசநோய் ஏற்படுவதற்கு ஏதுவான சமூக, பொருளாதாரக் காரணிகள் தீர்க்கப்படல் வேண்டும்.

◉ காசநோயினைக் குணப்படுத்த நோயாளர்களுக்குரிய உரிமைகளைக் கூறல் வேண்டும்.

◉ காசநோயாளியின் நலன் பேணலில் பல்துறை ஒத்துழைப்பினைப் பேணல்.

◉ காசநோய்க் கட்டுப்பாட்டில் பொறுப்புக்கூறும் தன்மையை ஒவ்வொருவரும் சுகாதார வசதிகளைப் பெறும் உரிமைக்கு ஏற்படுத்தல்.

**சிறப்பான முறையில் காசநோய் தொடர்பான பிரயோக மனித உரிமை அனுகல்**

◉ அரசாங்கத்தின் கடமை
◉ அரசியல் அர்ப்பணிப்பு
◉ சர்வதேச ஒருங்கமைவும் ஒத்துழைப்பும்
◉ கடப்பாடும் பொறுப்புணர்வும்
◉ செயற்படுத்தும் ஊக்கம்.

**மனித உரிமைகளின் அடிப்படையில் காசநோயினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள்**

◉ பெண்கள்
◉ சிறைக்கைதிகள்
◉ தடுப்பில் உள்ளவர்கள்
◉ வேலைத்தளங்களில் உள்ளவர்கள்
◉ போதிய காற்றோட்டம் இன்மை
◉ நோய் ஏற்படின் வேலை இழப்பு
◉ நோய் அறிகுறி ஏற்படினும் மருத்துவ பரிசோதனைக்கு உட்பட விடுமுறை இன்மை.
◉ புலம்பெயர்ந்து வாழ்பவர்கள்
◉ அகதிகள்
◉ உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள்
◉ மதுபானம், புகைத்தல், போதைப்பொருள் உபயோகிப்பவர்கள்
◉ எயிட்ஸ் நோயாளிகள்

**சுகாதாரம் தொடர்பான மனித உரிமைகள் காசநோய்க்கு உள்ளாதலைத் தடுத்தல்**

◉ மக்களை வேறுபடுத்திப் பார்க்காது சமனாகக் கருதும் உரிமை.
◉ சுகாதார வசதிகளைப் பெறுவதற்கான உரிமை
◉ வேலைசெய்வதற்கான உரிமை
◉ வாழ்விடத்தில் போதிய வசதிகளைப் பெறுவதற்கான உரிமை
◉ போதிய உணவினைப் பெறுவதற்கான உரிமை
◉ பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம் பெறுவதற்கான உரிமை
◉ கல்வி கற்பதற்கான உரிமை
◉ தகவல் பெறுவதற்கான உரிமை.

**தரமான காசநோய் நிர்ணயம், சிகிச்சை, நலன்பேணல், ஆதரவு என்பவற்றினை அதிகரித்தல்**

◉ மக்களை வேறுபடுத்திப் பாகுபடுத்தாத உரிமை.
◉ சுகாதாரச் சேவைகளை அணுகுதலுக்கும், மருந்துகளைப் பெறுவதற்குமான உரிமை.
◉ பங்குபற்றுவதற்கான உரிமை
◉ சமூகப் பாதுகாப்பிற்கும், பொருளாதாரப் பாதுகாப்பிற்குமான உரிமை.
◉ தகவல் பெறுவதற்கான உரிமை.
◉ அறிவினை அடைவதற்கான உரிமை.
◉ தமது சுயவாழ்வுத் தனிமைக்கான உரிமை.
◉ நடமாடும் சுதந்திரத்திற்கான உரிமை. குறிப்பாக போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தல்.
◉ உடலுக்கும் ஊறு ஏற்படாது இருப்பதற்கும், மனிதத்தன்மையற்ற செயல்களிற்கு உட்படாது இருப்பதற்கான உரிமை.
◉ விஞ்ஞான முன்னேற்றத்தின் பிரயோகங்களை அனுபவிப்பதற்கான உரிமை.

**காசநோய் களைவில் பிரயோக மனித உரிமை அனுகலை மேற்கொள்வதனால் ஏற்படும் அனுகூலங்கள்.**

◉ காசநோயினால் பாதிக்கப்படல் குறைவடையும்.

◉ காசநோயினைத் தடுப்பதற்கான அதிக வழிகளும் காசநோயினைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல், காசநோயாளர் நலன் பேணல், காசநோயாளர்களிற்கான ஆதரவை அதிகரித்தல்.

◉ சமூகத்தினைக் கட்டுப்பாட்டில் வலுவூட்டலாம். பல சமூக அமைப்புக்களின் உதவியைப் பெற-லாம்.

◉ மொத்தச் செயற்றிறனை மேம்படுத்தி அபிவிருத்தியினை மேற்கொள்ளலாம்.

**காசநோய் என்றால் என்ன?**

காசநோய் மைக்கோ பற்றீரியம் ரியுபகியூலோசிஸ் எனப்படும் பற்றீரியாவினால் ஏற்படுகின்றது.

◉இது காற்றினால் பரவக்கூடிய தொற்று நோய்.

◉ காசநோய் தொற்றலுக்கு உள்ளாகிய அனைவருக்கும் காசநோய் ஏற்படுவது இல்லை.

◉ ஒருவரின் உடல், எதிர்ப்புச் சக்தியை இழக்கும்போதே அவருக்குக் காசநோய் ஏற்படும்.

**காசநோய் எவ்வாறு பரவும்?**

காசநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர்

◉இருமும்போது
◉ தும்மும்போது
◉ கதைக்கும்போது
◉ எச்சில் சளியினைத் துப்பும்போது

**காசநோய்க் கிருமிகள் காற்றினை அடைகின்றது. காசநோய்க் கிருமிகள் உள்ள காற்றினை ஒருவர் சுவாசிக்கும்போது அது அவரின் நுரையீரலை அடைகின்றது.**

**காசநோய் தொற்றுவது என்பது?**

அவர் எவ்வளவு நேரம் நோய்க் கிருமியுள்ள காற்றினைச் சுவாசித்தார் என்பதிலும், நோய்க்கிருமியின் செறிவிலும் தங்கியுள்ளது.

**காசநோயாளியின் அறிகுறிகள் என்ன?**


◉ இரண்டு வாரங்களுக்கு மேலான தொடர்ச்சியான இருமல்
◉ மாலை நேரங்களில் மெல்லிய காய்ச்சல்
◉ சளியுடன் இரத்தம் வெளியேறல்
◉ நிறை குறைவடைதல்
◉ உணவில் விருப்பமின்மை
◉இரவு நேரத்தில் வியர்த்தல்
◉ களைப்பாகக் காணப்படல்
◉இருமும்போது நெஞ்சில் வலி ஏற்படல்
◉ நிணநீர்க் கணுக்கள் வீங்குதல் (பொதுவாக கழுத்துப்பகுதி)

**(முற்றும்)**

# கண்ணதாசனின்
## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 10

190



கண்ணெதிரே காணுகின்ற காட்சிகளும், சம்பவங்களும் மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றியதால், அது ஏதோ ஒரு பெரிய சக்தியின் இயக்கம் என்று மனித மனது பேசிற்று. ஆறாவது அறிவு அதை ஒப்புக்கொண்டது.

பகுத்தறிவுக்குத் தெரியாமலா பாண்டிய மன்னர்கள் கோயில் கட்டினார்கள்?

கோயில்களில் பூஜைகள் நடத்த நிவந்தங்கள் விட்டார்களே மன்னர்கள், அவர்களுக்கு ஆறாவது அறிவே இல்லையா?

ஐக்கிய அமெரிக்காவில், 'ஹரே கிருஷ்ணா' இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பல இலட்சம் பக்தர்களுமே பகுத்தறிவு இல்லாதவர்களா?

கருப்பூரிலும், திருப்பூரிலும் மேடை போட்டுப் பேசிவிட்டு, வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு, இனம் தெரியாமல் நடந்து கொள்வதுதான் பகுத்தறிவா?

விபூதி பூசாமல் இருப்பதும், குங்குமம் வைக்காமல் இருப்பதும், கல்யாணங்களுக்கு ஐயரை அழைக்காமல் இருப்பதும்தான் பகுத்தறிவில் முளைத்தெழுந்த சுடரொளிகளா?

வெறும் பிரமை மயக்கம்!

இன்றைக்குப் பகுத்தறிவாளன் என்று சொல்லிக்கொள்கிற எவனையும் விட, நான் பல விடயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் படிக்காத புத்தகங்களையெல்லாம் நான் படித்திருக்கிறேன். அவர்கள் எழு-தாத விடயங்களையெல்லாம் நான் எழுதியிருக்கிறேன்.

எந்த ஆராய்ச்சியில் இறங்கினாலும் என்னுடைய ஆறாவது அறிவு, அதிலே தெய்வத்தைத்தான் கண்டுபிடிக்கிறது.

அறம், பொருள், இன்பம் என்பது வள்ளுவன் பகுப்பு. அதோடு 'வீடு' என்ற ஒன்றையும் சேர்த்து நான்காக்கிற்று மதம்.

அந்த 'வீடு' என்பதை வடமொழியில் 'மோக்ஷம்' என்பார்கள்.

இம்மையில் முதல் மூன்றும், மறுமையில் நான்காவதும் மனிதனுக்கு அமைய வேண்டும்.

ஆனால், அறம், பொருள், இன்பத்தை ஒப்புக்கொள்ளும் சிலரது பகுத்தறிவு, நான்காவதான மோக்ஷத்தை ஒப்புக்கொள்வதில்லை.

'சொர்க்கமாவது, நரகமாவது, மரணத்திற்குப் பிறகு எதுவுமே இல்லை என்பது அவர்களது வாதம்.

ஆனால் மத நம்பிக்கையுள்ள சராசரி மக்கள் மோக்ஷநரகத்தை ஒப்புக்கொள்கிறார்கள்.

அப்படி ஒப்புக்கொண்ட காரணத்தினாலேதான், அவர்கள் பாவம் செய்யப்படுகிறார்கள்.

சொர்க்கம், நரகமே இல்லை என்று நம்பும் பகுத்தறிவாளன், எந்த தவறுக்கும் துணிந்துவிடுகிறான்.

ஆக ஒன்று புரிகிறது, பகுத்தறிவு இரண்டு வகைகள்.

ஒன்று நம்பிக்கையோடு ஆராய்வது, இன்னொன்று அவநம்பிக்கையை வளர்ப்பது.

இப்படி அவநம்பிக்கையை வளர்த்துவிட்டால் சராசரி வாழ்க்கையாவது சந்தோஷமாக இருக்குமா?

இல்லை! நம்பிக்கையுள்ளவனுக்கு எந்தத் துன்பத்திலும் ஒரு நிம்மதி இருக்கும்.

அதாவது, 'எல்லாம் ஆண்டவனுடைய இயக்கம், நடப்பது நடக்கட்டும்' என்று துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் சக்தி அவனுக்கு வந்துவிடும்.

பிராமண வீடுகளில், ஒருவர் இறந்து போனால், உடனே அந்தச் சடலத்தைத் திண்ணையிலோ அல்லது வெளி வராந்தாவிலோ தூக்கிக்கொண்டுவந்து போட்டுவிடுகிறார்கள்.

நான் அறிந்த வரையில் மரணத்திற்காக அவர்கள் அதிகம் ஓலமிடுவதில்லை. கதறி அழுவதில்லை. காரணம், அவர்களுடைய பகுத்தறிவு தெளிவாகச் சொல்லிவிட்டது. 'மரணம் தவிர்க்க முடியாதது' என்று.

அந்தச் சமூகத்தில்தான், அறிவாளிகள் அதிகம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். வைதீக, மத நம்பிக்கையும் அந்தச் சமூகத்தில்தான் அதிகம்.

அவர்கள், இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுவதைப் பார்க்கும்போது மத நம்பிக்கையுள்ள பகுத்தறிவு வாழ்க்கையை எவ்வளவு நிம்மதியாக ஓட்டிச் செல்கிறது என்பது புரிகிறது.

ஆகவே, ஒவ்வொரு மனிதனுக்கும் மன நம்பிக்கை வேண்டும்.

மனிதன், மனிதனாக வாழ, மத நம்பிக்கை வேண்டும். மனிதர்கள் மிருகமாக ஆகாமல் இருக்க, மத நம்பிக்கை வேண்டும்.

மனிதனையும், மிருகத்தையும் பற்றி, இதோ காஞ்சிப் பெரியவர் பேசுகிறார்.

மிருகங்கள் குறுக்குவாட்டில் வளர்கின்றன. இதனாலேயே அவற்றுக்குத் 'திர்யக்' என்று பெயர். இதற்கு மாறாக உயர்ந்து மேல் நோக்கி வளருகின்ற மனிதன், மற்ற பிராணிகளைக் காட்டிலும் மேலான நோக்கத்தைப் பெற வேண்டும். இப்படிச் செய்தால் இவன்தான் சகல ஜீவ இனங்களையும் விட அதிகமான சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால், நடைமுறையிலோ அவற்றைவிட அதிகமான துன்பத்தைத் தான் நாம் அனுபவிக்கிறோம். மிருகங்களுக்கு நம்மைப்போல் இத்தனை காமம், இத்தனை கவலை, இத்தனை துக்கம், இத்தனை அவமானம் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றுக்குப் பாபமே இல்லை. பாபங்களைச் செய்து,துக்கங்களை நாம்தான் அனுபவிக்கிறோம்.

ஒரு வழியில் பார்த்தால் மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் சௌகரியங்களை சுவாமி நமக்குக் கொடுக்கவில்லை என்று தோன்றும். நம்மை யாராவது அடித்தால், திருப்பி அடிக்க ஓர் ஆயுதம் நமக்கு இல்லை. மாட்டை அடித்தால் அதற்குக் கொம்பு கொடுத்திருக்கிறார். அதனால் திரும்பி முட்ட வருகிறது. புலிக்கு நகம் கொடுத்திருக்கிறார், நமக்குக் கொம்பில்லை. நகம் இல்லை. குளிரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள ஆட்டுக்கு உடம்பில் போர்வை வைத்திருக்கிறார். மனிதன் ஒருவனைத்தான் வழித்து விட்டிருக்கிறார். யாராவது அடிக்க வந்தால் எதிர்க்க முடிவதில்லை; ஓடலாம் என்றால் வேகமாக ஓட முடியாது. குதிரைக்குக் கொம்பு இல்லாவிட்டாலும் ஓடுவதற்கு வேகம் கொடுத்திருக்கிறார். அதுவும் நமக்கில்லை. இருந்தாலும் சுவாமி மனிதனுக்குத்தான் புத்தியை அதிகமாகக் கொடுத்து வைத்திருக்கிறார்.

குளிரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், மற்றப் பிராணிகளின் போர்வையை இவன் பறித்துக்கொண்டு விடுகிறான். கம்பளியாக நெய்து கொள்கிறான்.

**தொடரும்...**


# வேகமும் விவேகமும்

**இன்றைய** இலங்கை கிரிக்கெட் அணி பின்னடைவைச் சந்திக்கும் போதெல்லாம் சிறப்பாக முரளிதரன் இன்மையையும், பொதுவில் முரளியுடன், சமிந்தவாஸ், மற்றும் லசித் மலிங்க இருவரையும் இணைத்தும் கருத்துக் கூறுகிறார்கள். சிறப்பாக டெஸ்ட் போட்டிகள் தொடர்பில்தான் இக்கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் ஒரு அணியின் சிறப்புக்கு வேகப்பந்து வீச்சாளர்களே மிக அவசியம் என்பதாகவும் தற்போதும் அதற்குக் குறைவில்லை என்பதாகவும் கருத்துக்கள் கூறப்பட்டாலும் வேகம் மட்டும்தான் வேகப்பந்து வீச்சாளரின் வெற்றியா என்று ஒரு கேள்வியையும் எழுப்புகிறார்கள். அதாவது வேகமும் விவேகமும் ஒன்று சேர இருக்கவேண்டும் என்பதே அவர்களின் குரல்.

இந்த வகையில் முன்னாள் சர்வதேச வேகப்பந்து வீச்சு ஜாம்பவான்களின் நீண்ட பெயர்ப்பட்டியல் ஒன்றையே முன்வைக்கிறார்கள். உதாரணத்துக்குச் சில பெயர்களைக் குறிப்பிடலாம். மே.இந்தியத் தீவுகளின் அன்டி றொபட்ஸ், மைக்கல் ஹோல்டிங், ஜோல் கார்னர், மல்கம் மார்ஷல், பாகிஸ்தானின் இம்ரான்கான், வசிம் அக்ரம், வக்கா யூனுஸ் அவுஸ்திரேலியாவின் டெனிஸ் லிலி, ஜெப்தொம்ஸன் இப்படியாகப் பட்டியல் நீண்டு செல்கிறது. இதேவேளை இலங்கையின் எதிர்காலத்தில் இத்தகைய ஜாம்பவான்களுக்கு இணையாக யாரும் இல்லா விட்டாலும், வளர்த்தெடுக்கப் படக் கூடிய புடம்போட்டு எடுக்கப்படக் கூடிய சிறந்த வீரர்கள் இருப்பதைப் பட்டியலிடுகின்றார்கள்.



பதினைந்து பேருக்கு மேற்பட்ட வேகப்பந்து வீச்சாளர்களின் பெயர்களை நிபுணர்கள் குறிப்பிட்டாலும் முன்வரிசையில் உள்ள ஆறு பேரின் பெயர்களைக் குறிப்பிடலாம்.



சுரங்க ரக்மால், சாணக்க வெலகெதர, நுவன் பிரதீப், தம்பிக்க பிரசாத், திஸர பெரேரா, ஸமிந்த எரங்க ஆகியோரைக் குறிப்பிடும் இவர்கள், இந்த வீரர்களை எப்படி சர்வதேச வீரர்களாக ஆக்குவது என்பதில்தான் இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சு வளம் தங்கி இருக்கிறது என்றும் கருதுகிறார்கள்.

வேகத்தைக் கூட்டினால், Line and Length பிழைக்கும். மறுவளமாக யோசித்தால் துடுப்பாட்ட வீரரை மிரட்டும் அளவுக்கு வேகம் இல்லாமல் போகும் என்றால் இதனை எப்படிச் சமரசம் செய்துகொள்வது என்று விளைகிறார்கள். இங்குதான் விவேகம் மற்றும் பயிற்சியுடன் கூடிய திறமை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்கள்.

முன்னைய காலங்களில் இதேபோன்று வீரர்கள் இருந்தாலும் இத்தகைய ஆற்றல்கொண்ட மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை இனங்காட்டுகிறார்கள் விமர்சகர்கள். அவர்கள் கிளென் மக்ரா, ஷோண் பொலெக், சமிந்தவாஸ் இந்த மூவரும் வேகப்பந்து வீச்சாளர்களுக்குரிய சகல அம்சங்களையும் கொண்டிருந்தாலும், அதோடு மிகுந்த விவேகத்தையும் பயன்படுத்தினர்கள். அதனாலேயே மிதவேகப் பந்து வீச்சில் கூட அநா யாசமாக விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இன்றும் என்றும் பேசப்படுபவர்களாக இருக்கிறார்கள். இலங்கை அணிக்கு இந்த வகையில் பந்துவீச்சுப் பயிற்சி வழங்கும் ஆற்றல் றொமேஸ் ரட்னாயக்க, சம்பிக்க ராமநாயக்க ஆகியோருக்கு இருந்தாலும் அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிலை இல்லை என்றே கருதப்படுகின்றது. எனவே ரசிகர்களைப் பொறுத்தவரை இந்த வேகப்பந்து வீச்சாளர்களைத் திட்டமிட்ட முறையில் பயிற்றுவித்து எடுத்தால் சர்வதேசம் பேசுமளவிற்கு ஒரு சில வேகப்பந்து வீச்சாளர்களையாவது உருவாக்க முடியும்.

அதற்கு இப்போது பேசப்படும் பல பெயர்களில் அர்ப்பணிப்பும் நிறைந்த ஆர்வமும் கொண்டு வீரர்கள் தம் திறமையை வெளிப்படுத்த வேண்டும். நிச்சயம் அப்படியான ஒருசிலர் இருப்பார்கள்.

## விளையாட்டு

ஜோசப் கிருஷ்ணா

# நம்பவே முடியவில்லை



பாகிஸ்தானின் மூன்று கிரிக்கெட் வீரர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற ஆட்டநிர்ணய சூதாட்ட வழக்கில் இவர்கள் பற்றி மட்டுமன்றி, இன்னும் பல புதியவர்கள் பற்றியும் செய்திகள் வெளிவருகின்றன. இவை உண்மையா பொய்யா என்று வாசகர்களால் தீர்மானித்துக்கொள்ள இயலாவிட்டாலும், இப்படியும் இருக்குமோ என்று அதிர்ச்சியில் உறைவதைத் தடுக்க இயலவில்லை. இதில் முதலாவதாக இந்திய வீரர்கள் யுவராஜ்சிங், ஹர்பஜன்சிங் இருவரின் பெயரும் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் அண்மையில் பேசப்பட்டமை. அடுத்தது அவுஸ்திரேலிய வீரர்கள் பலரின் பெயரைச் சுட்டி, அவுஸ்திரேலியர்களே மோசமான ஆட்டநிர்ணய சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று எழுந்துள்ள குற்றச்சாட்டு இருதரப்பு உயர்மட்டங்களும் இது சம்பந்தமாக உடனடி மறுப்பை வெளியிட்டுள்ளதுடன் இந்த விடயம் அடங்குமா தொடருமா என்று தெரியவில்லை.

இலண்டன் நீதிமன்றமொன்றில் நடந்துவரும் வழக்கு விசாரணையில் பல்வேறு இத்தகைய விடயங்கள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் இன்னொரு ஆச்சரியமான விநோதமான கழுத்தறுப்பு விடயம் பற்றியும் செய்திகள் வெளிவந்துள்ளன.

அதாவது பாகிஸ்தான் ஒரு நாள் மற்றும் இருபதுக்கு இருபது ஆட்டங்களுக்குத் தலைவராக சஹிட் அப்ரிடி நியமிக்கப்பட்டது. பாகிஸ்தான் அணிவீரர்களுக்குப் பிடிக்கவில்லையாம். இதேவேளை சல்மான்பட் அணித்தலைவராக இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களின் விருப்பமாம். இதன் காரணமாக அணியை வீழ்ச்சிப் பாதையில் கொண்டு சென்று, அதன் மூலம் அப்ரிடியை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கித் தமக்கு விருப்பமான சல்மான்பட்டை மீள அணித்தலைவராக்க முயன்றார்களாம். இதனால் மிக நுட்பமான முறைகளை பாகிஸ்தான் வீரர்கள் பின்பற்றினார்களாம். அதில் ஒன்று அடித்தாட வேண்டிய வேளைகளிலும் பந்தைத் தடுத்தாடி ரண்கள் எடுக்காமல் விடுவது இதன் மூலம் ஓட்ட எண்ணிக்கை பாகிஸ்தானுக்குக் குறையும். இது பாகிஸ்தான் அணியைத் தோல்விக்கு இட்டுச் செல்லும் எனத்திட்டமிட்டு வீரர்கள் செயற்பட்டார்களாம். இதில் சல்மான்பட் மற்றும் பாகிஸ்தானின் முன்னாள் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மால் இருவருடைய பெயரையும் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் சாட்சியம் கூறப்பட்டிருக்கிறது.

எப்படியெல்லாமோ பேசப்பட்ட பாகிஸ்தான் அணி அண்மைக்காலமாக பல வழிகளிலும் குற்றம் நிறைந்ததாகக் காணப்பட்டு இன்று நினைக்கவே கூசுகின்ற அளவிற்கு உள்செயற்பாடுகளால் அவமானப்பட்டுப் போய் இருக்கிறது. ஒரு சர்வதேச அணி-தனது நாடு என்ற உயர்வான எண்ணத்தின் அடிப்படையில் களம் இறங்கும் வீரன் இப்படியெல்லாம் சிந்திக்க முடியுமா என்பது அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. பாகிஸ்தான் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்பது பெரிய தொரு வினாவாகத்தான் இருக்கிறது.

தற்பொழுதுதான் நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பித்துள்ளன. எனவே நாம் அவசரப்பட்டுவிடவேண்டாம் என்று எமக்கு நாமே ஆறுதல் சொல்லிக்கொள்வோம். ஆனால் எதிர்கால முடிவுகள் தீர்ப்புகள் நமக்கு ஆறுதல் தருவதாக இருக்குமா?

# மெல்லனைச் சாகுமா

**டெஸ்ட்** கிரிக்கெட் போட்டிகளை எவ்வாறு ரசிகர்கள் மத்தியில் மீளவும் செல்வாக்குப்பெற வைப்பதென்பது ஐ.சி.சிக்குப் பெரும் சவாலான தொரு விடயமாக மாறிவிட்டது. இதற்கான காரணங்கள் கிரிக்கெட் ரசிகர்களுக்கு நன்கு புரியும். எனவே ஏதாவது புதிய உத்திகளைக் கையாண்டு டெஸ்ட் கிரிக்கெட்டை பிரபல்யப்படுத்துமுகமாக என்ன செய்யலாம் என்று யோசித்து 2010 ஒக்டோபரில் ஐ.சி.சி ஒரு திட்டத்தை முன்வைத்தது. அதாவது 2013 இல் டெஸ்ட் வரிசையில் முதல் நான்கு இடங்கள் பெறும் அணிகளுக்கு இடையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகள் நடாத்தி விருதுகள் வழங்கும் முறையொன்றை அறிவித்தது.

இப்பொழுதுள்ள கேள்வி என்னவென்றால் டெஸ்ட் கிரிக்கெட் ஆனது ரசிகர்கள் மத்தியில் மட்டுமன்றி கிரிக்கெட் நிர்வாகம், மற்றும் வீரர்கள் மத்தியிலும்



இரண்டாம் நிலையில் பார்க்கப்படுகிறதா என்பதுதான். ஏனெனில் புள்ளிகளின் அடிப்படையில் முதல் நான்கு இடங்களுக்குள் வரவேண்டுமாயின் அணிகள் மிகச்சிறந்த வகையில் அமையவேண்டும். ஆனால் அப்படியொன்றும் தீர்க்கமான ஆர்வம் எதுவும் இல்லையென்பது போல நடப்பதாக விமர்சகர்கள் குறை கூறுகிறார்கள்.

அதற்கு உதாரணமாக உலகக்கிண்ணப் போட்டிகளுக்குப் பின் நடைபெற்ற இந்தியாவின் மே.இந்தியத் தீவுகளுக்கான சுற்றுப் பயணத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அதாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்து ஒரு சில நாட்களில் ஐ.பி.எல். தொடங்க, அதில் முழுத்திறமை கொண்ட வீரர்கள் விளையாட, தொடர்ந்து வந்த டெஸ்ட் தொடரில் மிகச்சிறந்த வீரர்கள் களைப்படைந்துவிட்டார்கள் என்ற சாட்டில் இரண்டாம் நிலை அணி ஒன்றே அனுப்பப்பட்டது. எனவே டெஸ்டில் சம்பியன்ஷிப் மீது மிகுந்த ஆர்வம் இருந்திருந்தால் இப்படி ஏனோதானோ என்ற போக்கில் பலமற்ற அணியை அனுப்பி இருக்கமாட்டார்கள். 1-0 என்று தொடரை இந்தியா வென்றிருந்தாலும் மூன்றையும் அல்லவா முதல்நிலை பெறுவதற்காக வெல்லும் நோக்கத்தில் அணித்தெரிவு நடைபெற்றிருக்க வேண்டும். எனவே, டெஸ்ட் சம்பியன்ஷிப் பற்றி இந்தியா பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என்பது இங்கு புரிகிறது.

ஆனால் அண்மை இங்கிலாந்துச் சுற்றுப்போட்டியில் முற்றுமுழுதான தோல்வியை இந்தியா சந்தித்த போதும், மேலும் தரவரிசை ஒன்றில் இருந்து மூன்றிற்கு இறங்கியபோதும் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகளுக்குத் தகுதிபெறாமல் போய்விடுமோ என்ற பேச்சு இந்தியா பக்கம் இருந்து எழவே இல்லை என்பது இன்னொரு நடவடிக்கை. மீண்டும் முதல் நிலைக்கு வருவோம், 2015 ஒரு நாள் போட்டிக்கான அணியைக் கட்டி எழுப்புவோம் என்று பேசினார்களே ஒழிய டெஸ்ட் சம்பியன்ஷிப் நழுவிப்போகுமோ என்று பேசவேயில்லை. இதிலிருந்து டெஸ்ட் ஆட்டங்கள் எவ்வாறு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றன என்று தெரிகிறது என்கிறார்கள் விமர்சகர்கள்.

இதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை என்பது போலவும் தெரிகிறது. ஏனெனில் ஐந்து நாட்கள் டெஸ்ட் போட்டிக்காக மினக்கெடுவதை விட மூன்றரை மணித்தியால இருபதுக்கு இருபது ஆட்டம் கொடுக்கும் பணமும் அமோகம். நேரமும் மிச்சம். இன்னொன்று அண்மைக் காலத்தில் எல்லாம் டெஸ்ட் போட்டிகளில் எல்லாம் மழை குறுக்கிட பல மணி நேரங்கள் வீணாகின்றன. வீரர்கள், ரசிகர்கள் என்று இருபக்கத்திலும் மனிதசக்தி என்பது பெறுமதியே இல்லாமல் இழக்கப்பட்டுக்கொண்டு போகிறது. இன்னும் எவ்வளவோ காரணங்களைப் பட்டியலிடவும் முடியும்.

இறுதியாக டெஸ்ட் போட்டிகள் இன்றைய காலகட்டத்தில் எடுபடாது என்பதால்தான் ஒருநாள் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகள் அறிமுகமாகிக் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்றன. விரும்பியோ விரும்பாமலோ டெஸ்ட் போட்டிகளின் நிலை கேள்விக்குறியாகியுள்ள நிலையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகள் எவர் சார்ந்தும் பெரிய ஆர்வத்தையோ, முக்கியத்து வத்தையோ பெறப்போவதில்லை. எனவே, இதே பாணியில் டெஸ்ட் போட்டிகள் என்பது மேலும் மேலும் வீரர்கள், ரசிகர்கள் மத்தியில் வீழ்ச்சிக்கான பாதையையே காட்டும். எனவே டெஸ்ட் போட்டிகள் முறைமையில் உற்சாகம் தரக் கூடிய மாற்றங்கள் ஏற்படுத்துவதைத் தவிர மற்றோரைக் குறைசொல்வதில் எதுவித பயனும் இல்லை.



# உலக சனத்தொகை

# எழுநூறு கோடியை எட்டிப்பிடிக்கிறது!

2011ம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி உலக சனத்தொகை 700 கோடியாக உயர்வதையிட்டு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ( UNFPA ) உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு விழிப்புணர் வூட்டல் நிகழ்ச்சிகளை நாடு பூராகவும் நடத்தி வருகின்றது.

மட்டக்களப்பு பெண்கள் அபி விருத்தி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வூட்டல் நிகழ்வு மட்டக்களப்பு ஊறணி யில் நிறுவனத் தலைவி சோமாவதி சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றபோது அந்நிகழ்வில் பங்கு கொண்ட சிறு வர் அபிவிருத்தி மகளிர் விவ-காரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏம். ஹிஸ்புல்லாஹ்வுக்கு ஐ.நா பிரதி நிதி லீன் கிறிஸ்ரியன் அம்மையார் நானும் ஏழு பில்லியனில் ஒருவர். நாம் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்க வேண்டும். என்ற தபால் வாழ்த்து அட்டையைக் கையளித்தார்.

உலகில் மனித அழிவுகளான யுத்தங்களும், ஆயுத வன்முறை களும் உட்பட பல்வேறு வகை யான இயற்கை அழிவுகளும் மனிதர்களைக் காவு கொள்கின்ற அதேவேளை உலக சனத்தொகை என்பது அதிகரித்த வண்ணமே உள்ளது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் எதிர்வு கூறலின்படி எதிர்வரும் 31ஆம் திகதியுடன் உலக சனத்தொகை எழுநூறு கோடியை எட்டிப் பிடிக்கிறது

> “அதிகரித்து வரும் உலக சனத்தொகையை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும் என்பது பலரது ஆதங்கமாக உள்ளது. இப்படிப் பல்வேறு பட்ட வாதப் பிரதிவாதங்களுக்குள்ளே யார் எதைச் செய்தாலும், சொன்னாலும் உலக சனத்தொகை என்பது வேகமாக அதிகரித்து வருகின்றதென்பதையிட்டு அதனை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற ஆயத்தங்கள்தான் இப்பொழுது இடம்பெறுகின்றன. இதிலும் குறிப்பாக இந்த அதிகரித்த சனத்தொகையில் பெண்களினதும் பெண்களின் நலன் சார்ந்து பாடுபடும் அக்கறையும் சற்றுக் கூடுதலாக இருக்கின்றது. அதாவது உலக சனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் பெண்களாக இருக்கும் அதேவேளை அவர்கள் உலகில் ஒரு சதவீதமான சொத்துக்களுக்கே உரித்துடையவர்களாக இருக்கின்றனர்.”

என்பதுதான் அந்தச் செய்தி.

அதனை முன்னிட்டே பல்வேறு நிகழ்வுகள் விழிப்புணர்வுகள், கலந்துரையாடல்கள், வாத விவாதங்கள் உலகெங்கிலும் இடம்பெற்று வருகின்றன.

அதிகரித்து வரும் உலக சனத்தொகையை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும் என்பது பலரது ஆதங்கமாக உள்ளது. இப்படிப் பல்வேறு பட்ட வாதப் பிரதிவாதங்களுக்குள்ளே யார் எதைச் செய்தாலும், சொன்னாலும் உலக சனத்தொகை என்பது வேகமாக அதிகரித்து வருகின்றதென்பதையிட்டு அதனை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற ஆயத்தங்கள்தான் இப்பொழுது இடம்பெறுகின்றன.

இதிலும் குறிப்பாக இந்த அதிகரித்த சனத் தொகையில் பெண்க ளினதும் பெண்களின் நலன் சார்ந்து பாடுபடும் அக்கறை யும் சற்றுக் கூடுதலாக இருக்கின் றது. அதாவது உலக சனத் தொகையில் பாதிக்கு மேற்பட் டோர் பெண்களாக இருக்கும் அதே வேளை அவர்கள் உல-கில் ஒரு சதவீதமான சொத்துக்களுக்கே உரித்துடையவர்களாக இருக்கின்றனர். ஆண்களை விட அதிகம் இந்த உலகுக்கு தமது உடலுழைப்பைச் செலுத்தி சேவை புரிகின்றவர்களும் பெண்களாகத்தான் இருக்கின்றனர்.

இவ்வாறிருக்கும்போது எழுநூறு கோடியாக அதிகரித்துள்ள உலக சனத்தொகையும் பெண்களுக்கே ஒரு சோதனையாக வந் துள்ளது என்பது ஆர்வலர்களின் ஆதங்கமாக உள்ளது.

அதிகரித்துள்ள உலக சனத் தொகைக்கேற்ப உலகிலுள்ள வளங்கள் ஈடுகொடுக்குமா என்பது இன்னொரு சாராரின் ஏக்கம் கலந்த கேள்வியாக உள்ளது.

இந்தக் கேள்விகள் எல்லா வற்றுக்கும் மத்தியிலே எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உலக சனத்தொகை அதிகரித் துத்தான் விட்டது.

உலகில் வளப் பங்கீட்டைப் பற்றித்தான் எல்லோரும் உரக்கக் குரல் கொடுக்கத் துவங்கியிருக் கிறார்கள். உலகில் புதிய நாடு-களையும் தேசங்களையும் கண்டு பிடிக்கத் தொடங்கியது முதற்கொண்டே வளச் சுரண்டல் என்பது ஆரம்பித்து விட்டது. அன்று தொடங்கிய அந்த வளத் திருட்டு இன்றுவரைத் தொடர் கிறது. வளங்களையெல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள் வாரிச்சுருட்டிக் கொண்டு போனது வரலாறாக நிற்கிறது.

இன்று வரையும் பல்வேறு காரணங்களும் நியாயங்களும் கூறப்பட்டுத் துவங்கப் பட்ட போர் களின் நோக்கம் ஆக்கிரமிக்க எண்ணிய பிரதேசங்களிலுள்ள வளங்களை அபகரிப்பதேயாகும் என்கின்ற விடயம் எல்லோருக்கும் தெளிவாக விளங்கும்.

உலகிலுள்ள வளங்கள் பாரபட்ச மில்லாமல் பகிரப்படுமானால் பசியும் பட்டினியும் போர்களும், வன்முறைகளும் இடம்பெறுவதற்குத் தோதான எந்த நிகழ்வுகளும் இடம்பெற வாய்ப்பே இல்லை.

வல்லாதிக்க சக்திகள், வளங்களைச் சுரண்டிச் செல்வதற்குத் தோதாகவே தமது வியூகங்களை வடிவ மைத்து அதனை அமுல் படுத்தியும் வருகின்றனர். பச்சைப் புல்வெளிகளிலிருந்து பெற்றோ லியப் பொருட்கள் வரை உள்ள, எந்தவொரு வளங்களும் ஆக்கிரமிப்பாளர்களது கண்ணில் பட்டதாகத்தான் இருக்கின்றது.

ஐ.நா சனத்தொகை நிதியம் எழுநூறு கோடி மக்களை எதிர் கொள்ளுவதற்காக உலகெங்கிலும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எழுநூறு கோடி சனத் தொகையை அடையப் போகும் நாம் உலகில் வாழ்வதிலுள்ள சவால்கள், வாய்ப்புக்கள், செயற்பாடுகள் உள்ளிட்ட உல-கின் தற்போதிருக்கும் வடி வத்தை மாற்றக்கூடிய எல்லா அம்சங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவிக்கிறார் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி லீன் கிறிஸ்ரியன் அம்மையார் அவர்கள்.

உலக சனத்தொகை அதிக ரிக்கும் போது அதிகரிக்கும் உலக சனத்தொகையில் இலங்கையும் ஒரு அங்கம் என்கின்ற வகை யில் இலங்கையிலும் இத்தகைய மாற்றங்கள் இருக்கின்றன. இலங்கையில் ஐந்து மில்லியன் இளையவர்கள் உள்ளார்கள். இது இலங்கையின் சரித்திரத் தில் முதன்முறையாக இடம்பெற் றுள்ளது. இந்த இளையவர்கள் அரசியலுக்கும் கலாசாரத்திற்கும் மாற்றப்படுகின்றபொழுது இன் றைய உலகில் இவர்களும் சவால் களை எதிர்நோக்குகிறார்கள். இதே போல மூத்த சமுதாயமும் இலங்கையில் காணப்படுகின்றது. இவர்களும் பல்வேறு அரசியல் சமூக கலாசார பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

எனவே இந்த விடயத்தில் அவர்கள் சார்ந்த நீண்ட காலக் கவனிப்பு, வாழ்வதற்கான ஒழுங் குகள், சமூகப் பாதுகாப்பு, வரு மானம் உள்ளிட்ட பல்வேறு விட யங்களை தெளிவுபடுத்த வேண்டி யிருக்கின்றது.

இலங்கையில் பால் நிலை சமத்துவம் என்பது மெச்சத்தக்க வகையில் இருந்தாலும் கூட பெண்கள் இன்னமும் பல்வேறு விடயங்களில் முக்கியத்து வமளிக்கப்பட வேண்டிய வர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக அரசியலில் குறைந்தளவான பெண்களின் ஈடுபாடு, அதிகரித்து வரும் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்களின் எண் ணிக்கை, தொழிலாளர் படை யில் அதிகரிக்கும் பெண்களின் எண்ணிக்கை, இடம்பெயர்ந்து தொழில் பார்க்கும் பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைகள், வீட்டு வன்முறைகள் எல்லாவற்றையும் நாம் காண்கின்றோம்.

உலக சனத்தொகை எழுநூறு கோடியாகும் போது உலகம் எதிர்கொள்ளக் கூடிய சவால் களுக்கு இலங்கையையும் தயார் படுத்தப் பட வேண்டும். விழிப்புணர்வூட்டல் திட்டத்திற்குள் குறிப்பாகப் பெண்களுக்கு விழிப்புணர்வூட்டும் மாவட்டமாக எமது பட்டியலில் மட்டக்களப்பும் இடம்பெற்றிருக்கின்றது என்று தெரிவித்தார் ஐ.நா பிரதிநிதி லீன் கிறிஸ்ரியன் அம்மையார் அவர்கள்.

உணவு, உடை, உறையுள், காணி, கல்வி, சுகாதாரம், ஆரோக்கியம், பொழுபோக்கு என விரிந்து செல்லும் மனி தத் தேவைகளுக்கு ஏற்ப இப்போது எஞ்சி இருக்கும் வளங்கள் அதிகரிக்கும் உலக சனத்தொகைக்கு ஈடுகொடுக்குமா என்பதுதான் இப்போதிருக்கும் காத்திரமான கேள்வி. ■

**ஏ.எச்.ஏ.ஹுசைன்**


ஸ்ரீ ராம ஜெயம்

**POWERFULL WORLD WIDE SERVICE**



“நான் நல்லதை நினைக்க நன்மை நடக்கிறது
நல்லதையே நினைப்போம் நல்லது நடக்கும்!”

துர்க்கையின் சக்தியால் எப்பேர்பட்ட தடைப்பட்ட திருமணங்களும் என் சாந்திக்குப் பின் கை கூடு கிறது. குழந்தை பாக்கியம் கிட்டுகிறது. கல்வியில் சித்திபெற்றுவிடுகிறார்கள். கணவன், மனைவி பிணக்கு அதிவிரைவில் தீர்ந்து சுகபோக வாழ்வு பெறுகிறார்கள். காதலன், காதலி வசியமாக இங்கிருந்தே உறு செய்வதால் உடன் பலன் தெரி-கிறது. தாம்பத்திய வாழ்வில் குறையுள்ளவர்கள் அதிவிஷேட ஔசத மூலிகையால் அற்புத குணம் பெறுகிறார்கள். இன்னும் நடந்தது. நடப்பது. நடக்கவிருப்பது அனைத்தும் அருள் ஞான சித்தத்தால் ஜாதகங்கள் கணித்து கொடுக்கப்படும்.

வெளிநாட்டவர்களுக்கு அதிவிசேட 24 மணித்தியால தொலைபேசி சேவையுண்டு. * இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. மை வெளிச்சம் பார்க்கப்படும். முழுமையாக காண்ட அடிப்படையில் உங்கள் ஜாதகத்தைக் கணித்துக் கொள்ளலாம்.

**இது 48 வருட காலம் சேவை செய்யும் நிறுவனமே!**
**தேச பந்து, கலாநிதி பேராசிரியர் P.K.சாமி JP ஐயா**

**ஸ்ரீ துர்க்கா தேவி அருள் சக்தி இல்லம்**

**MALAYALA MANTHIRIGA UCHCHADA PEEDAM**

C/985

23, மேபீல்ட் ரோட் கொழும்பு–13.
தொ.பே:011 2342463,0112342464,0112470615
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்.
இல: 33,தினசரி சந்தை கட்டடம், நுவரெலியா. 052–2222508




அவர், அதன் விசையை அழுத்த முற்படுவதற்குள் புஷ்பராஜ், அவர் மேல் பாய்ந்தார். அந்த விசையில் துப்பாக்கி அவர் கையில் இருந்து விடுபட்டுச் சற்றுத் தொலைவில் போய் விழுந்தது. உடனே அவர் தன் கைகளால் புஷ்பராஜைத் தாக்கத் தொடங்கினார். இருவருக்கும் இடையே அப்போது கடுமையான ஒரு கைகலப்பு நடந்தது.

ஒரு கட்டத்தில் காவலாளியின் தலை பின்புறக் கம்பியில் மோதியதால் அதே நேரம் கழுத்துப் பகுதியில் விழுந்த அடியால் அவர் அசைவற்றுப் போனார்.

புஷ்பராஜ் ஒரு கணம் யோசித்தார். இந்த நிலையில் காவலாளி ஒருவர் இறந்து கிடப்பதை எவராவது கவனித்தால் நிலைமை விபரீதமாகிவிடும். அனாவசியமான ஒரு சோதனைக்குத் தான் ஆளாக வேண்டி இருக்கும்.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்தக் காவலாளியின் உடையை அவசரஅவசரமாகக் கழற்றி புஷ்பராஜ் அணிந்துகொண்டார். சுற்றுமுற்றும் பார்த்தார். எவரும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. எங்கும் ஒரே அமைதி.

காவலாளியின் உடலை அதிகமாகச் சத்தம் எழுப்பாமல் நேர் செங்குத்தாகக் கப்பலில் எங்கும் மோதாமல் கடலுக்குள் போட்டார். புஷ்பராஜ் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தார். கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி மூன்று.

காவலாளி தனது வேலைமாறும் நேரமானது. அடுத்த காவலாளி வந்தார். அவர் எதுவும் பேசாமல், துப்பாக்கியை வாங்கிக்கொண்டு தனது இடத்தில் போய் நின்றுகொண்டார்.

புஷ்பராஜ் கீழ்ப்புறம் வந்தார். தனது அறையை எவரும் கவனிக்க வாய்ப்பு இல்லை என்று அவருக்குத் தோன்றியது. கப்டனிடம் கூட, தான் கடலில் தவறி விழுந்து விட்டதாகவே தெரிவிக்கப்பட்டிருக்கும்.

ராபின்சன் தற்போது எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருப்பான் என்று அவருக்கு விளங்கியது.

அது, உண்மைதான்.

ராபின்சன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

புஷ்பராஜ் தனது அறைக்குள் நுழைந்து கட்டிலின் அடியில் போய்ப் படுத்துக்கொண்டார். நன்றாகத் தூங்கினார்.

அவர் கண்விழித்தபோது நேரம் ஒன்பது மணி.

காலைக்கடன்களை முடிந்தவுடன் சாப்பிட வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. அதற்கு டைனிங் ரூமுக்குச் செல்ல வேண்டும். அங்கு ராபின்சன் தட்டுப்படலாம்.

எனவே, காவலாளியின் வேடத்திலேயே சிற்றுண்டி சாப்பிடப்போவது என்று தீர்மானித்தார்.

சற்று நேரம் காத்திருந்த பிறகு டைனிங் ரூமுக்குச் சென்றார்.

சமையல்காரருக்கு எந்தவிதமான சந்தேகமும் தோன்றவில்லை. மட்டும் இன்றி, அங்கு அப்போது வேறு எவரும் தென்படவில்லை.

சாப்பிட்டவுடன் தனது அறைக்குத் திரும்பி வந்தார்.

மதிய உணவுக்கும் தாமதமாகவே சென்றார். இதுவரை எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. சமையற்காரரை ஏமாற்றி ரொட்டி-ஜாமை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

அதன் பிறகு புஷ்பராஜ் மேல் தளத்திற்கு வந்தார்.

வழக்கமான காவலாளி ராபின்சனும் அப்போது அங்கு நின்று கொண்டிருந்தான்.

"ஹலோ டாக்டர்..." ராபின்சன் ஓரக்கண்ணால் காவலாளியைக் கவனித்தவாறு புஷ்பராஜ் பக்கம் திரும்பினான்.

"மிஸ்டர் ராபின்சன், உங்களது நடவடிக்கைகள் என்ன ஆச்சரியப்படுத்துகின்றன!" புஷ்பராஜ் கூறினான்.

" இதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை. நான் உள்ள நிலைமையைத்தான் சொன்னேன். சரி... நாம் சற்று நேரம் அப்படி நிற்போம்."

இருவரும் டெக்கின் விளிம்பை நோக்கி நடந்தனர்.

விளிம்பை நெருங்கியதும் ராபின்சன், புஷ்புராஜைக் கடலின் பக்கமாகத் தள்ளினான். முற்றிலும் எதிர்பாராத ஒரு செயலாக இருந்ததால் புஷ்பராஜ் நிலைகுலைந்து கீழே விழவே செய்தார்.

காவலாளி உடனே அந்தப் பக்கமாக ஓடிவந்தார்.

"டாக்டர் கால்தவறிக் கடலில் விழுந்துவிட்டார். பிடிக்க முயற்சி செய்தேன்.. முடியவில்லை!" ராபின்சன், காவலாளியிடம் சமாதானம் கூறினான்.

எதிராளியைப் புத்திசாலித்தனமாகச் சமாளித்துவிட்டதாக நினைத்த ராபின்சன், நிதானமாக நடந்து கீழ்த்தளத்துக்குச் சென்றான். அவன் நேராகப் போய் நின்றது கப்டன் அறை வாசலில்தான். கதவைத் தட்டினான்.

உடனே கப்டன் கதவைத் திறந்தார்.

"நீங்களா... என்ன விடயம்? வாருங்கள்!" கப்டன் அவனை வரவேற்றார்.

ராபின்சன் அறைக்குள் நுழைந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்.

"உங்கள் டாக்டர் ஒரு விபத்தில் சிக்கிக்கொண்டார்..." சிகரெட் ஒன்றைப் பற்றவைத்த ராபின்சன் தாழ்ந்த குரலில் கூறினான்.

"என்ன நடந்தது?"

"கப்பலின் மேல் தளத்திலிருந்து அவர் கடலில் தவறி விழுந்து விட்டார். அவரைக் காப்பாற்ற முடியவில்லை!"

"என்ன சொல்கிறீர்கள்... காப்பாற்ற முடியவில்லையா? இந்தச் சூழ்நிலையில் நமக்கு டாக்டர் மிகவும் அத்தியாவசியமானவர்."

"உண்மைதான். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம் கரைப்பகுதியை அடையும்போது வேறு டாக்டர் ஒரு வரை அமர்த்திக்கொள்ள வேண்டியதுதான்."

"தற்சமயம் அது சாத்தியமில்லை."

(தொடரும்...)

---

# சிறுவர் உரிமைகளை உறுதிப் படுத்துவதில் ஊடகவியலின் பங்கு!

**- வாகரை வாணி -**

"**எங்களுடைய** வாழ்க்கையை வளமாக்க சிறுவர்களாகிய எம்மிடமும் சிறந்த அபிப்பிராயங்கள உண்டு"

"வளர்ந்தவர்களாகிய நீங்கள் சிறுவர்களுக்காகத் தீர்மானங்களை எடுக்கும்போது, சிறுவர்களையும் பங்களிக்க வைக்கிறீர்களா?" எனும் கேள்வி வாசகத்துடன் தொடங்குகிறது சிறுவர் நலனுக்காகப் பாடுபடும் அரசு சார்பற்ற சேவ் த சில்ரன் எனும் நிறுவனத்தின் பெரிய, கவர்ச்சியான சுவரொட்டியின் வாசகம்.

"ஒவ்வொரு பிள்ளையும் தன் கருத்தை வெளியிடுவதற்கும் தன்னைப் பாதிக்கக் கூடிய எந்த விடயம் அல்லது நடைமுறை பற்றி தன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் உரிமையுடையதாகும். அத்துடன் வளர்ந்தோரால் அது கருத்திற் கொள்ளப்படுவதற்கும் உரிமையுடையதாகும்." என்று சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாய உறுப்புரை 12 கூறுகிறது. சிறுவர் உரிமைகள்.

சிறுவர் உரிமைகள் பற்றி பரவலாகப் பேசப்பட்டுவரும் இவ்வேளையில் சேவ் த சில்ரன் அமைப்பு ஊடகங்களுக் கூடாக சிறுவர் உரிமைகளை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் ஊடகவியலாளர்களிடையே விழிப்புணர்வுகளை ஊட்டி வருகின்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கில் சிறுவர் உரிமை, சிறுவர் பங்களிப்பு மற்றும் பாதுகாப்பு ஆலோசகரும், சட்டத்தரணியுமான ஒல்வெற் ஜெனோவா அல்பிரட் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினார்.

ஊடகமும் சிறுவர் உரிமைகளும் என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இருநாள் கருத்தரங்கில் சிறுவர் உரிமைகள் தொடர்பான பல்வேறு சட்ட திட்டங்களும் விளக்கவுரைகளும் வழங்கப்பட்டன.

சேவ் த சில்ரன் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள கையேடுகளில் சிறுவர் உரிமைகள் தொடர்பான பல்வேறு விடங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

மனித உரிமைகளின் விற்பன்னர்களாக ஊடகவியலாளர்கள் உள்ளனர். தனிப்பட்ட சவால்களின் மத்தியிலும், ஊடகவியலாளர்கள் பொதுமக்களின் கண்களாக, காதுகளாக, மற்றும் குரல்களாகச் செயற்படுகின்றனர். அதிகாரங்களினதும், மனித உரிமைகளினதும் துஷ்பிரயோகம் தொடர்பில் அவர்கள் கவனஞ் செலுத்துகின்றனர். தமது பணியினூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றத்தைக் கொண்டு வரக்கூடிய பயனுள்ள மாற்றங்களுக்காக அரசாங்கத்தையும் சிவில் சமூக நிறுவனங்களையும் அவர்களால் ஊக்குவிக்க முடியும்.

தமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் சிக்கியுள்ளவர்களின் சூழ் நிலைகள், அல்லது பொரியவர்களால் துஷ்பிரயோகத்திற்கு இலக்கான அல்லது சுரண்டலுக்கு இலக்கான சிறுவர்களின் நிலையை பொதுவாக ஊடகவியலாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள், மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் சமூகத்திற்கு அம்பலப்படுத்துகின்றனர்.

எவ்வாறாயினும், மிகவும் வழக்கமான செய்தி ஊடகங்களில் "சிறுவர்களின் கோணம்" தொடர்பிலும் சம அளவில் முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். இவற்றின் விளைவாக சிறுவர்கள் எதிர்நோக்கும் பயன் அல்லது தீங்குகளின் அளவு குறித்து கவனஞ் செலுத்தலே சட்டம் அல்லது நீதிக் கொள்கையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் பெறுமதியை பரீட்சிப்பதற்கான சிறந்த வழியாக இருக்கின்றது.

ஊடகங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அல்லது புறக்கணிக்கும் விதத்தில் சிறுவர்கள் தம் சார்பில் எடுக்கப்படும் தீர்மானங்களிலும் எஞ்சியுள்ள சமூகம் தம்மை எவ்வாறு கணிக்கின்றது என்பது தொடர்பிலும் செல்வாக்குச் செலுத்துபவர்களாக இருக்க முடியும்.

ஊடகங்கள் பெரும்பாலும் சிறுவர்களை அமைதியான பாதிக்கப் பட்டவர்கள் அல்லது சாந்தமான அப்பாவிகள் எனச் சித்தரிக்கின்றது. சிறுவர்களும் இளைஞர்களும் தமது எதிர்பார்ப்புக்கள் அச்சங்கள், தமது வெற்றிகள் மற்றும் பருவமானவர்களின் நடத்தையினால் தமது வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்கள் என்பன தொடர்பில் தமக்காகக் குரல் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களைச் சிறுவர்களுக்கு வழங்குவதன் மூலம் சிறுவர்களும் மனிதர்களாக மதிக்கப் படல் வேண்டும் என்ற கருத்தினை ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் நினைவு படுத்த முடியும்.

மனித உரிமைகள் எவ்வாறு செயற்படுகின்றன மற்றும் அவை எவ்வாறு சிறுவர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பன தொடர்பில் சிறுவர்களின் மனித உரிமைகளை மதிக்க வேண்டியது ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பொறுப்பாகும்.

வெகுசன ஊடகமானது எங்கள் எல்லோரது வாழ்விலும் பரவலாக செல்வாக்குச் செலுத்துகின்றது.



(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி

**வாழ்க்கை** என்பது ஒரு அழகான பூந்தோட்டம். வண்ண மலர்கள் உங்கள் எண்ணங்களை ஒருமுகப்படுத்தி உங்கள் மனதிலே இருக்கின்ற சுமைகளை இறக்கி வைத்து ஆனந்தக் களிப்பிலே உங்களை வாழ்த்துகிறது. வாழப்பிறந்த நீங்கள் கவலையில்லாமல் மகிழ்வோடு இருந்துவிட்டுப் போங்கள்.

உங்களுடைய நோக்கங்கள், உங்களுடைய செயல்கள், உங்களுடைய கடமைகள் ஆகியவைகளை நீங்கள்தான் நிறைவேற்றவேண்டும். மற்றவர்கள் உங்கள் பாதையில் குறுக்கிட அனுமதிக்காதீர்கள். மற்றவர்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ணி விடுவார்களோ என்று ஏன் நினைக்கின்றீர்கள்? அப்படி நீங்கள் நினைக்கும்போதே உங்களுடைய மனம் கனத்துப் போய்விடுகிறது.

இனம் தெரியாத அச்சத்தில் நீங்கள் மூழ்கிவிடுவதால் தேவையில்லாமல் கவலையை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் இது நியாயந்தானா? மற்றவர்களைக் கண்டு நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்? மற்றவர்கள் உங்களைக் கண்டபடி' விமர்சனம் செய்யட்டும், அறநெறி பிறழ்ந்தவர்கள் அனைவரும் கூடி உங்களுக்கு அர்ச்சனை செய்யட்டும். நீங்கள் ஒழிய வேண்டும் என்று கர்ஜனை செய்யட்டும். தகாத வார்த்தைகளால் உங்களை மறைமுகமாகத் திட்டட்டுமே. இதனால் உங்கள் கௌரவம் பாதிக்கப்பட்டுவிடுமா? எப்படி வாழ வேண்டும் என்ற கொள்கையும், அதன்படி செல்கின்ற உரிமையும் நமக்கு மட்டுமே இருக்கிறது. இதில் மற்றவர்கள் நம்மைவந்து பரிகாசம் செய்வதற்கும், கிண்டலாகப் பேசி நம்மை மட்டம் தட்டுவதற்கும் அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? மற்றவர்களைப் பற்றிய அர்த்தமில்லாத பயம் உங்களுக்குத்




# எதையும் உங்களால் சாதிக்க முடியும்

தேவையில்லாதது. எனவே யாரைக் கண்டும் பயப்படாதீர்கள்.

உங்களுக்குப் பல வகையிலும் துன்பங்கள் வந்துசேரும். இதை நீங்கள் தவிர்க்க முடியாது. நண்பர்கள் அருகில் இருந்துகொண்டு உங்களுக்கு அழகாகக் குழி பறிப்பார்கள். உங்களைப் பிடிக்காதவர்கள் உங்களைப் பலவாறு உங்களை 'மட்டம்' தட்டிப் பேசுவார்கள். அலுவலகத்தில் உங்களுடைய மேலாளர் எதற்கெடுத்தாலும் உங்களைத் திட்டிக்கொண்டே இருப்பார். உங்களைப் பிடிக்காத சிலர் உங்கள் மேல் எரிந்து விழுவார்கள். எது நடந்தாலும் நடக்கட்டும், எனக்குக் கவலையில்லை என்ற மனோதிடத்துடன் உங்கள் கடமையில் கண்ணாய் இருந்து பிழையில்லாமல் செயலாற்றுங்கள். நீங்கள் மனச்சோர்வில்லாமல் மகிழ்வோடு இருக்கலாம்.

எப்பொழுதும் சிரித்தபடி வாழ்கின்றவர்களுக்கு வாழ்நாள் நீண்டிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மனதிலே கவலையை ஏன் ஏற்றிக்கொண்டு துன்பப்படுகிறீர்கள்? கவலையை நீங்கள் துரத்தியடியுங்கள். மகிழ்வை மற்றவர்களிடம் நீங்கள் பகிர்ந்து கொள்ளும்போது, அதில் பெறுகின்ற இன்பம், கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது. மகிழ்வோடு இருப்பவர்களிடம் நாம் பேசுவதற்குத் துடிக்கின்றோம். என்றைக்கும் கவலையோடு இருப்பவர்களைக் கண்டால் அவரை விட்டு விலகிஓட எண்ணுகின்றோம். வாய்விட்டு, மனம்விட்டு நீங்கள் சிரிக்கின்ற சிரிப்பு, உங்களுடைய சிந்தனைகளைப் பெருக்குவதோடு, உங்கள் வாழ்நாளையும் கூட்டும் என்பதில் ஐயமில்லை. "சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" இது எவ்வளவு பெரிய உண்மை. வாழத் தெரிந்தவன் சிரிக்கும் கலையிலே தேர்ச்சி பெற்றவனாக விளங்குவான். புன்னகையால் சாதிக்க முடியாத காரியம் எதுவுமே இல்லை. 800 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை நிகழ்த்திய இலங்கையின் கிரிக்கெட் வீரர் முரளீதரன் முத்தையா, எப்பொழுதும் சிரித்த படியே இருப்பார். சாதிக்கப் பிறந்த நீங்கள் புன்னகை மன்னனாக விளங்குங்கள். சிரிக்கத் தெரிந்தவன் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பான். மகிழ்ச்சி இருந்தால் ஆனந்தமயமான வாழ்க்கைக் கப்பலில் தொடர்ந்து பயணம் செய்து கொண்டே இருக்கலாம்.

"இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் ஏதேனும் ஒரு வகையில் ஆற்றல் இருந்தே தீரும். இந்த ஆற்றலை நாம் பயன்படுத்தாத காரணத்தால் நாம் வீணாகி வீழ்கிறோம். நீங்கள் எவரையும் இழிவாக நினைக்காதீர்கள். அவர்களைப் பழித்தும் பேசாதீர்கள். மற்றவர்களைப் பேச நமக்கு என்ன உரிமை இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் அவ்வாறு தற்பெருமை பேசிக் கொண்டு திரிய வேண்டாம். தற்பெருமை பேசுவதன் மூலம் உங்களுடைய தகுதியை நீங்கள் இழந்துவிடுகிறீர்கள். அடக்கம் என்று சொல்லக்கூடிய மிக உயர்ந்த குணம், நீங்கள் தற்பெருமை பேசுவதன் மூலம் உங்களை விட்டு விலகி ஓடும்.

நீங்கள் நினைத்த காரியங்கள் எல்லாமே வெற்றி பெறவேண்டும் என்று நினைக்கின்றீர்கள். வெற்றி பெற்றால் மகிழ்ச்சியினாலே துள்ளிக் குதிக்கின்றீர்கள். தோல்வி ஏற்பட்டால் உடனே துவண்டு போய்விடுகிறீர்கள். இது சரியா என்பதை எண்ணிப்பாருங்கள். தோல்வியடையாதவர் எவருமே வெற்றி பெற்றதாகச் சரித்திரமே இல்லை. நீங்கள் அடைகின்ற தோல்விகளைத் துணிந்து ஏற்றுக் ஏற்றுக்கொள்ளுங்கள். அவைகளின் மூலம் நீங்கள் நல்ல அனுபவத்தைப் பெறுவதோடு, எவராலும் சிதைக்க முடியாத மனோதிடத்தைப் பெறுவீர்கள். 'தோல்வி அடைந்து விட்டோம்' என்று கவலைப்படாதீர்கள். வள்ளுவரும் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறியிருக்கின்றார். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ, அந்தச் செயலில் கருமமே கண்ணாக இருந்து முடித்துவிடுங்கள். பலனை எதிர்பார்க்காமல் நீங்கள் கடுமையாக உழைக்கும்போது, அற்புதமான பலன்கள் உங்களுக்குக் கிடைத்து உங்களை ஆச்சரியப்பட வைக்கும். 'நான் மிகக் கடுமையாகச் செயலாற்றுகிறேன். பலன்களை, நினைத்து நான் கவலைப்படுவதே இல்லை' என்கிறார் ஹென்றி போர்டு. எனவே ஒரு செயலைத் துணிந்து செய்துவிட்ட பிறகு, பின் விளைவுகள் எதுவாக இருந்தாலும் அவைகளைப் பக்குவ நெறியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். தோல்வி வந்துவிட்டதே என்று துயரம் கொள்ளாதீர்கள். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தன்னம்பிக்கையுடன் அயராது பாடுபடுங்கள்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.439 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

A.S. அகஸ்ரின், 7,4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. யூ.ஸ்ரெல்லா ஜீவநாயகி, தோணிக்கல், வவுனியா.
02. யோ.பாஸ்கரன் சித்தார்த்தர், தொட்டிலடி, சங்கானை.
03. நா.சுந்தரலிங்கம், தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.
04. அ.சந்தியாகோ,தென்னங்கும்புர, கண்டி.
05. அ.ராணி, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
06 வி.தாட்சாயினி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
07. சி.சிவஞானராசா, கொக்குவில்.
08. ந.இரவீந்திரன், மஞ்சத்தடி, இணுவில்.
09. எஸ்.நிதா, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
10. தி.குகன், பிரதான வீதி புத்தளம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 441

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| ■ | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | 24 |
| 25 | ■ | 27 | 28 | 29 | 30 |
| 31 | ■ | 33 | ■ | 35 | ■ |

**இடமிருந்து வலம்**

01. அண்மையில் இறந்த அப்பிள் நிறுவன இயக்குநர்.

05. ஊர்வனவில் இதுவும் ஒன்று. (திரும்பியுள்ளது)

10. இந்த மாதத்தில் மங்களகரமான காரியங்கள் நடைபெறும்.

13. பிச்சைப் பாத்திரத்தை இவ்வாறு அழைப்பர். (குழம்பியுள்ளது)

19. இடம் அல்லது சபை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

22. எருதின் முதுகிலிடும் அலங்கார விரிப்பு.

**மேலிருந்து கீழ்**

02. வயிற்றிலிருந்து காற்று, வாய்வழி வெளிப்படுதலை இவ்வாறு கூறலாம். (குழம்பியுள்ளது)

05. தவறு அல்லது குற்றம் என்றும் அழைக்கலாம். (திரும்பியுள்ளது)

06. இந்துக்கள் செய்யும் நல்வினையை இவ்வாறு கூறுவர். (குழம்பி யுள்ளது)

10. தோலை வெட்டும் உளி.

13. வஞ்சகம் அல்லது பொய் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

15. மக்களிடமிருந்து அரசாங்கத்தால் அறவிடப்படுவது. (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 439- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மோ | 2 னா | 3 லி | 4 சா | ■ | 6 ஓ |
| 7 தி | ■ | ■ | 10 ரா | 11 க | 12 ம் |
| 13 ர | 14 தி | ■ | 16 ய | ■ | ■ |
| 19 ம் | ■ | 21 அ | 22 ம் | 23 ம | 24 ணி |
| ■ | ■ | 27 ன் | ■ | 29 ர | ■ |
| 31 மை | 32 து | 33 பு | ■ | 35 ம் | 36 நா |

**போட்டி விதிகள்:**


இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 30.10.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-441
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.





# ஐன்ஸ்டீனை அசத்திய சாப்ளின்

ஐன்ஸ்டீன் ஒரு அறிவியல் மேதை. சார்லி சாப்ளின் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகர். ஒரு முறை இருவரும் சந்தித்தனர்.

அப்போது, சாப்ளின், "நீங்கள் சார்பியல் கொள்கையைப் பற்றி எனக்கு விளக்கிக் கூறுங்களேன்" என்று கேட்டார். அதற்கு, ஐன்ஸ்டீன், அறிவியல் பற்றி தெரியாத சாப்ளினுக்கு சார்பியல் கொள்கைப் பற்றி விளக்குவது கடினமான காரியம் என்று உணர்ந்தார். என்றாலும், அதை மனதில் காட்டிக் கொள்ளாமல், "நீங்கள் எனக்காக இப்போது நடித்துக் காட்டுங்கள் என்றால், உங்களால் ஒருவேளை அது முடியாமல் போய்விடும்" என்றார்.

இதை சாப்ளின் மறுத்தார். உடனே ஆழ்ந்த உட்பொருளுடன் கூடிய சில கணித விதிகளைப் பற்றி விளக்கினார். அதைக் கேட்ட ஐன்ஸ்டீன் அசந்து போனார்.

மறுநாள், ஐன்ஸ்டீனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், "நேற்று எனது நடிப்பு எப்படி இருந்தது? நீங்கள் என் நடிப்பை ரசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார், சாப்ளின்.




“யார் பேர் கொடுத்தாங்க?“

“அவங்கதான்”

“அவங்கதான்னா...”

“இதை எடுத்துப்போறப் போறவங்க” என்றாள்.

அகல்யா இவர்கள் குழந்தையைத் தன்னிடமிருந்து பிரிக்கப்போகிறார்கள் என்பது மட்டும் புரிந்தது. எப்படி என்பதெல்லாம் தெளிவாகவில்லை. அந்தக் குழந்தை அவளுக்கு ஒரு ரசிகர் மன்றம் அமைத்தது போல் கண்கொட்டாமல் அவளையே பார்த்துக்கொண்டிருக்க, தன்மேல் வைத்துக்கொண்டு அதை வெளி உலகுக்குக் காட்ட விரும்பாமல் மூடிக்கொண்டாள்.

முடிந்தால் மீண்டும் வயிற்றுக்குள் அனுப்பினாலும் அனுப்பிவிடுவாள் போ! அதன் மேல் பிரவாகமாகப் பொங்கிய பாசம் அவள் இரத்தத்தில் ஊறி, காதுக்குள் அலை ஓசை போல கேட்டது. அதன் சின்ன அழுகுர லில் உலகத்தின் சங்கீதம் எல்லாம் வீணாயின. இரவின் தனிமையில் அங்கசிக்குட்டி (அன்றைய அவள் பெயர்) கண்ணை மூடிக்கொண்டு உறங்க, எப்போதாவது தூக்கிவாரிப் போடும்போது, முதன் முதலாக புன்ன கைத்தது. அதன் உறக்கத்தில் தெய்வம் இருந்தது.

“சாலை வழியுறங்க
சமுத்திரத்தில் மீனுறங்க
நாடெல்லாம் தூங்க
நடுக்கிழவி நெல்லுறங்க
பாலில் பழம் தூங்க
பாதி நிலா தான் தூங்க
பொற்கொடியாள் தாலாட்டப்
புத்திரியே நித்திரை செய்’

பின்னால் லேசாகக் கைதட்டு சத்தம் கேட்டது.

ராஜேஸ்வரி மேடமும் ரோபர்ட்டும் விளக்கு வெளிச்ச விளிம்பில் நின்றுகொண்டிருந்தார்கள். “ரொம்ப நல்லா பாடுறே நீ பாட்டும் அருமையா இருக்கு...யார் சொல்லிக் கொடுத்தது?” என்று கேட்டாள் ராஜேஸ்வரி.

**ஸ்ரீதரைச் சந்தித்த நாளிலிருந்து இருநூற்று எழுபதாவது நாளில் அகல்யாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சீறு நிறத்துக்கு வந்தது. கண், மூக்கு போன்றவை தீர்க்கமாக அவளையே பார்த்தன. தலையில் நிறைய மயிர் வைத்துக் கொண்டிருந்தது. அதன் விரல்கள் வாச்சையாக இருந்தன. கொஞ்சம் நீளமான குழந்தை. நிறை எல்லாம் சரியாக இருப்பதாகச் சொன்னார்கள். அகல்யாவுக்கு அவர்கள் சொன்ன படியே எல்லாம் செய்தார்கள். குழந்தையைக் கொடுக்கும் நாளும் வந்தது. அந்தக் குழந்தையைக் கொடுப்பதற்கு அவளது மனம் இடம்கொடுக்கவில்லை.**

‘எங்க பாட்டி பாடுவா. வீட்டில் யாருக்காவது பிரசவம் நடந்துகிட்டே இருக்கும். தூளிய ஆட்டிக்கிட்டே பாடுவாங்க. பல பாடல்கள் பதிஞ்சு போச்சு...”

“அதை இத்தனை சீக்கிரம் நீயே பயன்படுத்துவேயென்று எதிர்பார்த்திருக்க மாட்டேல்ல?” என்றார் ராபர்ட்.

“ஆமா சேர்...!”

“ராஜி, சொல்லிடலாமா?” என்றார்.

“இப்பவேவா?”

“ஆமா... இப்பவே சொல்லுறதுதான் நல்லது!”

“என்ன சொல்லணும்?” என்றாள் அகல்யா பயத்துடன்.

“அகல்யா... இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு போக ஒரு ஜோடி வரப்போறாங்க..”

“இந்தக் குழந்தை மேல எல்லா உரிமைகளையும் நீ எழுதிக்கொடுத்திருக்கே, அதை அவங்க எடுத்துக்கொண்டு போய்...”

“எதுக்கு...?”

“என்னம்மா... தெரியாதா? அவங்க வளர்க்கப்போறாங்க...!”

“எவங்க...?”

“வெளிநாட்டிலிருந்து ஒரு ஜோடி வராங்க. அவங்கதான் ஸேரான்னு பேர் வெச்சு, அதை வளர்க்கப்போறாங்க...!”

“அப்ப... குழந்தை...குழந்தை என்னுடையது இல்லையா?”

“இல்லை. இன்னிக்குத்தான் கடைசி தினம். உன் உடம்பு நல்லா தேறிடுச்சு. நீ ரொம்ப அழகாயிருக்கே. சாப்பாட்டை இனிமே குறைக்கணும். நாளை நீ ப்ரோ லை.·.பிலிருந்து போகலாம். போகும்போது உனக்குப் பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுப்பாங்க. நீ இனிமே சுதந்திரப்பறவை. நடந்ததைக் கெட்ட கனவா நினைச்சு மறந்து நேர கல்லூரிக்குப்போ.”

“மாட்டேன்....நான் குடுக்கமாட்டேன்.”

“எல்லாரும் இப்படித்தான் சொல்லுவாங்க. குடுத்திடுவாங்க.”

“இல்லை. நான் வளர்க்கிறேன்!”

ராஜேஸ்வரி சிரித்தாள். ‘பைத்தியம்... உன்னால ஒரு மணிநேரம் வளர்க்க முடியாது..!”

“முடியும். குழந்தையைக் கொடுக்கமாட்டேன். இதை மட்டும் தொட்டீங்க.. அப்புறம் என்ன ஆகும் என்று எனக்கே தெரியாது.”

“என்ன நீ குழந்தையாயிட்டியா? அவங்க நாளைக்கு சுவிசிலயிருந்து வராங்கம்மா...”

“வரவேண்டாம் என்று சொல்லிடுங்க...”

“பைத்தியம் மாதிரி உளறாதே!”

“இல்லை, நான் குடுக்கமாட்டேன் வளர்ப்பேன்!”

“எப்படியம்மா வளர்க்கப்போறே?”

“எங்கம்மாவைக் கூப்பிட்டு வைச்சுக்கிறேன்...”

“உங்கம்மாவைப் பத்தி எல்லாம் விசாரிச்சுட்டோம். அவங்களுக்கு ஜின் சாப்பிடவே நேரம் பத்தாது.

“இல்லை... நான் சொன்னாக் கேப்பா... நான் போன் பண்றேன். இப்பவே போன் பண்ணுறேன்...”

“சரி உங்கம்மா ஒப்புக்கலையென்றா கொடுக்கிறியா?”

“இல்லை... எந்தக் காரணத்துக்காகவும் கொடுக்கமாட்டேன். எனக்கு இவ வேணும்!”

“என்ன நாங்கள் எல்லாம் பைத்தியக்காரங்களா? இந்த ஆஸ்பத்திரியில உன்னைச் சேர்க்க ஒப்புக்கிட்ட காரணம் குழந்தையைக் கொடுக்கிறதாத்தான் பேச்சு. பிறந்த ரெண்டாவது நாள் பிரிச்சிருக்கணும். இல்லை செத்திட்டது என்று பொய் சொல்லியிருக்கணும். போனாப் போகுது ஒரு வாரம் கொஞ்ச விட்டது தப்பாப் போச்சுது. இதுவரைக்கும் உன்மேல ஒண்ணரை இலட்சம் ரூபா செலவழிச்சு உன்னை ராணி மாதிரி போத்தி பாதுகாத்ததுக்கு இப்படி பிரச்சினை கொடுக்கிறியே.. குடு குழந்தையை...”

“மாட்டேன்... எங்கப்பாக்கிட்ட பணம் வாங்கிக் கொடுக்கிறேன்.!”

“பணம் பெரிசில்லையம்மா.. இங்க கோடிக்கணக்கில பணம் வந்து கொட்டுது. கொடுத்த வார்த்தைகள் தான் முக்கியம்...” என்ற ராஜேஸ்வரியின் உதடுகள் துடித்தன.

ராபர்ட் குறுக்கிட்டார். “ராஜி அகல்யா சொல்றதிலையும் நியாயம் இருக்குது. அவ வளர்க்கணும் என்றா வளர்க்கட்டும். நாம கட்டாயப்படுத்தக் கூடாது. பாரும்மா கவலைப்படாதே... உன் குழந்தையை உங்கிட்டயிருந்து பிடுங்க விரும்பலை. உன் சம்மதம் இல்லாம கொடுக்கமாட்டோம். **இன்பம் தொடரும்**

---

## இவ்வாரச் சிறுகதை

# பத்தினியின் தீர்ப்பு!

எஸ்.ஷாஜகான், தாராபுரம்.

**இருண்ட** உலகத்தில் ஓர் இருட்டறைக்குள் அடைபட்டு கிடப்பது போன்ற உணர்வு மனோவிற்கு... காரணம தெரி யாமல் தேம்பி தேம்பி அழுகின்றான். சமூகத்தில் அந்தஸ்தோடு பலரின் நன் மதிப்பைப் பெற்ற இவன் எப்படி சமூகத்திற்கு முகம் கொடுக்கப்போகின்றேன். என்னை சமூகம் ஏற்றுக்கொள்ளுமா. என்னை ஓர் அற்ப புழுவாக அல்லவா ஒதுக்கப்போகின்றது. இறைவா! என்னை ஏன் சோதிக்கின்றாய். நான் என்ன தவறு செய்துவிட்டேன். எனக்காக இந்த கெதி என்று அந்த ஆஸ்பத்திரியே அதிரும் படி அழுகின்றான் மனோ! எனது அன்பு மனைவி, மகன், குடும்பம் இவர்களுக்குத் தெரிந்தால் எனது நிலை என்ன? அவர்கள் வரும் முன் எனது உயிர் என்னை விட்டுப்பிரிய செய்வாயாக கடவுளே! அழு-தான்! அழுதான.

ஒரே கூட்டம். பெரிய குடும்பத்தில் பிறந்த மனோவை காணக் கூட்டம் கூடியது.! மனைவி மகன் அருகில் நின்று! என்ன! “ரிப்போர்ட் வந்ததா!... ஏன் ஒருமாதிரி இருக்கிறீங்க! சொல்லுங்க” என்ற போது அங்கே வந்த தாதி ஒருவர் “யார் மனோவின் மனைவி. உங்களையும், உங்க மகனையும் பெரிய டாக்டர் கூப்பிடுகின்றார்” என்றபோது! மனோ இடிந்து மனம் சோர்ந்தான். கடவுளே உண்மை தெரியப்போகின்றது. என் நிலை! நான் என்ன செய்வேன்! என்னைப் பார்க்க வந்தவர்களை! அவரை இடஞ்சல் பண்ணவேண்டாம்! கலைந்து செல்லுமாறு உத்தரவு விடப்படுகின்றது, சொந்தபந்தம் செய்வதறியாது கலைந்து செல்கின்றனர்.

மனோ மனதால் அழுகின்றான். பயத்தால் இதயம் பட படக்கின்றது.

மனோவின் அன்பு மனைவி, பெரிய வைத்தியரை அணுகும்போது! வைத்தியர் “நீங்கதான் மனோவின் மனைவியா. உங்களையும் உங்க மகனையும் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும்” என்றபோது என்ன ஐயா! எனக்கும் என் மகனுக்கும் எந்த வியாதியும் இல்லையே! ஏன்!... எங்களைச் சோதிக்கவேணும்! ஆச்சரிய வினா எழுப்புகின்றாள்.

“இந்தா பாருங்க அம்மா! உங்க கணவருக்கு ஒரு புரியாத நோய்! இருக்கு! அந்த நோய் சில வேளை உங்களுக்கும் உங்க மகனுக்கும் இருக்கலாம் என்று சந்தேகப்படுறோம். இது உங்க நல்வாழ்வுக்கு தான் கூறுகின்றோம். இந்தப் பரிசோதனை முடிவு வரும் வரைக்கும் எங்களால ஒன்றும் கூற முடியாது. அதனால எங்கட வைத்திய ஒழுங்கின் பிரகாரம் எங்களுக்கு நீங்க ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று நம்புகின்றோம்” என்றார்.

ஒன்றுமே விளங்காமல், புரியாத புதிராக பரிசோதனைக் கூடம் நோக்கிச் செல்கின்றனர்.... மனோவின் அன்பு மனைவி மஞ்சுவும், மகன் சுபாஸ்ᵘம்.


என்னங்க! உங்களுக்கு ஏற்பட்டிருக்கு! வெளிநாட்டுக்கு மேலதிக கல்விக்காகச் சென்று வந்து ஒரு கிழமைதான் ஆகுது. என்ன நோய் உங்களுக்குச் சொல்லியிருப்பாங்களே! ஒன்றையும் மறைக்காமல் உண்மையைச் சொல்லுங்க ஏன்! எங்களையும் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று அழுதாள் மஞ்சு!

“மஞ்சு என்னமோ தெரியலைம்மா. என்ன என்று எனக்கு ஒன்றுமே கூறமாட்டேங்கிறாங்க. வாராங்க வாராங்க இரத்தப் பரிசோதனை என்று என் உடம்பில குத்தாத இடம் இல்லை... வேதனை! வேதனை! தாங்க முடியலையம்மா” என்று மறைத்தான். முழுதையும் மறைத்தான். அந்த மனோ என்ற மன்மதன்.


அந்த பூஞ்சோலைக் கிராமம் அல்லோலகல்லோலப்பட்டிருந்தது. தலைநகர் வைத்தியசாலையில் இருந்த கல்விமான் மனோ இறந்துவிட்டார் என்று...? ஊரே வைத்தியசாலையில கூடியிருந்தது. நல்லதோர் மனுசன் என்ன நடந்தது! புரியாது தவித்தனர் மக்கள்.

மஞ்சு! பெரிய வைத்தியர் அறையில் இருந்தாள்...“இந்தா பாருங்க! நாங்க சொல்லுறதைக் கவனமாக் கேட்கணும். மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்க! அதாவது உங்க கணவர் வெளிநாட்டுக்கு கல்விக்காகச் சென்ற போது அங்கு தவறான நடத்தையில ஈடுபடவேண்டிய சூழல். அவர் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத சூழலால அவருக்கு வரக்கூடாத நோய் “எயிட்ஸ்” என்று கண்டுபிடித்தோம். அதனாலதான் உங்களையும் மகனையும் சோதித்துப் பார்த்தோம். உங்களுக்கும்... எந்தவித வியாதியும் இல்லை என்று முடிவு வந்திருக்கு! ஆனால் உங்க கணவர் உங்கட முகத்தில எப்படி முழிக்கிறது என்று சொல்லி அழுதார். இப்போதுதான் அவருக்கு அறிகுறி மாத்திடலாம் என்று ஆறுதல் படுத்தினேன். ஆனா அவர் ரொம்பவும் யோசிச்சிட்டாரு அதால இதயத் துடிப்பு வேமானதால அவரை எம்மால காப்பாத்த முடியாது போய்விட்டது. அவரின் கடைசி ஆசை ஒன்று மட்டும் கூறினார். “எனக்கு இந்த நோய் என்பதை என் மனைவிக்கு மட்டும் கூறுங்க. ஏனென்றால் மஞ்சு என்னை மன்னிக்கணும் என்றார்”

ஆனால் மஞ்சுவோ அழவில்லை! முகம் கறுத்தது. மனைவியை மறந்து தன் சுயநினைவை இழப்பவர்கள் மனிதனல்ல. இதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. நான் ஒன்றும் அந்தக் காலத்துப் பெண்களல்ல. இந்த அநீதிக்கு அவர் குடும்பம் பொறுப்பேற்கட்டும். என்னால் முடியாது. எழுந்து மகனோடு வீறுநடை போடுகின்றாள்! புதுயுகத்தை நோக்கி.



## பொன்மொழி



நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் (அதற்காக சிங்கமாக ஆகவேண்டும் என நினைத்தால் அது முடியாது. உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)

சுவாமி விவேகானந்தர்

## சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! வடக்கில் மட்டும் நடைபெறும் காணிப் பதிவுகள் எதைக்காட்டுகிறது?

**எம்.பரம்சோதி, யாழ்ப்பாணம்.**

● மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தம் நடைபெற்ற பகுதிகள் தற்போதைய நிலையில் மீள்பதிவு அல்லது மீள் உறுதிப்படுத்தல் என்கின்ற காரணங்கள் கூறப்படுகின்றது. இதேவேளை யுத்த நெருக்கடி காரணமாக அக்காலகட்டத்தில் காணிகளை விற்பனை செய்தோர் அல்லது இழந்தோர் இப்போது மீண்டும் காணிகளுக்குச் சொந்தம் கொண்டாடுகின்ற அல்லது இழந்த காணிகளை மீளப்பெறுகின்ற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இந்த விவகாரமே காணிகள் தொடர்பான பிரச்சினைகள் உருவாகுவதற்கு அடிப்படையாக இருக்கின்றது. எனினும் இவ்விவகாரம் சந்தேகங்களுக்கும், அதிகாரத் துஷ்பிரயோகங்களுக்கும் இடமில்லாத வகையில் மக்களின் பூரண ஒத்துழைப்போடு கையாளப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் வடக்கைப் பொறுத்தவரை அரச காணிகளை விடவும் தனியார் உரித்துக் காணிகளே அதிகமாகும்.

✉ தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சூழலாலேயே தருஸ்மன் அறிக்கையை ஏற்கும் நிலை வந்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டுகின்றாரே?

**எஸ்.வர்ணன், திருநெல்வேலி.**

● எதிர்க்கட்சியாய் இருப்பதால் அவர் அப்படிக் கூறுகின்றார். அவர் வெளிநாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் இலங்கையில் சமகாலப் போக்கை விட்டுக் கொடுக்காமலே கருத்துக்களைக் கூறினார்.

அந்தக் கருத்துக்களால் அரசுக்குச் சார்பாக நடந்துகொள்கின்றார் என்ற விமர்சனத்துக்கு தனது கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் ஆளாகின்றார். ஆகவே ரணில் விக்கிரமசிங்க கூறும் கருத்துக்கள் அவரின் அடுத்த அறிக்கை வரை எந்தளவுக்கு நிலையானது என்பது கேள்விக்குறியானதாகும்.

✉ சிந்தியா! T.N.A ஐ அமெரிக்க அரசாங்கம் அழைத்திருப்பது பற்றி...?

**க.சாரங்கன், யாழ்ப்பாணம்**

● இது மனோகரா திரைப்படத்தில் அழைத்து வரச்சொன்னீர்கள், ஆனால் இவர்கள் இழுந்து வந்திருக்கிறார்கள் என்ற திரைக்கதை வசனத்தைப் போல் உள்ளது.

T.N.A தரப்பிலிருந்து நாங்கள் அமெரிக்காவிற்குப் போகிறோம். அங்கே ஜோர்ஜ் புஷ் அழைக்கிறார், ஒபாமா அழைக்கிறார், ஹிலாரி அழைக்கிறார், பிளேக் அழைக்கிறார் என்கிறார்களே தவிர அவர்கள் தரப்பிலிருந்து நாங்கள்தான் அழைக்கின்றோம் என்று எந்தச் செய்தியும் இதுவரை வரவில்லை. தமிழர் தரப்புப் பிரச்சினையை எங்கு கொண்டு சென்றாலும் அது இங்கேயே தீர்க்க வேண்டும் என்பதே உண்மையாகும்.

எத்தனை தாய்லாந்துப் பயணங்கள், நோர்வே பயணங்கள், ஜப்பான் பயணங்கள், இந்தியப் பயணங்கள் பார்த்தாகிவிட்டது. ஒன்றுமே பிரச்சினையைத் தீர்க்க உதவவில்லை. அவற்றில் இதுவும் ஒன்று. இவர்களது பயணமும் தாய்லாந்தில் புலிகள் சொப்பிங் போனது போல இருக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

✉ சிந்தியா! ஆபத்து வரும் பொழுது நீங்கள் உயிரையா? மானத்தையா துச்சமாக நினைப்பீர்கள்?

**எஸ்.பத்மன், மன்னார்.**

● ஆபத்து என்பது உயிருக்கு எதிரானது. அதை அந்த வேளையில் துச்சமாக எடுத்துக் கொள்பவருக்குப் பிறகு மானத்தைப் பற்றி என்ன இருக்க முடியும்.

உங்களுக்கு ஒரு பெயர், எனக்கு ஒரு பெயர். இறப்புக்குப் பிறகு இருவருக்கும் ஒரு பெயர். இதுதான் உண்மை என்றால் உயிருக்கு பிறகு தானே, மானம் என்ற முடிவு முடிவாகிவிடும்.

✉ சிந்தியா! உழைப்பால் உயர்ந்தவர்கள் என்று கூறக்கூடிய வர்களைப் பட்டியல்படுத்துவீர்களா?

**எஸ்.கலைவாணி, திருகோணமலை.**

● நீண்ட பட்டியல் இது என்னைப் பொறுத்தவரை உண்மையான உழைப்பால் உயர்ந்தவர்களை விடவும் மக்களுக்காக உழைக்கின்றேன் என்று கூறிக் கொண்டு உழைக்கும் அரசியல் முதலாளிகளே மிக அதிகமானவர்கள். அப்படிப் பார்த்தால் விடை மட்டுமே வாரக்கணக்காக எழுதிக்கொண்டிருக்க முடியும். நீங்கள் போன பாராளுமன்றத் தேர்தலில் யாருக்கு, வாக்களித்தீர்கள், அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எனது பட்டியலில் உங்கள் வேட்பாளர் எத்தனையாம் இடம் என்பது உங்களுக்குத் தெரியும்.

✉ சிந்தியா! மனதில் நினைப்பதைத்தான் உதடு பேசும் என்கிறார்களே!


**எச்.எம்.எம்.மஸ்னவி, புத்தளம்.**

● மனிதன் பேசத் தெரிந்த காலத்தில் இருந்து இந்த ஒழுக்கம்தான் தொடர்கின்றது. ஆனால் எல்லா மனிதர்களும் மனதில் நினைப்பதை உதடுகளால் உதிர்த்து விடுவதில்லை. அதேபோல் எல்லா மனிதர்களிடத்திலும் மனது சொல்லாத, உதடுகள் சொல்ல நினைக்கின்ற எத்தனையோ விடயங்கள் இன்னும் வெளிப்படாமலேயே இருக்கின்றன. உதடுகள் மனதின் கட்டளைக்குப் பணியாமல் பேசுவதை மௌனங்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உங்களைக் கேளாமல் உங்களது உதடுகள் பேசுவதை முதலில் நீங்கள் உணரவேண்டும்.

✉ சிந்தியா! இலங்கை அணியின் எதிர்கால வெற்றி வேகப்பந்து வீச்சாளர் களில்தான் தங்கியிருப்பதாக டில்சான் கூறியுள்ளாரே?

**எஸ்.கஜன், கண்டி.**

● கடந்த 20 ஆண்டுகளாக முரளிதரனின் சுழல்பந்து வீச்சில் தங்கியிருந்த இலங்கை அணி தற்போது அவரின் இடத்தை நிரப்பத் தடுமாறிக் கொண்டிருக்கிறது. நிரப்புவதென்பது இயலாத காரியமென்பதை உணர்ந்தும் விட்டது. எனவேதான் வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டு விக்கெட்டுக்களைப் பதம் பார்க்க எண்ணியுள்ளார் டில்சான்.




## இலக்கிய நயம் 49

கே.வி. குணசேகரம்



# அலைமோதும் அபலை

கடற்கரையில் தலைவியும் தோழியும் இருக்கின்றனர். தலைவி கடல் அலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். முதலில் சிறு சிறு அலையாக எழுந்து வந்த கடல் நீர் பின் பெரும் அலையாக வீறுகொண்டு வருகிறது. வீறுகொண்டு எழுந்து வந்த கடல் அலை மண்ணை இடித்துக் கரைத்துத் தன்னோடு அள்ளிச் செல்கிறது. அக்காட்சியை வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் தலைவி. அவளுக்குச் சிரிப்பு வருகிறது. அந்தச் சிரிப்புக்குள் முதல் நாள் இரவு நடைபெற்ற நிகழ்வு தெரிகிறது. அவளால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. அது ஒரு சில கணங்கள் தான். பின் அச்சிரிப்பு கலக்கமாக மாறி அவளது கண்களைக் கலங்க வைக்கிறது. தலைவியின் முகமாற்றத்தை அவதானித்துக்கொண்டிருந்த தோழி அவளது தோளைப் பிடித்து உலுப்புகிறாள். திடுக்கிட்டுத் தடுமாறிய தலைவியைப் பார்க்கத் தோழிக்குப் பரிதாபமாக இருந்தது.

அன்பான எனது தலைவியே நீ கடற்கரைக்கு வந்த நேரம் முதல் நான் உன்னை அவதானித்துக்கொண்டுதான் இருக்கின்றேன். முதலில் கடல் அலைகளைப் பார்க்கும்போது உனது முகத்தில் நாணம் குடிகொண்டிருந்தது. அதன் பின் பரபரப்பும் மாற்றமும் தென்பட்டன. அதன்பின் முகம் சிவந்தது. நீ அந்நேரம் மகிழ்வின் உச்சியில் இருந்தாய். பின் உனது முகம் கலவரமடைந்தது. கண்கள் கூடக் கலங்கியிருக்கின்றன. இரவு காதலனைச் சந்தித்தபோது நாணம் என்ற திரை கலைந்து விட்டது போலத்தெரிகிறது" என்றாள் தோழி.

சிறிது நேரம் எதுவும் பேசாதிருந்த தலைவி சொன்னாள், "என் அன்புக்குரியவளே, கடல் அலைகளைப் பார். சிறுசிறு அலைகள் கரையில் மோதும்போது மண் இடிந்து செல்லவில்லை. பெரும் அலை வந்து மோதும்போது மண் இடிந்து அலையுடன் செல்கிறது பார். அதுபோல..." நிறுத்தினாள் தலைவி அவளது முகம் நவரச பாவனை காட்டியது.

"அதுபோல மேலே சொல். அது தெரிந்தால்தான் உனது காதலனைச் சந்தித்து மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று நான் அவனுக்குச் சொல்ல வேண்டும்" என்றாள் தோழி.

என்னுள் நாணம் என்றொரு கரை இருந்தது. காதலனைச் சந்திக்கும்போது அது மிகவும் பாதுகாப்பாக இருந்தது. காதலனின் நெருக்கம் அதிகரித்தபோது பொங்கியெழும் அலைகரையில் உள்ள மண்ணை இடித்துச் சரித்துத் தன்னோடு கொண்டுசெல்வதைப் போலக் காதலனின் நெருக்கம் எனது நாணமாகிய கரையை உடைத்து அள்ளிச் சென்றுவிட்டது" என்றாள் தலைவி.

இனிப் பொறுக்கமுடியாது. நீ உனது காதலனுடன் ஓடிப்போய்விடு. நான் அவனுக்குச் சொல்கிறேன் என்றாள் தோழி. அவ்வார்த்தைகள் தலைவிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன.

வெள்ளி வீதியார் என்ற சங்க காலப் புலவர், காதலி, காதலனைத் தனிமையில் சந்தித்தபோது எல்லை தாண்டியமையால் புலவர் உடனே அவனுடன் சென்று திருமணம் செய்து கொள் என்று கூறுகிறார். சங்க காலத்தில் காதலுக்குத் தடை இருக்கவில்லை. காதலிப்பவர்களைப் பெற்றோருக்கு அறிவித்தும் அறிவிக்காதும் நிலைமையைப் பொறுத்துத் தோழி செயற்பட்டாள். வெள்ளி வீதியார் சிறந்த புலவர். அவரின் அர்த்தம் பொதிந்த பாடல் இது.

"அளிதோதானே - [illegible]ாணோ நம்மொடு
நனி நீடு உழந்தன்று
மன்னே; இனியே,
வான் பூங்கம்பின் ஓங்கு
மணற் சிறு சிறை
தீம்புனல் நெரிதர வீந்து
உக்கா, அங்கு,
தாங்கும் அளவைத் தாங்கி
காமம் நெரிதரக் கைந்
நில்லாதே'

# அதே பாணி இடம்

அமெரிக்க உளவு விமானத் தாக்குதல் என சந்தேகிக்கப்படும் தாக்குதல், அல்-கொய்தாவின் முக்கிய பிரமுகர்களைப் பலி வாங்கியுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான், இதே பகுதியில், கிட்டத்தட்ட இதே பாணியில் அல்-கொய்தாவின் பிரபல தலைவரான அன்வர் அல்-அவுலாகி கொல்லப்பட்டிருந்தார்.

தற்போது கொல்லப்பட்டுள்ள அல்-கொய்தா பிரமுகர்களில், அன்வர் அல்-அவுலாகியின் 21 வயது மகனும், சகோதரரும் அடங்குவர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் அன்வர் அல்-அவுலாகி இதே பகுதியில் கொல்லப்பட்ட நிலையிலும், இவர்கள் தமது மறைவிடத்தை மாற்றாமல் ஏன் அங்கேயே தங்கியிருந்தனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒரு மறைவிடத்தின் மீது தாக்குதல் ஏதாவது நடைபெற்றால், அந்தப் பகுதியில் இருக்கும் தமது சகல மறைவிடங்களையும் அகற்றி விடுவதுதான், இதுவரை அல்-கொய்தாவின் வழக்கமாக இருந்து வந்தது.

நடைபெற்ற மூன்று விமானத் தாக்குதல்கள், அல்-கொய்தாவினரின் மறைவிடங்களை குறிவைத்து நடாத்தப்பட்டிருந்தன. இந்த மறைவிடங்கள் பற்றிய உளவுத் தகவல்கள் சி.ஐ.ஏ.க்கு கிடைத்தன என்றும், அதையடுத்து உடனடியாகவே தாக்குதல்கள் திட்டமிட்டு, நடாத்தப்பட்டன எனவும் உளவு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அல்-கொய்தா மறைவிடத்தில் இருந்த மொத்தம் 9 பேர், இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. அன்வர் அல்-அவுலாகியின் மகன், சகோதரர் ஆகிய இருவருடன், அல்-கொய்தாவின் பிராந்திய மீடியா தலைவரும் கொல்லப்பட்டுள்ளார் என்பதை அல்-கொய்தா உடனடியாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன் அன்வர் அல்-அவுலாகி கொல்லப்பட்ட தகவல் வெளியான போதிலும், சில வாரங்கள் கழித்தே, அவரது மரணத்தை அல்-காய்தா உறுதிப்படுத்தியிருந்தது. இம்முறை தாக்குதல் நடைபெற்று 24 மணி நேரத்துக்கு இடைப்பட்ட காலத்திலேயே, அல்-கொய்தா தகவல் வெளியிட்டுள்ளது. இதற்குக் காரணம், கொல்லப்பட்டவர்களில், அல்-கொய்தாவின் மீடியா தலைவரும் இருப்பதால்தான் என்று ஊகிக்கலாம்.



அல்-கொய்தாவின் ஏமன் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கொல்லப்பட்ட மீடியா தலைவரின் பெயர் இப்ராஹிம் அல்-பானா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**நடைபெற்ற மூன்று விமானத் தாக்குதல்கள், அல்-கொய்தாவினரின் மறைவிடங்களை குறிவைத்து நடாத்தப்பட்டிருந்தன. இந்த மறைவிடங்கள் பற்றிய உளவுத் தகவல்கள் சி.ஐ.ஏ.க்கு கிடைத்தன என்றும், அதையடுத்து உடனடியாகவே தாக்குதல்கள் திட்டமிட்டு, நடாத்தப்பட்டன எனவும் உளவு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், கொல்லப்பட்டது யார் என்பதை சி.ஐ.ஏ. உறுதிப்படுத்தப் போவதில்லை.**

இந்தத் தகவல் நிஜமாக இருக்கும் பட்சத்தில், இவர் வெறும் பிராந்தியத் தலைவர் மட்டும் அல்ல. அதைவிட பெரிய ஆள்.

அல்-கொய்தாவில், இப்ராஹிம் அல்-பானா என்ற பெயருடன், ஊடகத்துடன் சம்மந்தப்பட்ட நபர் ஏமன் நாட்டவர் அல்ல. அவர் ஒரு எகிப்தியர். அரபு ஊடகங்களில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தும் நபர் அவர். சி.ஐ.ஏ.யின் மோஸ்ட் வான்டட் பட்டியலில் உள்ள அவர், ஏமனில் மறைந்திருந்ததாக சில மாதங்களுக்கு முன் தகவல் வெளியாகியிருந்தது.

கொல்லப்பட்டதாக இவர்கள் குறிப்பிடும் நபர்தான், எகிப்தியரான இப்ராஹிம் அல்-பானா என்றால், சி.ஐ.ஏ.யைப் பொறுத்தவரை இது மிகப் பெரிய வேட்டைதான்.

## இலக்கு -2-

ஆனால், கொல்லப்பட்டது யார் என்பதை சி.ஐ.ஏ. உறுதிப்படுத்தப் போவதில்லை. காரணம், ஏமன் நாட்டுக்குள் அமெரிக்க விமானத் தாக்குதல்கள் ஏதும் நடாத்தப்படுவதில்லை என்று ஏமன் அரசு தொடர்ந்து கூறி வருகின்றது. அங்கே தாக்குதல் நடாத்துவதாக சி.ஐ.ஏ.யும் ஒப்புக் கொள்வதில்லை.

இந்தத் தாக்குதல்கள் எல்லாமே, ஏமன் அரசுக்கும் சி.ஐ.ஏ.க்கும் இடையிலான இரகசிய ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். அதனால், இரு தரப்பினரும் எதையும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.



18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

### சிறுவர் உரிமைகளை...

வெகுசன ஊடகம் எவ்வாறு செயற்படுகின்றது மற்றும் அதன் செய்திகளை எவ்வாறு விளக்குவது என்பது தொடர்பில் விளக்குவதன் மூலம் சிறுவர்கள் மற்றும் பருவமானவர்கள் மத்தியில் 'ஊடக எழுத்தறிவை' அதிகரிப்பதற்கு ஊடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் உதவமுடியும்.

ஊடகத் தயாரிப்புக்களின் அனைத்து வடிவங்களிலும் சிறுவர்களின் ஈடுபாடு மிகவும் அவதானமாகத் திட்டமிடப்பட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் எதனைப் புரிய வேண்டும் மற்றும் எதனைப் புரியக்கூடாது என்பது தொடர்பில் அனைவரும் அறிந்து கொள்வர் என்று அந்த விளக்கவுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் அனைத்து நாடு களிலும் சிறுவர்கள் மிகவும் பெறுமதி மிக்கவர்களாகவும், சமூகத்தில் மதிக்கப்பட வேண்டியவர்களாகவும் கருதப்படுகிறார்கள். ஆதலினால் எவரும் சிறுவர்களைத் தீய விடயங்களில் ஈடுபடுத்த முடியாது. ஈடுபடுத்தவும் கூடாது என்று கூறுகிறார் விரிவுரைகளை நிகழ்த்திய சிறுவர் நலன் காப்பு விஷேட வளவியல் நிபுணரான ஓல்வெற் ஜெனோவா அல்பிரட் அவர்கள்.

சிறுவர்கள் தொடர்பான நலன்களில் முதலில் பெற்றோரும், பாதுகாவலர்களும், சமூகநல விரும்பிகளும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் சிறுவர்களை நல்வழிப்படுத்துவது தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

சிறுவர்கள் பாடசாலைக் கல்வியினைத் தொடர்வதற்கும், கலை, கலாசாரம் போன்ற நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கும், தன்னுடைய ஆளுமையினை வெளிப்படுத்துவதற்கும் பிள்ளையின் எதிர்கால நலன்கருதி பாடசாலை ஆசிரியர் மிகவும் பொறுப்பு வாய்ந்தவராக செயற்பட வேண்டும். அத்துடன் ஒரு பிள்ளைக்குரிய ஆற்றலினை இனம் காண்பது ஒரு ஆசிரியரைச் சாரும்.

குழந்தைப்பருவம் என்பது மனித வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு சிறப்புக் காலகட்டமாகும். ஒரு பிள்ளை தனது இளமைப் பருவத்திலேதான் அனைத்து உரிமைகளையும் உரிய வகையில் அனுபவிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கின்றது. இதனூடாக இப்பிள்ளை எதிர்காலத்தில், சிறந்த ஒரு நற்பிரஜையாக விளங்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஆனாலும் இப் பிள்ளை அனைத்துரிமைகளையும் பெற்றுள்ளது என்பதனால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக மாட்டாது என்று அர்த்தமாகாது.

சிறுவர்கள் பிறந்ததிலிருந்து தன்னுடைய சூழலினை சிறப்பான முறையில் அறிந்து கொண்டு தன்னை காப்பாற்றிக் கொள்ளும் நிலை வரும்வரையும் பெற்றோர் அதிக விழிப்புணர்வுடன், பிள்ளை நடமாடும் பாடசாலை, பொது இடங்கள் ஏனைய சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றினை அவதானிக்க வேண்டும். பிள்ளைக்குத் தேவையான பாதுகாப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்புக்களும், கடமையும் பெற்றோருக்கு இருக்கிறது. குடும்ப வறுமை இருந்தாலும் பிள்ளைகளை தொழிலுக்கு அமர்த்துதல், துஷ்பிரயோகத்திற்குட்படுத்துதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சிறுவர் உரிமைகளின் அடிப்படைக் கோட்பாடானது சமுதாயத்தில் சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மட்டுமின்றி சிறுவர்களின் ஆளுமை, ஆற்றல், திறன்கள் ஆகியவற்றினை மேம்படுத்த உதவ வேண்டும். சிறுவர் உரிமை என்பது அனைத்து சிறுவர்களுக்கு உரித்தானதொன்றாகும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(20.10.2011 தொடக்கம் 26.10.2011 வரை

### மேடம்

பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். வெற்றிகள் குவியும். உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டேனும் காப்பாற்றி விடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களிடம் பாசம் அதிகரிக்கும். சகோதர, சகோதரி வகையில் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரித்தாலும் உழைப்பிற்கேற்ற பலனைப் பெறுவீர்கள். ஆனாலும் சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றங்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை உடனுக்குடன் செயல்படுத்த முனைய வேண்டாம். மாணவமணிகள் அதிக உழைப்பினால் சோர்வடைவீர்கள். அதனால் சரியான நேரத்தில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மற்றபடி நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

### இடபம்

சாதகமான வாரம். பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருந்தாலும் தேவையான பொருள் கிடைத்துவிடும். தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி உங்களின் செயல்களில் வெற்றியடைவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். எதிரிகள் ஒதுங்கிப் போவார்கள். உங்களின் மதிப்பு, மரியாதைக்குக் குறைவு வராது. உத்யோகத்தர்கள் அலுவலக வேலைகளை உற்சாகத்துடன் செய்து முடிப்பீர்கள். பதவி உயர்வுடன் ஊதிய உயர்வையும் பெறுவீர்கள். பெண்மணிகளின் உடல் நலம் பாதிக்கப்படலாம். மேலும் கணவருடனான பிரச்சினைகளைத் தவிர்க்கவும். மாணவமணிகளின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். உங்களின் நீண்டகாலத் திட்டங்களுக்கு இது உகந்த வாரம்.

### மிதுனம்

ஆனந்தமான வாரம். செயல்களில் முன்னேற்றம் தென்படும். பிரச்சினைகள் அகலும். கடனில் உள்ள வீட்டை மீட்பீர்கள். உற்றார், உறவினர்களால் நன்மை அடைவீர்கள். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். வழக்குகள் முடிவுக்கு வரும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். எனவே எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் இருந்த குழப்பங்கள் விலகும். சிறப்பாகப் பணியாற்றும் நிலை உண்டாகும். எதிர்பாராத பதவி உயர்வு உங்களைத் தேடி வரும். பெண்மணிகள் ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். எவரிடமும் மனம் திறந்து பேச வேண்டாம். மாணவமணிகள் கல்வி உயர்வுக்காகச் செய்யும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

### கடகம்

உற்சாகமான வாரம். வருமானம் நன்றாக இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். உங்களின் எல்லாச் செயல்களும் நன்றாகவே முடிவடையும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த உதவிகளைப் பெறுவீர்கள். பயணங்களால் நன்மை அடைவீர்கள். உத்தியோகத்தர்கள் நல்ல முறையில் பணியாற்றுவீர்கள். மேலதிகாரிகள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பெண்மணிகளுக்குக் கணவரிடம் நிலவி வந்த கருத்து வேறுபாடு நீங்கும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவீர்கள். மாணவமணிகள் விடாமுயற்சியால் வெற்றியடைவீர்கள். பெற்றோரை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

### சிங்கம்

வெற்றிகரமான வாரம். நடக்காது என்று நினைத்திருந்த காரியங்கள் அனைத்தும் திடீரென்று நடக்கும். தந்தையை அனுசரித்துச் செல்லவும். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். வீண் அச்சத்தை விரட்டி விடுங்கள். உங்களின் உழைப்பு உங்களை உயர்த்தும். உத்தியோகத்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளவும். விவசாயிகளுக்குக் கொள்முதலில் இலாபம் கிடைக்கும். பெண்மணிகளுக்குக் குடும்பத்தில் சாதகமான நிலை தென்படும். உங்களின் பக்குவமான பேச்சினால் அனைவரையும் கவர்வீர்கள். மாணவமணிகள் படிப்பில் முழு கவனத்தையும் செலுத்தவும். தாமதம் ஏற்படும்.

### கன்னி

தடைகள் விலகும். யோக பாக்கியங்கள் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு இரண்டும் கிடைக்கும். சக ஊழியர்களும் உங்களோடு நட்புடன் பழகுவார்கள். கலைத்துறையினருக்கு இந்த வாரம் வரவேற்புகள் குறையும். இருப்பினும் திறமை குறையாது. என்றாலும் புதிய முயற்சிகளை இயன்றவரை ஒத்திவைக்கவும். பெண்மணிகளுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். குழந்தைகளை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவீர்கள். மாணவமணிகள் படிப்பில் போதிய கவனம் செலுத்தவும். உள்ளரங்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு வெற்றியடைவீர்கள்.

### துலாம்

சிறு சிறு குழப்பங்களைச் சந்திப்பீர்கள். உங்கள் முயற்சிகள் நிறைவேறுவதில் சில தடைகள் ஏற்படலாம். அலைச்சல் அதிகரிக்கும். உறவினர்களுடன் மனக்கசப்புகள் ஏற்படும். எச்சரிக்கையுடன் இருந்தால் அனைத்தையும் சமாளித்து விடலாம். மற்றபடி பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். உத்தியோகத்தர்கள் எல்லோரிடமும் சுமுகமாகப் பழகவும். சற்று அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். பணவரவு நன்றாக இருப்பதால் உழைப்பு வீண் போகாது. அதோடு கணவருடனான ஒற்றுமையும் சுமாராகவே இருக்கும். உடல் நலத்திலும் கவனமாக இருக்கவும். மாணவமணிகளுக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். படிப்பில் அக்கறை செலுத்தவும். விளையாட்டில் விபத்தின்றி கவனமாக ஈடுபடவும்.

### விருச்சிகம்

நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி வாகை சூடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாடும். வருமானம் உயரத் தொடங்கும். பிள்ளைகளை வெளியூர் மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைப்பீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். பண வரவு சீராக இருக்கும். வியாபாரிகள் கடுமையாக உழைத்து வருமானம் ஈட்டி முக்கியப் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பெண்மணிகள் கணவருடன் இணக்கமாக இருப்பீர்கள். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி நிலவும். அதேசமயம் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும். மாணவமணிகள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிக்கொடி நாட்டுவீர்கள்.

### தனுசு

அதிர்ஷ்டகரமான வாரம். உங்கள் திட்டங்கள் அனைத்தும் நல்லபடியாக முடியும். இனிய செய்திகள் உங்களை வந்தடையும். பெரியோர்களின் நட்பும், ஆசியும் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிலருக்குப் புது வீடு வாங்கும் யோகம் உண்டாகும். மற்றவர்களின் விஷயங்களில் தலையிட வேண்டாம். மேலும் வழக்குகளில் நிதானமாகச் செயல்பட்டு வெற்றியடையுங்கள். உத்தியோகத்தர்கள் திட்டமிட்ட வேலைகளை மிகுந்த கவனத்துடன் செய்து முடிப்பீர்கள். அதோடு வருமானத்திற்கும் குறைவு வராது. வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் இலாபகரமாக முடியும். பெண்மணிகளுக்குக் கணவருடனான ஒற்றுமை திருப்திகரமாக இருக்கும். மாணவமணிகளுக்குக் கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். வருங்காலத் திட்டங்களுக்கு அத்திவாரம் போடுவதற்கான சூழ்நிலை உருவாகும்.

### மகரம்

வெற்றிகரமான வாரம். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். வருமானத்தில் திருப்திகரமான சூழ்நிலை நிலவும். நண்பர்கள் தேவைக்கேற்ப உதவுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். திட்டமிட்ட வேலைகள் அனைத்தும் திருப்திகரமாக முடியும். சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளவும். வியாபாரிகள் பொருட்களைப் புதிய சந்தைகளில் விற்க முயற்சி செய்வீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சலால் இலாபம் அதிகரிக்கும். பெண்மணிகள் இல்லத்தில் சந்தோக்ஷத்தைக் காண்பீர்கள். சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் எண்ணம் மேலோங்கும். மாணவமணிகளுக்கு வெயிலால் தோல் நோய்கள் உண்டாகலாம். ஆனாலும் உற்சாகத்துடன் இருப்பீர்கள்.

### கும்பம்

சாதகமான வாரம். வருமானம் நன்றாக இருக்கும். கடன் தொல்லைகள் கட்டுக்குள் இருக்கும். உங்கள் செய்தொழிலை மேம்படுத்த நண்பர்கள் உதவுவார்கள். போட்டி, பொறாமைகளும் குறைவாகவே இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்படாது. குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவீர்கள். தூரப் பயணங்களால் நன்மை அடைவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மேலதிகாரிகள் உங்களை அனுசரித்து நடந்துகொள்வார்கள். உங்கள் வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் உங்களைத் தேடி வரும். பெண்மணிகள், குழந்தைகள் நலனில் அக்கறை காட்டவும். மற்றபடி ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். மாணவமணிகள் விடாமுயற்சியால் வெற்றியடைவீர்கள். பெற்றோரை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

### மீனம்

தடைகள் விலகும். வருமானம் இரட்டிப்பாகும். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். குடும்பத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். பூர்வீகச் சொத்துக்களில் நிலவிய பிரச்சினைகள் மறையும். சகோதர, சகோதரிகளிடம் நிலவும் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்த வேண்டாம். உங்களைத் தேடி வரும் வாய்ப்புகளையும் நழுவவிடாமல் சாதுரியமாகப் பயன்படுத்தி முன்னேற்றம் அடைவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றமும் பதவி உயர்வும் கிடைக்கும். சக ஊழியர்களிடம் எதிர்பார்த்த ஒத்துழைப்பைப் பெறுவீர்கள்.பெண்மணிகளுக்கு பணவரவு திருப்திகரமாக இருப்பதால் ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள். குழந்தைகளாலும் பெருமை அடைவீர்கள். மாணவமணிகள் உள்ளரங்கு விளையாட்டுகளில் மட்டுமே கவனம் செலுத்தவும்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
— காதில பூ கந்தசாமி —

**கிட்டடியில இலங்கைக்கு வந்திருந்த அயலகத்தின்ர வெளியுறவுச் செயலருக்கும் கூட்டான அமைப்புக்கும் இடையில சந்திப்பு நடைபெற்றது. அச்சந்திப்பு எவ்வாறு அமைந்திருக்கும், என்னவெல்லாம் பேசியிருப்பாங்க என்கிறதப் பற்றி கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுகிறார் காதிலை பூ கந்தசாமி.**

நமஸ்தே பாஜி...நமஸ்தே பாஜி எப்பிடி நல்ல சௌக்கியமா இருக்கிறீங்களா? (கோரசாக பாடிக்கொண்டே வெளியுறவுச் செயலரை நெருங்குகிறார்கள் கூட்டான அமைப்பினர்.)

**வெ.செ:-**நமஸ்தே எப்பிடி எல்லாம் சௌக்கியமா? உட்காருங்க. (முன்னாலிருந்த சோபாவைக் காண்பிக்கிறார்)

**கூ.பிரமுகர்-01:-** பளே பளே... பாஜிக்கு தமிழ் பேசத் தெரியுது. (அருகில் இருந்த சக உறுப்பினரைப் பார்த்துக் கூறுகிறார்)

**வெ.செ:-** ஆமா எனக்கு நிறைய தமிழ் நாட்டு ப்ரெண்ஸ் இருக்கிறாங்க. அவங்ககூட ஜாலியா தமிழ் பேசுவன். தமிழ்நாட்டு சூப்பர் ஸ்ரார் ரஜினி என்னோட பே·வரிட். சோ, நிறையத் தமிழ் பிலிம் பார்ப்பேன்...

**கூ.பி-02:** அப்பிடியா! எனக்கும் சூப்பர்ஸ்ரார்தான் பே·வரிட். அப்பிடீன்னா சாருக்கும் எனக்கும் ஒரே ரேஸ்ட். (அருகிலிருந்து கூ.பி-03, கூ.பி-02 இன் காலை மிதித்து அமைதியாக இருக்கும்படி எச்சரிக்கிறார்)

**வெ.செ:-** ஓ.கே...ஓ.கே. லெட்ஸ் கம் ருத பொயின்ட். நீங்க எதுக்கு வந்தீங்க?

**கூ.பி-01:** சார்.... சார் இங்கையெல்லாம் மிச்சம் மோசம். நம்மள கணக்கிலேயே எடுக்கிறாங்களில்லை. உங்கட நாட்டு பெரிய சார் சொல்லுறதையும் கேட்கிறதில்லை. அவையள் நினைச்சபடிதான் எல்லாமே செய்திருக்கினம். இதையெல்லாம் நீங்கள் போய் உங்கட பெரிய சாரிட்ட சொல்லி கொஞ்சம் குட்டுப்போட சொல்லணும். அப்படியே எங்களையும் கொஞ்சம் ரெஸ்ட்பெக்டா நடத்தச்சொல்லணும்.

**கூ.பி-03:**(குறுக்கே பேச்சைத் தொடங்குகிறார்) சார்... சார் யூ நோ வன் திங். நோர்த்தில நிறைய ஆமி இருக்குது. நிறைய முகாம்களும் இருக்குது. அதுகளைப் பார்க்கிறப்ப எங்களுக்கெல்லாம் அலேர்ஜியா இருக்குது. சோ, அதுகளையெல்லாம் எடுக்கச் சொல்லி நீங்கள் சொல்லவேணும்.

**வெ.செ:-** ஓ.கே... ஓ.கே அதெல்லாம் செய்யலாம். பட் இப்ப முதலில் அறியவேண்டியது என்னவென்றால் மன்னாரில எரிவாயு இருக்குது எண்டு சொல்லினம் அதுபற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

**கூ.பி-02:** ஓம் சேர் இருக்குதாம். பேப்பரில பார்த்தனாங்கள். ஆனால் அங்கெல்லாம் நாங்கள் போறதில்லை. அங்க போறதாலை வோட்ஸ் கிடைக்காதுதானே.

**கூ.பி-01:** ("இப்படியானவர்களையெல்லாம் ஏன்தான் என்னோட சேர்த்து வைச்சிருக்கேனோ தெரியாது." மனசுக்குள் திட்டுகிறார். எனினும் சமாளித்துக்கொண்டு) ஸொரி சேர். இந்தத் தம்பி விளக்கமில்லாமல் கதைச்சுக்கொண்டிருக்கிறார். தொடர்ச்சியா எலெக்ஷன் பிசியில திரிஞ்சதால எரிவாயு சப்ஜெக்ட் பக்கம் தலையை நுழைக்கேலாமப்போச்சு. உங்களுக்கு ஏதாவது தெரியவேணுமெண்டால் சொல்லுங்கோ அறிஞ்சு சொல்லுறம்.

**வெ.செ:-**-யெஸ் அதைப் பற்றி கொஞ்ச டீற்ரெல்ஸ் கலக்ட் பண்ணித்தந்தால் உதவியாய் இருக்கும்.

**கூ.பி-02:** ஓமோம் கட்டாயம் உங்களுக்குச் செய்வோம்.

**கூ.பி-03:** அப்படியெண்டால் சேர் நாங்கள் சொன்ன பிரச்சினைகளைப் பற்றி எப்ப கதைக்கப்போறியள்.

**வெ.செ:-** நாட்டுக்குப்போய் பெரிய சாருக்குச் சொல்லி உங்களுக்கு நல்ல றிசல்ட் எடுத்துத் தாரன். டோண்ட் வொறி. ஆனா நான் சொன்னதுகளை நீங்கள் மறந்திடாமல் செய்யவேணும்.

**கூ.பி-01,02,03:** (கோரசாக) ஓ.கே சார் நீங்கள் சொன்னதையெல்லாம் நாங்கள் செய்வோம். எங்களுக்கு அதைத் தவிர வேற ஏது வேலை. யோசிக்காமல் போட்டுவாங்கோ.

**கூட்டான அமைப்பின் பிரமுகர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வெள்ளாங்கித்தனத்தை எண்ணி அவர் புன்முறுவல் செய்தபடி வைத்த கண் வாங்காமல் இவர்களின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் வெளியுறவுச் செயலர்.**

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## அணுவைப் பிளந்தவர்



அவர்களது ஆராய்ச்சி, மார்க்கோனி ரேடியோவை உருவாக்கிய தத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் ரூதர்·ர்டு அதிலிருந்து வேறுபட்டு, பொருட்களின் தன்மை பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டிருந்தார். காவெண்டிஷ் லாபட்டரியில் இவர் யுரேனியத்தின் கதிர்வீச்சை ஆராய ஒரு கருவியை உருவாக்கினார். யுரேனியம் உமிழ்ந்த கதிர்வீச்சுக்களுக்கு ஆல்·பா, பேட்டா, காமா என்று பெயரிட்டார். இந்நிலையில் கனடாவின் மாண்ட்ரீல் நகரிலுள்ள மாக்கில் சர்வ கலாசாலை, பௌதீக பேராசிரியராகப் பணியாற்ற இவரை அழைத்தது. அப்போது ரூதர் போர்டுக்கு அறுபத்து ஏழு வதுதான். கனடாவில் தன் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். அவற்றை விஞ்ஞானிகள் பரிசீலித்தனர். உலகெங்கிலுமிருந்து பாராட்டுக்களும் எதிர்ப்புக்களும் வந்தன. ஒன்பது ஆண்டுகள் மாண்ட்ரீலில் பணியாற்றிவிட்டு, மீண்டும் இங்கிலாந்து திரும்பினார். மான்செஸ்டர் சர்வ கலாசாலையில், பௌதீகத் துறையில் பணியாற்ற, இது 1907 ஆம் ஆண்டு, யுரேனியம் வெளியிடும் அணுக்கதிர் வீச்சைக் கண்டதற்காக இவருக்கு 1908 ஆம் ஆண்டில் இரசாயனத்துக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டது.


உலகை வியக்க வைத்தவர்கள்

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

## அனுபவம் புதுசு





பார்ப்பதற்கு ஐரோப்பிய நாடு ஒன்றின் அதிவேகச் சாலை போன்று காட்சியளிக்கின்றது. படத்தைப் பார்த்தவுடன் உங்கள் மனதில் அந்த நினைப்பே தோன்றியிருக்கும். ஆனால் கொழும்பிற்கும் காலிக்கும் இடையில் அமைக்கப்பட்டு வருகின்ற அதிவேகப்பாதையின் தோற்றத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். நவம்பர் 19ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ள இப்பாதையூடாக 126km தூரத்தை 1 மணி 30 நிமிடங்களில் கடக்க முடியும். மேலைத்தேய நாடுகளில் அதிவேக பாதைகள் என்பது சாதாரண விடயம். ஐரோப்பிய நாடுகளில் சீறிச் செல்லும் கார்களின் வேகத்தைப் பார்த்து வியந்த தென்னிந்திய கவிஞர் ஒருவர் "தார்வீதிகளில் கார்கள் வழுக்கிச் செல்கின்றன" என்று தனது கவிதையொன்றில் கூறியிருந்தார். அந்தளவிற்கு அங்கு அவை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

அவ்வாறான அதிவேகப் பாதைகள் நம்நாட்டிலும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் அந்தக் கார்கள் சீறிச் செல்வதை நம்நாட்டிலும் காண முடியும். அதேவேளை வீதியில் பயணிப்பதற்கும் பணம் கொடுக்கும் அவலம் நம்நாட்டிலும் சகஜமாகப் போகின்றது.

## மிரட்டும் பாறை



மெக்சிக்கோ நகரின் புகழ்பெற்ற அரச சிதைவுகளில் பாம்புகளை எரிப்பதற்காக பாம்பின் தலை வடிவத்தில் அமைந்த சிறப்புமேடை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மெக்சிக்கோ நகரின் Templo Mayo சிதைவுகளிலேயே இதனை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


இப்பகுதி 15 யார் விட்டத்தில் காணப்பட்டதுடன் கி.மு.1469 இலும் கட்டப்பட்டிருந்தது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இங்கு 19 பாம்பின் தலைகள் மேடைகளாக வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதி 2006 இல் கண்டுபிடிக்கப் பட்டிருந்தாலும் தற்போதுதான் முழுதாக இந்த பாம்பு மேடைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்தப் புதைகுழியைக் கண்டுபிடித்ததால் இவர்கள் Aztec அரச பரம்பரை பற்றிய தகவல்களை சிறிது சிறிதாக ஆராய்ந்து வருகின்றனர்.

இன்னும் அகழ்ந்தெடுக்கப்படவுள்ளவை அடுத்து வரும் சில மாதங்களில் கண்டறியப்படுமென்றும் கூறப்படுகின்றது. இங்கு கொலம்பஸ் வந்திறங்கிய போது Aztec இனத்தை ஆட்சிசெய்த சர்வாதிகாரியின் உடல் எச்சங்கள் இருக்கலாமென்றும் நம்பப்படுகின்றது. மண்டையோடுகளாலான சுவரும் இப்பகுதியில் காணப்படுகின்றது.

## ஏலம்

உலகின் மிகவும் பழமை வாய்ந்ததும் தற்போதும் பாவனையிலுள்ளதுமான கார் ஒன்று ஏலவிற்பனைக்காக வந்துள்ளது. La Marquise என பெயரிடப்பட்டுள்ள இந்த கார் 1.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. 127 வருடங்கள் பழமை வாய்ந்த நீராவியின் மூலம் இயங்கும் இந்த கார் 1881 ஆம் ஆண்டு பிரான்சில் தயாரிக்கப்பட்டது. ஒன்பது அடி நீளமும் 2,100 பவுண்ட்ஸ் எடையுமுடைய இந்த கார் மணிக்கு 38 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. வாகனத்தை செலுத்துவதற்கு



தேவையான நீராவியை 45 நிமிடங்களில் இது உற்பத்தி செய்துவிடும். மேலும் இதன் மெல்லிய உலோகச் சக்கரங்கள் திடமான இறப்பர் கொண்டு சுற்றப்பட்டுள்ளன. 1914 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின்போது இந்த கார் சேதமடைந்தாலும், 1987 ஆம் ஆண்டு பிரித்தானியாவைச் சேர்ந்த Tim Moore என்பவரினால் அது மீண்டும் உபயோகிக்கத்தக்கவகையில் திருத்தியமைக்கப்பட்டது.

## அசத்தல் ஆட்டம்



யப்பானில் நடைபெற்ற ஓப்பன் ரெனிஸ் தொடரில் களம் பல கண்டு சாதனைகள் பல படைத்த ரபேல் நடாலை அதிர்ச்சித் தோல்வியடைய வைத்திருக்கிறார் இந்த அன்டி மூறே.

யப்பான் தலைநகர் டோக்கியோவில் இத்தொடரில் முதல்சுற்றை நடாலிடம் பறிகொடுத்த நோர்வே இரண்டாவது சுற்றில் மூர்க்கத்தனமாக ஆடி நடாலையே திக்குமுக்காடச் செய்தார். இதுவே மூன்றாவது சுற்றுடன் தொடர வெற்றிக்கிண்ணம் மூறேயின் கைவசமானது. 1987 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த மூறே அண்மைக் காலமாக புயலென வீசி பெடரர், நடால் போன்ற டெனிஸ் நட்சத்திரங்களுக்குச் சவால் விடுத்து வருகிறார்.

## கிளு கிளுப்பு



நிர்வாண ஆட்டம் போடுகிறேன், நிர்வாணக் காட்சி தருகின்றேன் என்று பரபரப்பு செய்திகள் வெளியிடுவதில் பூனம் பாண்டே முதன்மையானவர்.

ஆனால் இதுவரை செய்ததில்லை. ஆனால் துணிச்சலான சில நடிகைகளோ, திரைப்பட விழாக்களுக்கு வருகை தரும்போது குட்டை பாவாடை அணிந்தும், உள்ளாடையே அணியாமலும் வருகை தந்து ரசிகர்களை திக்குமுக்காட வைக்கிறார்கள். பொலிவூட் நடிகை யனகுப்தா உள்ளாடை அணியாமல் வந்து பரபரப்பை உண்டாக்கினார். இதேபோல் 16ஆவது புஷன் சர்வதேச திரைப்பட விழாவுக்கு கொரிய நடிகை Oh In Hye மேலாடை அணியாமல் வருகை தந்து அனைவரது இதயத்தையும் அதிர வைத்தார். இப்போது இணையத்தளங்களை கலக்கி வருவது இந்த புகைப்படங்கள்தான்.